# சுவாநுபவரஸமஞ்சரி

[illegible]

[illegible]

## சுந்தரஸ்வாமிகள்

அருளிச்செய்தது

திருநெல்வேலி

[illegible] சைவப்பிரகாச வித்தியாசாலை

[illegible]

வித்துவான்

கல்லிடைக்குறிச்சி

## சிதம்பரநாத

கவிராயரவர்களாற் பார்வையிடப்பட்டு

திருநெல்வேலி

ம. ள ள ஸ்ரீ

சதாசிவ திருவடியாரவர்களால்

பிரசுரஞ்செய்யப்பட்டது

[illegible] ஆகஸ்டு மீ

திருநெல்வேலியில்

ம-ள-ள-ஸ்ரீ.

அம்பலவாணக்கவிராயரவர்கள்

சு. சிவராமமுதலியாரவர்கள்

புதூர்வன்னிநாயகம்பிள்ளையவர்கள்

இவர்களது

முத்தமிழாகரஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

# சுவாநுபவரசமஞ்சரி

ஸ்ரீசிவாயபரமகுருவேநம:

கடவுள்வணக்கமும்அவையடக்கமும

எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

சகமுதற் பொருளாய்த் தெரிவதற் கரிதாய்
கனிவிலத் தேவர்கட்குந் தேவாய்
சுகவடிவான சொரூபத்தைப் பணிந்து
தொன்மறை நான்கிற்கு மெட்டா
அகம்பதிப் பொருளை யநுபவ ரசமஞ்
சரியினி லமைவுறச் செய்து
ககனம தளித்த லெனப்பெரி யோர்முன்
கழறவென் கருத்துமன் னியதே

முதலாவது

பஞ்சகோசாநுபவமுரைத்த

பிரகரணம்

அன்னமயகோசமுதலிய பஞ்சகோசவிசாரணை

ஸ்தூலதேகமாகிய இரத்தமாம்சாதிகளை அணு அணுவாகப்பிரிந்து, அந்த அணுக்களையும் அதிசூக்ஷமமான அணுக்களாகப் பார்க்கில், ஸ்தூலதேகமென்று

மல் அதின்ரேகைபோன்ற ஆகாயாநுபூதி தோன்றும். அவ்விருத்தியே அன்னமயம். அதிற்பிரதிபலித்தா விளங்கிய சைதன்னியமே அன்னமயன். அவ்விருத்தியையும் அச்சைதன்னியத்தையும் ஒன்றுபோற்றோன்றுவித்த அகங்காரமே அன்னமயகோசம் என்னப்படும்.

அவ்வகங்காரவிருத்தியை அவ்விடத்தினின்று நிஷேதிக்கில்,, அந்த ரேகையுந்தோன்றாமல் அந்த ரேகையின் ஆகாரமாகச் சலனகாரியமாத்திரமுண்டாதாக ஒருவிருத்தி தோன்றும். அவ்விருத்தியே பிராணமயம். அதிற் பிரதிபலித்த சைதன்னியமே பிராணமயன். இவ்விரண்டையும் ஒன்றுபோற்றோன்றுவித்த அகங்காரமே பிராணமயகோசம் என்னப்படும்.

அவ்விதச் சலனகாரத்தை வியாபித்ததாயும், சங்கற்பசலனரூபமாயும், அநுபவத்துக்கு வருகிற விருத்தியே மனோமயம். அதிற்பிரதிபலித்த சைதன்னியமே மனோமயன். இவ்விரண்டையும் ஒன்றுபோற்றோன்றுவித்த அகங்காரமே மனோமயகோசம் என்னப்படும்

அவ்விதமனோமயத்தைத் ததாகாரமாய் வியாபித்து, அவ்விருத்தியைத் நிச்சயமாக விளங்குகின்ற விருத்தியே. விஞ்ஞானமயம். அதிற்பிரதிபலித்த சைதன்னியமே விஞ்ஞானமயன். இவ்விரண்டையும் ஏகாகாரமாகத்தோற்றுவித்த அகங்காரமே விஞ்ஞானமயகோசம் என்னப்படும

மேற்சொன்னநான்கு கோசத்திலும் அகங்காரமானது அங்கங்கே தாதான்மியப் பட்டிருந்ததில், அபவாதத்தில் அதனின் தாதான்மியம் நீங்கி எல்லாவற்றின் நிஷேதரூபமாயும், இது அநாத்மமென்று முன் விலக்கொள்ளாமலும் இருக்கின்ற விருத்திரூபமாமே அஞ்ஞானமயம். அதிற் பிரதிபலித்த சைதன்னியமே ஆனந்தமயன். இவ்விரண்டையும் ஏகாகாரமாகத் தோற்றுவித்த அகங்காரமே ஆனந்தமயகோசம் என்னப்படும்.

இவ்விதச் சேராப்பிரூபமாயுள்ள ஆனந்தமயகோசமானது ஜாக்ரத்ஸ்வப்னசுழுத்திரூப கேவலாநுபூதியைச் சங்கற்பசத்தாரகிதமாகக்கொண்டு, தனதுஸ்பூர்த்தியற்று தானே இல்லாததாக விளங்கிநிற்க, விருத்தியின் தன் சங்கற்பாம்சத்தால் இலயரூபமான தனதுஸ்வ்விகாசத்தையடைய, அவ்வநுபூதி அகங்காரியின் விவகாரத்திற்கண்ட நாமரூபங்களுடைய வஸ்துவுக்குட்பட்டதாகக் காணப்படாததினால், அவ்வநுபூதியில் தனதுசங்கற்பாம்சத்தால் தெரியாமையையாரோபிக்க, அவ்வவஸ்தையே அஞ்ஞானநுபூதியாம்.

அவ்வஞ்ஞானநுபூதியில் ஆனந்தமயன் விவகாரத்தால் அடங்கிநின்றிடினும், விளங்கிடத் தெரிவான் அவ்வஞ்ஞானிடட் சடமானதால் தானேவிளங்கத்தகாதது. கூடஸ்தன் நிருவிகாரி ஆனதால் அவனைச் சாரவு

ம் வல்லமையுடையதாகாது. சிதாபாசனால் விளங்கியதா என்னால்; அவ்வவஸ்தையிற்றானே அவ்வாவரணநிவிருத்தி விளங்கிடவேண்டும். அங்ஙனம் விளங்கிடில்; அவ்விளங்குதல் அக்காலத்திலுள்ள அநுபவமானதால், அவ்விளங்குதல் அவ்வநுபூதியிலிருக்க ஆவரணம் சாரவல்லமையுடையதாகாது.

மேலும் விவகாரத்தால் அஞ்ஞானம் விளங்குவதால், சாக்ஷியை முன்னிட்டே விளங்கவேண்டும். அவ்வித சாக்ஷியும் சித்தாயிருக்கவேண்டும். அசித்தும் தானாகவே சித்திக்கவேண்டும். அவ்வித சித்தானதான் விருத்தியிற் பிரதிபிம்பிக்க, விருத்தியின் ஏகதேசாம்சமான சங்கற்பத்தாற்றோன்றிய பஞ்சகோசத்தையும் அபிமானித்து விருத்தியின் ஏகதேசாம்சமான சித்தத்தால் ஆலோசித்து - விருத்தியின் ஏகதேசாம்சமான புத்தியால் நிச்சயித்து - விருத்தியின் ஏகதேசாம்சமான அகங்காரத்தால் அகங்கரித்து - விருத்தியின் ஏகதேசாம்சமான இலயத்தால் இந்நான்கின் இலயத்தை, விருத்தியிற் பிரதிபிம்பித்த சிதாபாசனது விளங்குதலால், சிதாபாசன் தன்னைச் சடமாக்கொள்ள, அக்கொள்கையில் சிதாபாசன்றானே அறியானதால், அவனையும் அச்சட்டமான அஞ்ஞானம் சடா உபகாரப்படமாட்டாது. அவ்வித அஞ்ஞானமென்ற சங்கற்பம் மனதைச்சார்ந்ததாலும் சங்கற்

பிக்கப்பட்டதை அவிவேகத்தால் இஃது அஞ்ஞான
மென்ற நிச்சயத்தன்மை புத்தியைப்பற்றினதாலும்-
அவ்விதமாய் ஒன்றுந் தெரியாமல் தூங்கினேனென்
று முந்திய அநுபூதியை இழுத்துச்செல்லுகின்றது
சித்தத்தைப்பற்றினதாலும் - தன்னுள் அடங்கிய பஞ்
சகோசமுடைய மூன்றவஸ்தையையும் இம்மனம் பு
த்தி சித்தமென்ற மூன்றின் உதவியால் நான் என்று
து அகங்காரத்தைப் பற்றினதாலும் - அவ்வகங்காரம்
அன்னமயம் பிராணமயம் மனோமயம் விஞ்ஞானம
யம் ஆனந்தமயம் அஞ்ஞானம் இவைகளை, அக்கி
னி இரும்பை உள்ளும் வெளியும் வியாபித்ததுபோ
ல், வியாபித்திருப்பதால் அக்கினியானது எப்படி
இரும்புக்கு வேறோ, அப்படியே அவ்வகங்காரமும்
கோசாதி ஆறுக்கும் அப்புறப்பட்டதாகும்.

அவ்வித அகங்காரமும் சடமானதால் தானே சித்தி
க்கத்தகாதது சிதாபாசனால் சித்திக்குமென்னில்
சிதாபாசன் விருத்தியன்றிச் சித்திக்கத்தகான். இவ்
விருத்திக்கும் சிதாபாசனுக்கும் காரியகாரணம் நிரு
பிக்கத்தகாது. நிருபித்திடில்; அந்நியோந்நியாச்ரயதோ
ஷ. நேரிடும். சிதாபாசனையே தனக்குத் தானே கார
ணமெனவொப்பினால், ஸ்வாத்மாச்ரயதோஷம் வர நேரி
டும். கூடஸ்தனைக் காரணமாக ஒப்பினால்; கூடஸ்தன்
சத்தாகிய சிதாபாசனுக்குக் காரணமா, அல்லது அச

த்தாகிய சிதாபாசனுக்குக் காரணமா? அசத்தாகிய சிதாபாசனுக்குக் காரணமென்னில்; இல்லாததனை முயற்கொம்புக்கும் காரணமாகத் தெரிவான். சத்தாகிய சிதாபாசனுக்குக் காரணமென்னில்; சத்தின் பொருட்டுக் காரணத்வங் கூடாது. அவ்விக சிதாபாசன் சின்மாத்திரமாகச் சத்தா, பிரதிபிம்பமாத்திரமாகச் சத்தா? சின்மாத்திரமாகச் சத்தென்னில், நிருவிகாரகூடஸ்தனைத் தவிர சிதாபாசன் இல்லாதவனாவான். பிரதிபிம்பரூபமாகச் சத்தென்னில்; பிரதிபிம்பமானது தோன்றியது ஆனதால் இல்லாததே தோன்றவேண்டும். தோன்றினும், பிம்பத்துக்கு வேறென்னில், பிம்பமன்றி விளங்கிடவேண்டும். பிம்பமே பிரதிபிம்பமாக விளங்குகிறதென்னில். பிரதிபிம்பமாகத் தோன்றுகின்றதா, அல்லது பிரதிபிம்பமாக இருக்கின்றதா? தோன்றிடில், சுத்தி இரசதம் போல் தோன்றிய அம்சம் பொய்யெனப்படும். பிம்பமே பிரதிபிம்பமானதென்னில்; பிரதிபிம்பமாகுங்காலத்தில் பிம்பத்துக்கு நாசமும் உபாதிநாசகாலத்தில் பிரதிபிம்பத்துக்கு நாசமும் வந்து இரண்டும் சித்தியாமற் போய்விடும். மேலும் சுருதி யுக்தி அநுபவங்களால் கூடஸ்தனிடத்தில் நிருவிகாரத்தன்மை அசங்கத்தன்மை இரண்டும் அவன் சித்தானதால், சித்தமாயிருக்கின்றது. காரியோற்பத்தி சித்திக்கவேண்டுமானால்

காரணமே சங்கயாயும் விகாரியாயுமிருக்க வேண்டும். அத்தன்மை அவனிடத்திற் காணப்படாததினாலும் அவ்வநுபூதியில் ஞாதா ஞானம் அகங்காராதி அநுபவிக்கப்படாததினாலும் - ஞாதாஞானமில்லாத விடத்தில் சிதாபாசன் இல்லாதவனென்றேன் ஆனதாலும், "கூடஸ்தன் இல்லையென நிஷேதிக்கத்தகாதவன் ஆனதினாலும் சுருதியுக்தி அநுபவங்களால் கூடஸ்தனைத்தவிர காரியவஸ்து வேறு காணப்படாததினாலும் - அக் கூடஸ்தன் தன்னைக்கே அநுபவித்துக்கொண்டிருப்பதினாலும் - அவ்விதக் கூடஸ்தனை தன்னிடத்தில், ஆநந்தமயகோசமாவது அதின் தாதான்மியமாவது கிடையாது. அகங்காரத்துவத்துக்கு ஐந்து கோசத்தின் தாதான்மியமேற்பட்டிருக்கும், அருவதான கோசத்தில் தாதான்மியம் கிடையாது. அகங்காரதாதான்மியம் அருவமாகோசத்தில் இல்லாவிடில், அகங்காரியும் இல்லாதவனாவான் அகங்காரி இல்லாவிடில், அபிமானியும் இல்லாதவனாவான். அபிமானி இல்லாவிடில், அபிமானமும் இல்லாததாகவே சித்திக்கும். அபிமானமில்லாத விடத்தில், அஞ்ஞாதா முதலியயாவும் இல்லாததாகவேயாகிவிடும். அஞ்ஞான முதலியயாவும் இல்லாவிடில், சிதாபாசன் முக்காலத்திலும் இல்லாதவனாவான். இவ்வித மனனத்தால் சுருதியின் அபிப்பிராயப்படி ஆன்மாவை உள்ளபடி

தெளிய,, "நான்கு கோசத்தைப்பற்றி அகங்காரத்துக்
கு ஆனந்தமயகோசமென்றும் நிரகங்காரரூபமான
கூடஸ்தனைத் தானாக அறியாததினால், சிதாபாசனுக்
கு அஞ்ஞானமென்றும் அவ்வித அஞ்ஞானத்தில்
அவன் வியாப்தனென்றும் - சாமானிய விவேகத்தால்
அதற்குத்தகுந்த சுருதி யுக்தி அநுபவங்களினாலும்
அநுபவிக்கக், கூடஸ்தனை சாட்சியே தானென்றும்
அச்சாட்சியநுபவத்தால் ஜாக்கிராதி இரண்டவஸ்
தையும் பூஜ்யரூபவன்னத்தில் அடங்கி அம்பரன்
றுமவஸ்தையான ஜகத்சத்தாகிய ஆவரணவி
ருத்தியில் மாத்திரம் பிரதிபிம்பித்தவன் கூடஸ்தனை
தன் விஷயமாகாதாலும் - அவ்வாவரணமே விருத்தியைப்
பற்றியுற்றதானதாலும் - அவ்விருத்தி சாட்சியான
தன்னையே மூன் ஆவரணத்தோடுங் கூடியிருக்கவனை
யும்- ஞானபலத்தால் சாட்சியாய் விளங்குகின்றவனை
யும் அறிந்து இவ்வாவரணவிருத்தி சிதாபாசனாற்க
ற்பிக்கப்பட்டதேயன்றி, அவ்வவஸ்தைகளில் உள்ளப
டி ஆவரணமில்லையெனத்தெரிந்து, அவ்வாவரணம்
இல்லாததினால், சாட்சித்துமமும் இல்லையென நி
ஷேதியாமல் நிஷேதித்து,, இவ்வித சாட்சித்துமமும் சி
தாபாசனுக்கு அகங்காரதாதான்மியத்தால் வந்த சா
ட்சிஞானதாதான்மியமென்று தெரிந்து, நிர்விகார
கூடஸ்தன் மாத்திரமாய் அகம்பதத்தின் பொருளை அ

நுபவியாமலநுபவிக்க,, பஞ்சகோச சோதனையாற் கிடைத்த அதிஷ்டானப்பொருள் உள்ளபடி விளங்கி டும். அப்பொழுது அவ்வதிஷ்டானமான தன்னைத்த விர நாநாரூபமாயுள்ள ஜடகோசங்களும் மு க்காலத்திலுமில்லையென்று அதிஷ்டானமாத்திரமா ய் அநுபவியாமலநுபவிக்கப்படும்.

முற்றும்

## இரண்டாவது ஜகத்தைப்பூதப்பருப் பாகப்பிரித்தபிரகரணம்.

மிருத்தகாமரணையவர்கள் நவநீதமாயுள்ள வி ஷயவிஸ்வாசவிசேஷங்களால், எப்படி சுகக்கட்டிலேவி கின்றார்களோ,, அப்படியே டங்கிலிதேசதைப்புடைய ஆமாந்தகனால் பிரமநிஷ்டர்களும் ஆன்மாநுபவாநந் தக்கட்டிலாடுகின்றார்கள்.

எப்படியெனில் அணுவாதிமேருவந்தமான சகலஸ்தானங்களையும் பூமியின் விகாரமாக அறிந் தால், அப்பூமியும் அணுமுதல் மேருவரை அவய வாவயவியாக விளங்கவேண்டும். ஆனால் அப்புவி ன்சேர்க்கையின்றிக்கூடாது. அப்பூமியில் அப்புவி ன்சேர்க்கையை ஆலோசிக்குங்காலத்தில், பிருது வியெல்லாம் அணுப்பிரமாணமுடையதாயும் மஹ

த்பரிமாணமுடையதாயும், இருவகையாகக் காணப்படுவதால், அவ்வித பிரத்யக்ஷ இருவகையாயுள்ளபரிமாணங்கள் ஒன்று கூடாவமா, அல்லது ஒருபரிமாணமே சுபாவமா; இருவகையுஞ் சுபாவமென்னில்; அவ்விரண்டும் பரஸ்பர விரோதியானதால் சித்திக்கத்தகாது. அதில் ஒருபரிமாணஞ் சுபாவமென்னில்; மற்றொருபரிமாணம் அப்பூமியிற் காணாமலிருக்கவேண்டும். அல்லது ஒருபரிமாணங் காரணசுபாவமுடையது மற்றொருபரிமாணம் காரியசுபாவமுடையதென்னில்; அணுபரிமாணம் காரணமா, மஹத்பரிமாணம் காரணமா? மஹத்பரிமாணம் அவயவியானதால் அவைகளாலும் காரணமாகக்கூறத்தகாது அணுபரிமாணங் காரணமென்னில்; காரியமான மஹத்பரிமாணத்துக்கு ஒரு அணுபரிமாணமே காரணமா, வெகு அணுபரிமாணமே காரணமா? ஒரு அணுபரிமாணமே காரணமென்னில்; காரியமும் அணுவாகத் தெரியும். வெகு அணுபரிமாணமே காரணமென்னில்; வெகுவாக இருக்கின்ற அணுக்களுக்குச் சேர்க்கை சலமன்றிக்கூடாது. மஹத்பரிமாணத்துக்கு சலத்தின்சேர்க்கையே காரணமானால், எவ்விடத்திற் சலத்தின்சேர்க்கை பூமியிற் காணவில்லையோ, அவ்விடத்திற் பூமிக்கு மஹத்பரிமாணத்தன்மை கிடையாது. இங்ஙனமாயின்

ரிகஸ்பரிசத்தையுடைய காற்றில் அதிசூக்ஷ்மமாய் அப்
பு எப்படி அநுபவிக்கப்படுகின்றதோ, அப்படியே
மஹத்தாய் விளங்கிய பூமியிலும் அனுக்களின் சே
ர்க்கைவல்லமையாக விளங்கிய திரவசக்தியானதை
ப்பே சலமாக அநுபவிக்கப்படலாம்.

அவ்வித அநுபவத்தில் அப்புவைத் தவிர பிரு
துவியின் அணுபரிமாணங்களையுடைய வேறிருக்
கின்றதாக ஒத்திடில்; அவ்வணுக்கள் விஷயங்க
ளாக வேண்டும். விஷயீகரிக்கப்பட்ட அதுகளும் அ
ணுக்களாகத் தகாது. நிர்விஷயங்களாயின்; அத்த
லத்திலிருக்கின்றதாக ஒப்பத்தகாது. இங்ஙன
மாயின் அப்புவைத்தவிர பிருதுவி வேறில்லை யெ
னத்தெளியலாம்.

இவ்வித அப்புவே பிருதுவியாகத் தோற்றக்
காரணமேதென்னில்; தனது காரணமான அக்
கினியின் உஷ்ணசக்தியால், தனதுதிரவசக்திஸ்
தம்பிக்கப்பட்ட அவ்விதஸ்தம்பனமே, சலமே நுல
ங்கட்டியானதுபோல், பிருதுவியாகத் தோற்றிற்று.

மேலே சொல்லியபிரகாரம் எவ்விடங்களில் அ
ப்புவுக்குப் பிருதுவியாய்த் தோற்ற வல்லமை
யிருந்திருக்கின்றதோ, அவ்விடங்களிலெல்லாம்
அக்கினிக்கு அநுப்பிரவேசமிருந்திருக்கவே
ண்டும். அவ்வித அக்கினியைத்தவிர சலம்வேறு

வேறில்லையா? வேறாயிருக்குமாகில் முன் திரவசக்தியைத் தனது உஷ்ணசக்தியால் ஸ்தம்பித்ததுபோல், முழுவதையும் ஸ்தம்பித்திடத்தெரிய, அப்புவேறில்லாததாகத் தெரியும். இல்லாவிடில் பழுதையிற்றோன்றிய சர்ப்பம் பழுதையாக நசித்தபின் பழுதைமாத்திரமானதுபோல், அப்புவையும் அக்கினிமாத்திரமாகவே சொல்லவேணும்.

அவ்வித அக்கினி தனது உஷ்ணசக்தியால் அப்புவின் திரவசக்தியைப்பிருதுவியாக விளங்கத்தக்கதாகவாவது, திரவசக்தியை நீக்கிப் பிருதுவி அப்பு இவ்விரண்டையுமில்லாததாகவே செய்யத்தக்கதாகவாவது, அப்புவின் திரவசக்தியை அக்கினி வியாபிக்கவேண்டுமானால், அக்கினிக்கு சலனமன்றி அவ்வித வியாபகம் சித்திக்கத் தக்கதில்லை. அவ்வித வியாபகம் வாயுவாகச் சித்தித்திடில், பூமி சலத்திலும் சலம் அக்கினியிலுமாயடங்கிட அவ்வக்கினியும் தனது விகாரமான காரியசக்தியில்லாததினால் தனது காரணமான வாயுவாக சேஷித்திடத்தெரியும்.

அவ்வித வாயுவும் ஸம்யோகாந்தரமில்லாததினால் சலனமற்று ஆகாயமாத்திரமாகவே சேஷித்திடும். முன்சொன்ன ஜகம் உண்டாகவேண்டுமானால், வெளியை முன்னிட்டேயுண்டாகவேண்டும். அவ்வித நான்குபூதமுள்ள ஜகம் உண்டாகுமுன்னமே வெளியா

ன ஆகாயமாத்திரமாக இருந்திடில், அவ்வித அரூப
மான ஆகாயத்தினின்றும் ஆகாரமான ஸ்வரூபமு
டைய ஜகம் உண்டாயிற்றென்று சொல்லக்கூடாது.
ஆகையால் ஆகாயத்தைத்தவிர ஜகம் வேறில்லவேயி
ல்லை. இங்ஙனமாயின் தோற்றிற்றென்று சொல்லவே
ண்டும். தோற்றிடில் ஆகாயத்திற்றோற்றியதா, ஆகா
யத்திற்சீவனிடமாகத் தோற்றியதா? ஆகாயம் ஜடமா
னதால் ஜகமாகத் தானே தோற்றாது. சீவனிடமாகத்
தோற்றியதென்னில்: அவ்விதசீவன் இந்திரியரூப
ன, அந்தக்கரணரூபன, அஞ்ஞானரூபன, அல்லது
இந்திரியம் அந்தக்கரணம் அஞ்ஞானம் இம்மூன்
றுங்கூடிய அறிவா, அல்லது இம்மூன்றுக்கும் அ
ப்புறப்பட்டசுத்த அறிவா? கவது இந்திரியமே சீவன்
அவனிடமாக ஆகாயத்தில் ஜகம் கற்பிக்கப்பட்டதெ
ன்னில்? இந்திரியத்துக்கு விஷயமாகவிளங்கிய ஆகா
யம் விளங்கமாத்திரஞ்செய்யுமேயன்றி, ஆகாயமெ
ன்றகற்பனைகூட அதில் விளங்கத்தகாது; மேலும் மூ
ற்றநான்குபூதங்களை உள்ளும் வெளியும் வியாபித்த
ஆகாயத்தைத்தவிர நான்குபூதங்களும் வேறில்லை
யென்றும் நான்கு பூதங்களும் உண்டாகவேண்டு
மானால் ஆகாயமே காரணமாயிருக்கவேண்டுமென்
றும்- அரூபமான அவ்வாகாயத்தினின்றும் ரூபமு
டையஜகம் உண்டாகத் தகாதென்றும்- அவ்வாகாயத்

தைத்தவிர ஜகம்வேறில்லைவேறில்லையென்றும் - நிரூபித்ததுபோல, இவ்வாகாயமும் விளங்கவேண்டுமானல் இந்திரியமன்றிக் கூடாதானல் எவ்விடமாய் ஆகாயம் விளங்கினாலும், அவ்விடமாய் இந்திரியசத்தையும் இடைவிடாத்தன்மையாய் விளங்கவேண்டும். அங்ஙனம் இந்திரியசத்தை இடைவிடாத்தன்மையாய் விளங்கில், ஆகாயம் விளங்குதலைத்தவிர வேறாயிருக்கின்றதென்று கூறப்பட்டது.

மேலும் நாமரூபங்களெல்லாம் வாசனாரூபங்களானதால், அவ்வாசனை அந்தக்கரணத்தைச்சார்ந்ததால் இந்திரியத்தில் விளங்கிய வஸ்துக்களை, மனமானது நாமரூபமுடையதாகமாத்திரஞ் சங்கற்பித்திடும். அப்படியாகில் அவ்வித நாமரூபங்களுடையதாகவே அவ்வஸ்துக்களை இந்திரியம் விளங்குவித்திடத்தெரியும்.

இங்ஙனங் கூறியபிரகாரம் இந்திரியத்தின் விளக்கமே விரிவாய் விளங்கத்தெரிய அவ்விளங்குதலில் நாமரூபமில்லாதிருக்கையில், ஆகாயமென்ற நாமரூபம் சங்கற்பமுடையமனதாலன்றி இந்திரியத்தினிடமாய் விளங்குகின்றதாகக் காணப்படுகின்றது.

ஆகையால் இந்திரியத்திற்றோன்றியது விளங்குதலும் மனதிற்றோன்றியது நாமரூபமுமாகலாம். அவ்வித வியாபக இந்திரிய விளங்குதல்மாத்திரமாயுள்ள விளங்குதலில், மனதாற்கற்பிக்கப்பட்ட ஆகாயமென்றநாம

ரூபகதன்மை இடைவிடாமலே நிறைந்திருந்தபோதி லும், அவ்விளங்குதல் மனோவிகாரமான ஆகாயமென்ற நாமரூபத்துக்குட்பட்டதல்ல.

முன்சொன்ன பூதங்களை இந்திரியத்தைத்தவிர வேறில்லையென்று நிச்சயித்ததுபோல, இவ்விந்திரியவிருத்தியில் விளங்கிய வியாபகவிளங்குதலை மனதைத்தவிர வேறில்லையென நிச்சயிக்கத்தகாது: ஆகவே இந்திரியத்துக்கு இந்திரியமென்ற நாமரூபமாத்திரம் மனதின் சங்கற்பத்தைத்தவிர வேறில்லையெனச்சொல்லலாம். அவ்விதசங்கற்பரூபமான மனதின் விகாரத்தாற் றோன்றி இந்திரியத்தின் முன்னிலையாக விளங்குகின்ற நாமரூபங்களை, மனதின்சங்கற்பப்பிரகாரம் நிச்சயப்படுத்தும் புத்தியின்விளங்குதலென்ன. அப்பிரகாரம் ஆலோசிக்குஞ்சித்தத்தின்விளங்குதலென்ன-சொரூபமாகக்காட்டுந் திறமையையுடைய அகங்காரத்தின் விளங்குதலென்ன-இவ்வளவும்விளங்குதலும் வியாபகமாகிய இந்திரியவிளங்குதலில் மனதாற்கற்பிக்கப்பட்ட நாமரூபங்களை முன்விட்டிருந்தபோதிலும், நாமரூபம் கற்பிதமானதுபோல புத்தி சித்தம் அகங்காரம் இவைகளின் விளங்குதல் கற்பிதமாகத்தகாது: ஆனால் சங்கற்பரூபமான நாமரூபத்தைத்தள்ளிவிட்டுவந்த விகாரங்களை நிச்சய ஆலோசனை சொரூபத்தன்மை இவைகளாகத் தோற்றிய சங்கற்பா

ம்சமாத்திரம் கற்பிதமாகலாம். அப்படியே மனதுக்கு மனமென்றசங்கற்பத்தன்மை மாத்திரம் கற்பிதமாகுமேயன்றி, ஞானவிளங்குதல் கற்பிதமாகத்தகாது.

இவ்விதமனம் புத்தி சித்தம் அகங்காரம் இவ்வைளவும் சங்கற்பவிஷயங்களன்றி விளங்குதல்மாத்திரம் சத்தியமாயின், முன் இந்திரியத்தில் விளங்கிய வியாபகவிளங்குதலைத்தவிர வேறுவிளங்குதல் வேறுமுடையதாகச் சங்கற்பிக்க இடமில்லாததால், புத்திமனதிகூறுதல் அகங்காரமனைத்திலுந்தொழில்களை யுடைய மும் விளங்குதலைத்தவிர வேறில்லையென்று அநுபவிக்கவரலாம்.

சுழுத்தியில் அவ்விளங்குதலுமில்லாததினாலே, இந்திரியம் மனம் புத்தி சித்தம் அகங்காரமாகியவிவைகளற்றவிடம் அந்தக்கரணமானதால், அவ்வந்தக்கரணமே விளங்குந்தன்மையுடையதாகக்காணப்படுவதால், அவ்வந்தக்கரணத்தின் விளங்குதலைத்தவிர மேற்சொன்னதும் வேறில்லையெனின் அல்ல; அச்சுழுத்தியில் அந்தக்கரணமில்லாவிடினும் அஞ்ஞானமிருக்கின்றதாகவேயொப்பவேண்டும்: எங்ஙனமெனின், சுழுத்தியில் அந்தக்கரணமில்லாததினால் விளங்குதலில்லையென்று சொல்லவேண்டுமாகில், அவ்வந்தக்கரணமில்லையென்று விளங்குவிக்க ஒருவிளங்குதல் அகத்தியம் எவர்களும் ஒப்பவேண்டும். இவ்விதவிளங்

முதல் சுழுத்தியில் அந்ஞானரூபமாய விளங்குவதா
ல், அவ்விளங்குதலும் அந்ஞானத்தைத் தவிர வே
றாகக் காணப்படாததினாலும், சகலரும் விழித்தபின்
ஒன்றுமறியாமற் றூங்கினேனென்று சுழுத்தியின்
அந்ஞான அநுபவத்தை அநுபவமாகச் சொல்லுகிறதா
லும், அவ்விளக்கமான அந்ஞானத்தைத் தவிர
மேற்சொல்லிய அந்தக்கரணங்களுக்குச் சுழுத்தியி
லே ஆகாரங் காணப்படாததினாலும், அந்ஞானத்
தைத் தவிர வேறொன்றுமில்லையென்று வரவேண்டும். அவ்வி
த அந்ஞானமும் விளங்குதலின்றியே விளங்கவே
ண்டும். இந்தஸ்தலத்தில் விளங்குதல் ஒப்புதலாகிவிடில்
அந்ஞானமிருந்ததாகக் கூறத்தகாது. அந்ஞானமே
ன்றவியாப் விளங்குதலில்லாமைரூபமானதாம், வி
ளங்குதலிருக்குமிடத்தில் விளங்குதலில்லாமை
யாகிய அந்ஞானம் இருக்கின்றதாக ஒப்புவதற்குச்
சரியாகவிருக்கத்தக்கதில்லை, விளங்குதலிலிருந்த
தென்று வாசிக்கப்படாத யுக்தி அநுபவங்களால் ஒப்
பவேண்டும்.

இதைப்போலக் கண்ட சகலமும் ஒரேதன்மையாய்
விளங்குகின்ற விளங்குதலைத் தவிர முக்காலத்திலும்
வேறில்லையென்னில்; அந்தக்கரணமென்னும் அந்ஞா
னமென்னும் விளங்குதல்மாத்திரமாயும் மறைவாயு
முள்ள இருவகைகளுக்கும் விளங்கக் காரணமாய

தென்னில்? விளங்கியதென்றும் மறைந்ததென்றும் இருவகையாய்த் தோற்றியசங்கற்பரூபமான மனங்காரணமேயன்றி, வேறுகாரணமில்லை.

ஆனால் எல்லாம் விளங்குதல்ரூபமானால், சங்கற்பரூபமான மனமாத்திரம் விளங்குதலுக்கு அந்நியமா? விளங்குதலுக்கு அந்நியமானால், ஆகாசம்போல இல்லாததாகத்தகும். விளங்குதல்ரூபமானால்; அதனை மனமென்றுசொல்லக்கூடாது. இங்ஙனமாயின் ஜகத்தும் அஞ்ஞானமென்னவும் விளங்குதலைத் தவிர வேறுகாணப்படாததினால், விளங்குதலென்றதின்பொருள் அறிவுரூபமானதால், மெய்ச்சொன்னபடி ரகாரம் முக்காலத்திலும் அழிவைத்தவிர வேறுகாணப்படாததினால், அவ்வறிவை இங்கேயிருந்து ருவது அந்தக்கரணமென்றவது அஞ்ஞானமென்றுவது அவைகளுடன்கூடி விளங்கிற்றென்றுவது பெரியோர்களாலும் சுருதி யுக்தி அநுபவங்களால் நிரூபிக்கத்தகாததுதான். கற்பனையன்றிக்கற்பிக்கக்கூடாது; கற்பகனன்றிக் கற்பனை கூடாது. சிவனென்பது கற்பகரூபமானதால் கற்பனையில் வித்தாவான். ஆன்மாவினிடத்திலோ விகாரத்திரில்லாத்தன்மையால், கற்பியம் அதற்கேதுவான கற்பனை அதற்கேதுவான கற்பகன் என்றமூன்றுதன்மையும் முக்காலத்திலும் ஒப்பக்கூடவேகூடாது.

ஆகையால் சுத்த அறிவான அவனைச் சிவனென்னக் கடவது. அது நிர்க்குண அநுபவங்களினால் பிரமமென்னுஞ் சொல் அறிவாமென்னல். பிரமமென்ற விவகாரமும் நித்தமின்மை முக்காலத்திலுமில்லாததினால் நிருபிக்கத்தக்கதாது. சிவன் பிரமம் இரண்டு விவகாரமும் கற்பனையைச் சார்ந்ததால், சிவன் பிரமம் என்றகற்பனையிதுதான் கற்பிதம் இவ்விரண்டு விவகாரங்களிலும் கொள்ளும்படியின்றாதல் அகற்பிதம். ஆகையால் சருவ விவகாரங்களைப் பாரமார்த்திகத்திலே யதார்த்தமாரு விகற்பமாம் முக்காலத்திலுமில்லவேயில்லையென்று விசாரித்துச் சாதனைப் பண்ணாமல் நின்று விளங்கிடுவீர்கள்.

முற்றிற்று

மூன்றாவது

கடினதிரவப்பகுப்பாகப்பிரித்த

பிரகரணம்.

மேற்கண்டபடியதனைக் குறித்துச் சிலகாலத்தில் இப்படியும் ஆலோசிக்கின்றார்கள். எப்படியென்னில் பிருதுவி என்பது கடினத்தைத்தவிர வேறில்லை: கடினமென்பது ஜலவுவின் சலனவிசேஷமுடைய அக்கினியின் தகனசாமர்த்தியத்தால் ஸ்தப்தமாகிய அ

ப்புவின்றிரவகுணத்தைத்தவிர முன்சொன்ன ரூப
குணமும் பிருதிவியினுடையதே வேறில்லாததாகலா
ம். அப்புவின்றிரவகுணமும் அக்கினியின்தகனகுண
த்தாலுருக்கி தகிக்கப்படக்கூடியது, திரவங்காணப்
படாததால் அதுவும் அப்புவோடேகூட அக்கினியி
ன் தகனகுணத்தைத்தவிர வேறில்லாததாகலாம். கடி
னகுணமாயும் திரவகுணமாயும் வெண்ணெயும் நெய்யும்
அப்புவும் உஷ்ணகுணத்தைத்தவிர வேறில்லாவிடில்,
நிராதாரமாகக்கொண்டு எங்கணுமுள்ள சலனவிசேஷ
மானஸ்பரிசத்தால் திரவமாயும் கடினகுணமாயு
ம் விளங்கினதே, அவ்வாயுவின் நிராகாரஸ்பரி
சகுணமாகிரமாய்ச்சேர்ந்து முன்போலவே மூன்
றுகுணங்களும் இல்லாததாகிவிடுகின்றன.

ஆகாயம் அசங்கதார்த்தமானதால் ஸ்பரிசகு
ணரூபமான வாயுவைத்தவிர ஸ்பரிசயோக்கியமான
சங்கிரூபமுன்னு பூதங்களுமில்லாததினாலும், தனக்கு
த்தானே ஸ்பரிசமாகிற பிரத்தியக்ஷத்தினாலும், ஸ்பரி
சரூபமானவாயுவுக்கு ஸ்பரிசத்தன்மையாகிய வாயுவினா
ல் ஆகாயத்தன்மையைத்தவிர வேறில்லாததாகிவிடும்.

அவ்விதம் ஆகாயமும் சப்தகுணத்தைத்தவிர வே
றில்லாததின்றில், ஸ்பரிசமில்லாவிடத்தில் சப்தமுண்
டாகக்காரணமில்லாததினாலும் நிராகாரமானதினாலு
ம் வியாபகமே ஆகாரமென்றிடில்; இந்திரியவியாபக

நமைத்தவிர வேறொன்றிருக்கின்றதாக நிரூபிக்க உபகாரப்படாதிருந்தாலும், அதற்குவெளித்தன்மையே ஆகாரமென்று சொல்லப்பட்டிருந்தால், அவ்விதவெளித்தன்மையும் ஸ்பரூபமானதைத்தவிர வேறுகாணப்படாதிருந்தாலும், அதற்கு இந்திரியவியாபகத்தைத்தவிர வேறு தன்மை ஏற்படுத்தக்கதல்ல.

நிஷ்களமாகின் பஞ்சகுணங்களோடு பஞ்சபூதங்களுமில்லாதிருந்தால், சகலகுணங்களும் சகலஸ்தூலதேகங்களோடுகூட இல்லாததாகவேயும்; ஸ்தூலதேகமுதலியசகலகுணங்களுமில்லாவிடில், பஞ்சேந்திரியங்களும் விஷயங்களைவல்லமையிலைல், இந்திரியங்களுண்டென்கிறதையுமுடைத்திருப்பதிருந்தாலும், ஸ்தூலதேகமென்கிற சிந்திக்கமாட்டாதிருந்தாலும், நிர்விஷயங்களையும் நிராதாரங்களாயுங்கொண்டு பிணைத்தவிர வேறில்லாததாகவேயறியும்.

மனமென்பது வாசனைகூடினதால் வாசனையென்பது இந்திரியங்களின் வியாபாரங்களையும் விஷயங்களையுந்தவிர வேறில்லாதிருந்தால், இந்திரியங்களும் அதின்வியாபாரங்களும் அதின்விஷயங்களும் மேற்சொன்னபடி இல்லாவிடில், வாசனையும் இல்லாததாகவேயிருக்கும்; வாசனை இல்லாவிடில் மனதுமில்லாததாகவேயிருக்கும்; மனமில்லாவிடில், புத்தி, சித்தம் அகங்காரம் இம்மூன்றும் திரியில்லாததீபம் போல்

இல்லாததைப்போலக்காணப்படும்.

இந்தநான்குமில்லாதவிடம் சூனியமென்றுவது, அறியுந்தன்மையில்லாததினால் அஞ்ஞானமென்றுவந்து நிரூபிக்க உபகாரப்படத்தக்கது. சூனியமென்றால் ஜகமுதல் அகங்காரமுள்ளவையாகிய யாவையும் சூனியமா, அல்லது இவைகளைச் சூனியமென்று நிரூபிக்கின்றஅறிவே சூனியமா? அறிவைச்சூனியமென்றது சூனியமென்று நிரூபிக்கில்; அவைகளெல்லாம் முக்காலத்திலுமில்லாததினால், எக்காலத்திலுமில்லாத சசவிஷாணத்தை இல்லையென்கிறவிகாரம் உபகாரப்படாததுபோல உபகாரப்படத்தக்கதல்ல.

அதையறிந்தஅறிவைச் சூனியமென்றிடில்; கண்ணொன்றி விஷயந்தித்தியாததுபோல, சூனியமென்றவிஷயமும் அறிவையன்றிச் சித்தியாது. சூனியமும் அறிவும்இருப்பதாகவொப்பிடில்; முக்காலத்திலுமில்லாததே சூனியமானதால், இல்லாததை இருக்கின்றதாக எப்படி ஒருக்காலும் ஒப்பக்கூடாதோ, அப்படியே இரண்டாம்வஸ்துவை எதிரிடாது ஏகத்தன்மையாயிருக்கின்றஅறிவையும் இருக்கின்றதாக ஒப்பக்கூடாது.

அப்படியே அவ்விடத்தில் அஞ்ஞானமிருக்கின்றதாகவொப்பிடில்; சூனியம்போலவே அறிவன்றியொப்பத்தகாது. அறிவு அஞ்ஞானம் இரண்டுமிருப்பதாகவொப்பினல்; அவ்வஞ்ஞானம் அறிவைமறைக்கின்றதாகக்

தை மறைக்கின்றது? அறிவையென்னில்; கண்ணின்றி ஒருவன் சித்தியாதது போல், அறிவின்றிச் சித்திக்கத்தகாது. சுகத்தை மறைக்கின்றதென்னில்; முக்காலத்திலுமில்லாத சுகத்தை எவ்விதமாக மறைக்குமென்பது கூடும். மேலும் ஞாயம் அஞ்ஞானம் என்றிரண்டு தன்மையும் சங்கற்பத்தாற் றோற்றவேண்டுவதால், முன்சொன்னபிரகாரம் சங்கற்பத்தன்மையுடையமனம் முக்காலத்திலுமில்லாவிடில், இதுகளுமில்லாததாகவே சித்திக்கும். அப்படியே அறிவையுஞ் சொல்லக்கூடாதோவென்னில்; அறிவே இல்லையென்று சொல்லவேண்டியிருப்பதால், அறிவுத்தன்மை அறிவுக்கொன்றில் வேறொன்றிற்குங்கூடாததினாலும், தன்னைத்தவிர பற்றொருபொருள் தன்னுடத்தில் முக்காலத்திலுமில்லாததினாலும், தன்னைத் தானறியத் தன்னிடத்தில் திருசியாம்சமில்லாததினாலும், தானேகேவலித்திருக்கின்றது. முக்காலத்திலும் தானேதானாய்ச் சித்திக்க, எல்லாம் தானேதானென்று அநுபவியாமுடையவர்க்க ஞானத்துப்ரவேசத்தராய் அப்படியே ஞானக் தக்கடலாகிவிடுகின்றார்கள்.

முற்றிற்று.

௫

## நான்காவது.

## சப்தாதிகுணப்பகுப்பாகப்பிரிந்த

## பிரகரணம்.

இந்தப்பிரகாரமாயுநிர்மலகாலத்தில் ஆகிலாதிக் கின்றார்கள் பிருதுவியில் சப்த ஸ்பரிச ரூபரச கந்தம் இவ்வைந்துங்காணப்படுவதால், இவைகள் பஞ்சபூதங் களின்குணமாயிருப்பதால், மற்றப்பூதங்களிலும் அவ ற்றின்குணங்களும் இப்பூதமும் இக்குணமும் எ ன்னமாய்ச்சேர்ந்திருக்கின்றதென்றால், எல்லாக் குணமும் எங்கும் இடைவிடாத்தன்மையாகக்காணப் படுவதால் எங்குமெல்லாப்பூதமாயிருக்கவேண்டும்.

அதில் காரணமுள்ள இடங்களெல்லாம் கந்தமாகக் காணப்படுவதால், கந்தத்தைத்தவிர்த்தவிடமேயில் லாதகிறதல் இவ்வைவருணைத்தொடங்குடப் பிருதுவி யுமில்லாத்தாகவேசித்திக்கும். அவ்விதகந்தம் மண் பிருதுவியில் இடைவிடாத்தன்மையாகக்காணப்பட் டதால், அவ்விதப்பிருதுவியில் இடைவிடாத்தன்மை யாகக்காணப்பட்ட இரசமும் கந்தத்தைத்தவிர்ப்பிரு துவியில்லாவிடில், கந்தசத்தையில் இடைவிடாத்தன் மையாயிருக்கவேண்டும்.

இரசமென்பது நாக்கினை நுகாரணமானசலத்தின் குணமானதால், பஞ்சிராணாகத்தாம் தன்னைத்தவிர காரணம் வேறொன்றும் பிறருவி இவ்வளவுமில்லை யெனவிளங்கிநிற்க, நிராதாரமாகக்கொண்டு தன்னை புன்னைவிட்டு வெளியும்வியாபித்திருந்த இரசமாத்திரமாக வெளிசெய்கிறதும். அவ்விதஇரசம் சலத்தில் எவ்விடத்திலும் கலந்திலைவருமைம் சிறப்பிற்சட்டெங்கிருச்சி இவை களொன்றும் இடைவிடாத்தன்மையாகக்காணப்படுவதால், அவைகளைக்கொண்டு நாக்காலேத்தில் இரவன்பிச சிதங்களை யாரும் சிதமன்றிச்சுக்கிலவகையும் கிடையாது சுக்கிலவகைமன்றி இரசங்கிடையாது: இரசமன்றி அப்புக்கிடையாது: அவ்விதஅப்பு இரசத்தைத்தவிர வேறொன்றுமில்லை; அவ்விதஇரசத்தைவெளிப்படுத்துவது சித்தமென்றுவ நகைப்பன்று வருசொல்லத்தகாது. ஆகவே அவை இரசத்தைத்தவிர இல்லாததையாகவேவைத்திருக்கும்; அவையில்லாவிடில், தானும் நிராதாரமாகக்கொண்டு இல்லாததாகவேசித்திக்கசும்.

அப்படியே அக்கினியும் நிராதாரமாகக்கொண்டு ரூபமற்றுத் தனதுகாரணமானஸ்பரிசரூபவாயுவிலடங்கி ஸ்பரிசமாத்திரமாயச்சேஷித்திரும். அவ்விதவாயு அரூபமானதால், ரூபமற்றதாகக்கொண்டு, இல்லாததாகவேவிளங்கியும்; அதற்கு ரூபமில்லாவிடினும்ஸ்பரி

சத்தன்மையாயிருப்பதால், இல்லையென்ன நிரூபிக்கத்தகா
தென்னில்? அதற்கு அவ்விதப்பரிசமுண்டோ, அல்ல
து சுபாவமோ? குணமென்னில்: அரூபத்துக்குப்பரிச
மில்லையாது. சுபாவமென்னில்; மெய்ச்சொன்னபடி
காரியபூதங்கள் முக்காலத்திலும் நித்தியமாதலாலும்,
காரணபூதமான ஆகாயம் நிராகாரமானதாலும், சம்ப
ந்தரஹிதமாகக்கொண்டு ஸ்பரிசமெப்படியானாலும் வா
யுவிருக்கின்றதாகன்னமாகப்பட்டது. ஸ்பரிசமில்
லாவிடில் வாயுவில்லாததினால் ஸ்பரிசமன்றிச் சப்தமில
ளங்காது. சப்தத்தைத்தவிர ஆகாயத்துக்கு வேறொரு த
ன்மையில்லாதிருந்தால், ஆகாயமுமில்லாததாகவேகா
ணப்படுகின்றது. அதற்கு வினாதல் சுபாவமும் சப்தம்
குணமுமாயிருக்கும்போது இல்லையென்னதன்மையா
கச்சொல்லக்கூடுமென்னில்; ஸ்பரிசமில்லாதிருந்தால்
சப்தமுற்பக்கூடாதென்றது, வாயுவின்ஸ்பரிசத்தை
ப்பற்றியதற்கேயன்றி, இந்திரியத்துக்கும் ஆகாயத்துக்
கும் சம்பந்தம் ஏற்கூடாது. சம்பந்தங்கூடுமாயின்
சப்தம் விளங்கத்தடையில்லையென்னில்; இந்திரியம்
ஆகாயம் இவ்விரண்டுடன் சம்பந்தத்தால் சப்தம் உற்ப
விக்கின்றதா, அல்லது விளங்குகின்றதா? இல்லாதச
ப்தம் உற்பவிக்கின்றதெனின், இல்லாதரூபமும் உற்ப
விக்கின்றதெனவரும். விளங்குகின்றதெனின்; விஷ
யமாயிருந்திடில் விளங்கவேண்டும். இந்திரியமுள்ள

தைவிளங்குவிக்குமேயன்றி இல்லாததைவிளங்க
வையாது.

முன்சொன்னபிரகாரம் ஆகாயதத்துவமேபஞ்சபூ
லொருதிலைல் சப்தமுமில்லாததெனவேதாற்பரியம்.
வெளியென்பது நான்குபூதங்களின் ஆதாரத்தைவிட்
டிருக்கிறதால், ஆதாரத்தைப்பாராதாக்குமாக நிருணை
யிக்கக்கூடாது. இங்ஙனமாயின் பிருதிவிமுதல் ஆகா
யம்வரை ஆகியபூதங்களெல்லாம் ஆதாரமாதாரத்
தமாயினதால், ஆதாரமில்லாமலிருக்குந்தன்மையால்
வந்த இந்திரியமென்றவிவகாரமும், ஆதாரமாகவே
யிருக்கவேண்டும். இந்திரியமென்றதன்மைவிஷயத்
தால்வந்ததா, இந்திரியத்தால்வந்ததாமனதாலேவந்ததா?
விஷயத்தாலென்றால்; விஷயம் ஆதாரமானதால் சித்
தியாது. இந்திரியத்தாலென்றால்; விஷயதிரக்கணவல்
லமைசித்தித்திடல் இந்திரியமென்னப்படும். விஷய
மில்லாவிடினும் விஷயங்களைக்கிரகிக்கின்ற இந்திரிய
மிருக்கின்றதாகவேண்டும். தன்னைத்தான்விஷ
யமில்லாததினால், தானேஇந்திரியமெனவிருக்காது.
விளங்காப்பொருளை இருக்கின்றதாக ஒப்பக்கூடாது.
மனதாற்கூடுமென்றால்; மனமென்பது சங்கற்பரூப
மானதால் இருக்கின்றதைச் சங்கற்பிக்கின்றதா இல்
லாததைச்சங்கற்பிக்கின்றதா? இருக்கின்றதைச்சங்கற்
பிக்கின்றதென்றால்; இந்திரியமுதற்சகலமும் ஆபா

வபதார்த்தமானதால், இவைகளைச் சங்கற்பிக்கின்ற தென்றுகூறக்கூடாது. இல்லாதவைகளைக் கற்பிக்கின்றதென்னில்; ஒருகாலத்தில் வந்தியாபுத்திரனையுங் கற்பிக்கவரும். மேலும் மனதாற்சங்கற்பிக்கவேண்டுமானால் சாக்கிரம் சொப்பனமென்ற இரண்டவஸ்தைகளிலும் இந்திரியவாசனையில்லாததாகக்கொண்டு கற்பிக்கவேண்டும். இதனில் முன்னமே இந்திரியங்களை அபாவரூபமாகக்கூறினதாற்றான். அங்ஙனமாயின் மனதாற்கற்பித்துக்கொண்ட பிறவியந்தகன் திருஷ்டியில் ரூபம்விளங்குதல்போல, இந்திரியவாசனையில்லாதமனதுக்கு சொப்பனபதார்த்தங்கள் விளங்கித்தெரியும்.

இப்பிரகாரஞ் சாக்கிரம் இந்திரியத்தோடுஞ் சொப்பனம் மனதோடுங்கூடிவிளங்காவிடில், முன் இந்திரியம் அபாவமாகக்கூறப்பட்டதுபோல, மனதும் அபாவமாகவேசித்திக்கும்: மனமுதற்சகலமும் அபாவமாகச்சித்தித்திடில் விருத்தியில்லாததன்மையால் ஞானமுமில்லாததாகவேசித்திக்கவேண்டும். ஞானமில்லாதவிடத்து அந்ஞானமானதால், அந்ஞானமாத்திரமாயிருக்கின்றதாகவும்வேண்டும். இருவிதமாகவிருப்பக்கத்தெரிய, "ஞானம் அந்ஞானமென்ற இவ்விரண்டுவிவகாரமும் மேற்சொன்னபடிமனமில்லாததன்மையால், இன்னமாகக்கற்பிக்கக்கூடும். ஞானமில்லா

விடம் அஞ்ஞானமென்றால், ஜகத்ஞானபாவமா அ
றிந்திடான ஞானபாவமா? ஜகத்ஞானபாவமென்றால்;
ஜகம் முக்காலத்திலுமில்லாததினால், இருக்கிறதென்ற
அபிமானமாதலால், ஜகத்ஞானமேயில்லாவிடில் ஜகத்
ஞானபாவ மிருந்ததென எவ்விதமாகக்கூறத்தகும்.
அறிந்திடான ஞானபாவமிருந்ததெனின் பாவமாயா
கினும் அபாவமாயாகினும் ஒன்றைப்புலனாக்கவேண்
டியதாகும், ஞானமன்றிவிளங்கத்தக்கதா: அவ்விதஞா
னத்தைப் பாவாபாவ விகாரங்களுக்கு அதீதமாக
வெளிப்படவேண்டும். பாவாபாவ விகாரங்களுக்கு
அதீதமாகவிளங்கிய ஞானத்தை இல்லையென்றுரை
க்கத்தகாது: இராக்கின்மையதனை நிராகரிக்கவுந்தகா
து: இராக்கின்மைதன்பவிராத்தியும் இல்லையென்
றஅபாவவிராத்தியும் சங்கற்பரூபமான மனத்தைச்சார்
ந்ததால், புன்மைமனமில்லாததாகச் சித்தித்தபோ
லபாவாபாவவிகாரமு மில்லாததாகச் சித்தித்திடும்.

இங்ஙனஞ் சித்தித்திடில் முக்காலத்திலும்பாவா
பாவாதீத அறிந்திடானஞானத்தைத்தவிர வேறுஜகமி
ல்லாததினால், "ஜகமிருந்திடாசசனென்றும் ஜகத்பி
மானி சீவனென்றும் விவகாரம்வரக்கணக்கில்லை: சீவே
சபேதம்முக்காலத்திலுமில்லாவிடில், அவைகளின் ஐக்
கியமாகிய பிரமபதவியென்றவிவகாரமும் மிகவுஞ்சி
த்திக்கத்தகாததாதனைத்தெளிந்து அறிவாய்விள

ங்கிடத்துக்கொள் விசித்திரமெனப்பிரமானந்தபரவசர்களாய்விளங்குகின்றார்கள்.

மூன்றாவது

ஐந்தாவது

கிரியாசத்தியநுபவகாரித்த

பிரகரணம்

அநுபவிக்கப்படுகின்ற இந்தக் கர்மப்பந்தியாசருடையகாரியவஸ்துவாகச்சாலப்படுகொள், காரியமென்று ஞ்கிருகிறென் எப்படியெனப்படும் கிருதிறென் எப்படில் இச்சைஞானசத்தியென்றிக்கிறது கிரியாசத்தியாது எங்ஙனமெனில் ஞானமூலமாகவுள்ளாக்கப்பட்டகடம் மூலமென இச்சாஞானம்பொருந்திய கிரியையன்றியெப்படிசித்தியாதோ, அப்படிபோசசீவனுடைய இச்சாஞானக்கிரியையன்றி கட்டித்திக்கப்படாது. இங்ஙனமாயின் சகலவுகத்தையும் கிரியாசத்திமாத்திரமாகப்பிரிக்க, இச்சாசத்திமாத்திரமாய்த்தனித்துப்பொருந்தில்லாததாய்க்கொண்டு ஞானசத்திமாத்திரமாய்ச்சேவித்திடும் ஞானசத்திமாத்திரமாய்ச்சேவித்திடில், மேற்சொன்னசகலத்தையும் இச்சாகிரியா

வினங்களாகக்கொண்டு ஞானசந்நிமாத்திரமாகவே சேஷித்திடும். அப்பொழுது ஞானசக்தியும் நாமரூபத்தோற்றமுதலற்று ஏகாகாரமாய் அகண்டமாகவிளங்கிட்டுக்கொள்ளும்.

அதெப்படியாதுமென்றால்? நானாவருணங்களால் சித்திரமுடையதாய் விலையேறப்பெற்ற ஒரு சுக்கவஸ்திரம் நூலாகப்பிரிக்கப்பட்ட வஸ்திரமென்கிறபொழுது நூல்மாத்திரமாய்ச்சேஷித்து, அந்தநூலும்பிரிக்கப்பட்டப் பஞ்சுமாத்திரமாய்ச்சேஷித்து, அப்பஞ்சும்பிரிக்கப்பட ஆகாயமாத்திரமாய்ச்சேஷித்து அவ்வாகாயமும்பார்வையில்விளங்கிப் பார்வையைத் தவிர எப்படிவேறில்லாததாக ஆகிவிடுமோ, அப்படி யோசகலமுகமும் பார்வையுமான ஞானத்தைத்தவிர இல்லாததாகவே விளங்கிடும்.

அவ்விதஅகண்டமாய் விளங்கும்பார்வையாகிய ஞானமும், நாமரூபங்களாகத்தோற்றியஜகத்தை முழுவ்விட்டுவந்த சிவேசபேதமில்லாததாகவேகொண்டு விளங்கிடத்தெரியும். அவ்விதஞானத்துக்குச் சிவேசபேதத்தோடுங்கூட ஜகமுக்காலத்திலுமில்லாவிடிற் பார்வையெனும் ஞானதருமமும் ஞானத்தைத் தவிர வேறில்லாததாகவே சித்தித்து, ஞாதுரு ஞான ஞேயமற்ற சுத்தஅதிஷ்டானஞானமாத்திரமான தானேமாத்திரமாகவே விளங்குகின்றதென ஆனந்த உற்சிதம்

கொண்டு அப்படியே ஆனந்தக்கடலாடி விடுகின்றார்கள்.

முற்றிற்று

## ஆறாவது

## ஜகத்தை இதம்விருத்தியாற்பிரிக்கு

## பிரகரணம்

நானாநாமரூபங்களுடன் அநேகப்பிரமாண்டகோடிகளாய் விளங்குகின்ற இந்தஜகத்தை, ஞானவிசேஷத்தால் இதுஜகமென்று விஷயீகரிக்கத்தில், இது ஜகமென்றஞானத்தில் இதுவென்றும் ஜகமென்றும் இரண்டுஞானமொன்றாய்க் காணப்படுகின்றது.

அதைச்சோதிக்குங்காலத்தில், ஜகதர்மத்தை அவச்சேதமாகவுடைய ஜகத்தென்றவிசேஷியஞானத்தோடும், இதின்தர்மத்தை அவச்சேதமாகவுடைய இதுவென்றவிசேஷியஞானத்துக்கு, ஒருவிருத்தியிற்சமானவிருப்புக்காணப்படுவதால், இரண்டுஞானத்துக்கும் ஒருவிருத்தியே அதிகரணமாகின்றது.

அவ்விதஇரண்டுஞானத்தில், இதம்விருத்தியாரூடஞானத்தில் ஜகவிருத்தியாரூடஞானம் விளங்குவதால், கிளிஞ்சிலிற்றோன்றிய இதுரஜதமென்றஞானப்

இருவகையாய்த் தோற்றினும், இதுவென்ற ஞானம் முன் விளங்குகின்ற சுத்தியையும் தோற்றுகின்ற வெள்ளியையும் அவலம்பித்து எப்படி விளங்குகின்றதோ, அப்படியே இது ஜகமென்ற ஞானத்தில் இதுவென்ற ஞானம் தோற்றிய ஜகத்தையும் அதின் அதிஷ்டானப்பொருளையும் அவலம்பித்தே விளங்கவேண்டும்.

இங்ஙனமாயின் சுத்தியில் ஆரோபிக்கப்பட்ட ரஜத ஞானத்தில், ரஜததர்மமாத்திரம் நிஷேதிக்கப்பட, அவ்விதரஜதஞானம் இதுவென்ற ஞானமாத்திரமாய்ச் சேஷித்து, அதுவே சுத்திஞானமாய் விளங்குவதுபோல், ஜகத்தர்மம் நிஷேதிக்கப்பட ஜகத்தர்மத்தை உள்ளும் வெளியும் வியாபித்த இதுவென்ற ஞானமாத்திரமாய்ச் சேஷித்து, இந்த ஜகத்துக்கு அதிஷ்டானமான ஞானமாத்திரமாய் விளங்கிடத் தெரியும். அவ்வித அதிஷ்டானத்தை சுருதியுக்தி அநுபவங்களால் சோதித்துப்பார்க்கப், பிரஞ்ஞையைத் தவிர வேறு காணப்படாததினால், பிரஞ்ஞையென்பது ஞானசுபாவமானதால், ஆகாயத்தில் ஆகாயபேதம்போல் ஞானத்தில் ஞானபேதம் ஒப்பத்தகாது: பேதம் ஒத்திடில் விசேஷம் வேண்டும். ஞானமோ நிர்விசேஷம்.

இங்ஙனமாயின் இது சுத்தியென்ற ஞானத்திற் சுத்தி ஜடமானதால், நிருபியமாகிய சுத்திகாதர்மத்தோடும் விளங்கிய, இதுசுத்தியென்ற ஞானம்

தர்மதர்மியாகக் காணப்பட்டிடினும், இதுஜகமெ
ன்றஞானத்தில் ஜகதர்மம் நிஷேதிக்கப்பட இதுவெ
ன்றஞானம் அகண்டவியாபகமாயிருந்து போதினும் நி
ர்விஷயமாகக்கொண்டு நிர்விசேஷ சைதன்யமாக்கிரமா
ய்ச்சேஷித்து, ஸ்வாரசிகமாய் ஜாதியகதபேதரஹித அதிஷ்
டானசின்மாத்திரமான, நாமாகவேவிளங்குகின்றதெ
னமகாவுச்சரியத்தோடுங்கூட நிஸ்தரங்கசமுத்திரம்
போல், ஸ்வாத்மானந்தமாத்திரமாகவேயாகின்றார்கள்.

முற்றிற்று

ஏழாவது

ஜகத்தைநாமரூபமாகக்கற்பித்த

பிரகரணம்

நாமரூபாகவிளங்குகின்ற இப்பிரபஞ்சம் சுபாவ
மாகவிளங்குகின்றதா, அல்லது சிவஜீவர்களால் விள
ங்குகின்றதா, பிரபஞ்ச லக்ஷணமென்ன, சிவலக்ஷ
ணமென்ன, ஜீவலக்ஷணமென்ன? பிரபஞ்சமென்பது
நாமரூபாத்மகமென்றால்; பஞ்சபூதத்தின் நாமரூபங்க
ளா, அல்லது தேவ-மனுஷ-பசு-பக்ஷி-விருக்ஷ-
கோபுர-அட்டால-பட்டண-கிராம-கிரக-கட-பட
பதார்த்த நாமரூபங்களா, அல்லது பௌத்தாகாரரூபங்க
ளா? பஞ்சபூதங்களின்நாமரூபமே ஜகத்தின்நாமரூப

மென்னில்; பஞ்சபூதங்களைத்தவிர ஜகத்து இல்லாத
தாகிவிடும். தேவாதிமடாதியந்தமான நாமரூபங்
களே பிரபஞ்சத்தின் நாமரூபமென்னில்; பஞ்சபூதங்
களும் இல்லாததாகக்கொண்டு ஜகத்தும் இல்லாததாய்
விடத்தெரியும். மொத்த நாமரூபமே ஜகத்தின் நாமரூப
மென்னில்; ஜகத்திலெங்கும் பஞ்சபூதங்காணப்படுவ
தால், இந்த நாமரூபங்களாலந்த நாமரூபங்களும் அந்த
நாமரூபங்களாலிந்த நாமரூபங்களும் விரோதப்பட்டு
இரண்டு நாமரூபங்களையுஞ் சித்தியாமல், பிரபஞ்சமுமி
ல்லாததாகவே சித்தித்திடும். அங்ஙனம் பிரபஞ்சம் நாம
ரூபமில்லாததாகக்கொண்டு தானுமில்லாததாகச் சித்தி
த்திடில், அதை விளங்குவிக்குஞ் சீவேஸ்வரர்களுமில்
லாதவர்களாகவே சித்தித்திடுவார்கள்.

அதெப்படியென்னில் சீவரூபது ஞானேந்தி
ரியகர்மேந்திரியமனோ புத்தி சித்த அகங்கார பிராண
அந்தரான்மா இவற்றோடுங்கூடி விளங்கிய சைதன்னிய
மானதால், ஞானேந்திரியமென்பது பஞ்சபூதத்தின் சத்
துவகுணத்தைத்தவிர வேறில்லாததினால், ஞானேந்திரி
யத்துக்கு சத்துவகுணமானது சுபாவமா, ஞானேந்
திரியமென்றதோ சுபாவமா, அல்லது இவ்விரண்டுங்கூ
டினது சுபாவமா? சத்துவகுணம் சுபாவமென்னில்;
இந்திரியங்கள் இல்லாததாய்விடும். இந்திரியங்களென்
ற நாமரூபம் சுபாவமென்னில்; பஞ்சபூதத்தின் சத்துவ

குணத்தைத்தவிர வேறாகவேண்டும்; வேறாகக்கூறிடிற் சொரூபமில்லாததாகக்கொண்டு இல்லாததாகவேசித்தித்திடும். இரண்டுங்கூடியதென்னில்; பரஸ்பரவிரோதமாகக்கொண்டு ஒன்றுஞ்சித்தியாது. கன்மேந்திரியமும் அப்படியே.

இங்ஙனமாயின் மனோபுத்திசித்தம் அகங்காரம் நான்கும் அந்தக்கரணத்தைத்தவிர வேறில்லாததினால், அந்தக்கரணமென்பது சமஷ்டிபஞ்சபூதத்தின்சத்துவாம்சத்தைத்தவிர வேறில்லாததினால், மேற்சொன்னபிரகாரம் அந்தக்கரணமுஞ் சமஷ்டிபஞ்சபூதத்தின்சத்துவாம்சமும், நாமரூபங்களில்லாததாகக் கொண்டு முக்காலத்திலும் இல்லாததாகவே சித்திக்கவேண்டும்; அந்தக்கரணமும் சமஷ்டிபஞ்சபூதத்தின் சத்துவாம்சமும் இல்லாவிடில், அஞ்ஞானமும் இல்லாததாகவே சித்தித்திடும்.

எங்ஙனமென்னில்; அஞ்ஞானமென்பது ஞானாபாவமா, ஞானத்தைமறையாநின்றதமோகுணமா? ஞானாபாவமென்னில்; அஞ்ஞானம் விளங்கத்தகாததாகக்கொண்டு இல்லாததாகவேசித்தித்திடும். ஞானத்தைமறையாநின்றதமோகுணமென்னில், தமோகுணத்தால் ஞானம்மறைத்திடப்படில், தமோகுணம் எவ்விதமாய்த் தானேவிளங்கிடும். கண்ணைமறைக்கின்ற இருளுங் கண்ணும்போலவிளங்கிடுமென்னில்; இருள்

விஷயங்களைமறைக்குமேயன்றிக், கண்ணைமறையாது: கண்ணைமறையாவிடினும் கண் இருளைவிளங்குவிப்பதுபோல, தமோகுணமாகிய அஞ்ஞானத்தை ஞானம் விளங்குவிக்கட்டுமேயென்னில்? இருள்ஜட நிஷ்டமானதாற் கண்ணால் விளங்கிடத்தெரியுமேயன்றிக், கண்ணிலிருந்தே விளங்கிடத்தெரியாததுபோல, அவ்விடத்தில் தமோகுணஞ்சித்தால் விளங்கவேண்டுமானல், எந்தவிடமாயாயினுமிருந்து சித்தால் விளங்கவேண்டும். பஞ்சபூதநிஷ்ட தமோகுணமென்னில், பஞ்சபூதமே இல்லாவிடத்துத் தமோகுணம் எவ்விதமாகச் சித்தித்திடும். நிஷ்டமென்பது இருக்கை. அவ்விதபஞ்சபூதத்திலிருக்கை இல்லாவிடமெனக்கொள்க.

மேலும் அவ்விததமோகுணம சுபாவமாகவே சித்தைமறைக்கும் வல்லமையுடையதா? அல்லது சித்தினுதவியாற் சித்தைமறைக்கும் வல்லமையுடையதா? சுபாவமாகவேமறைக்கும்வல்லமையுடையதென்னில், அவ்வித வல்லமை ஜடமா அல்லது சித்தா? ஜடமென்னில், அதற்கு விளங்கும்வல்லமையேகிடையாது. அங்ஙனமிருக்க, சித்தைமறைக்குந்தன்மை எங்ஙனங்கூடும். சித்தென்னில், சித்தைச்சித்து ஒருக்காலுமறைக்கத்தகாது. மேலும் சித்தைத்தவிர, வேறு அஞ்ஞானத்தின் வல்லமையாகச் சித்திக்கிறதாயொத்

கிடில், சூரியனது ஒளியைத்தவிர இருளுக்கும் தனிப்பட ஒருஒளியிருப்பதாக ஒப்பவேண்டும். அங்ஙனம் ஒத்திடில், இருள் சித்தியாகுமேபோல் தமோகுணமும் இல்லாததாகவே சித்திக்கிறிடும். தமோகுணமாகியது ஞானமுதல், ஜகம்வரையிலும் அனந்த முக்காலத்திலுமில்லாவிடில், அந்தஞானம் அந்தக்கரணம் இந்திரியங்கள் இவற்றோடுங்கூடி, சீவன் ஜகத்தை விளங்குவித்தானென்றும், வந்தியாபுத்திரமஹாராஜனாகனுக இராச்சியாதிகாரஞ் செய்தானென்பதுபோலாகும்.

இங்ஙனமாயின் ஜகமுதல் அந்தஞானம்வரை சீவனோடுங்கூட முக்காலத்திலும் இல்லாவிடினும், இவற்றின் அதிஷ்டானமாய்நின்ற சுத்தஅறிவை இல்லையென்று நிஷேதிக்கத்தகாது. பழுதையிற்றோன்றியும் விளங்கியும் மறைந்தும் விளங்கிய சற்பம்பழுதையைத்தவிர முக்காலத்திலும் இல்லாவிடினும் பழுதையை இல்லையென்று எப்படிநிஷேதிக்கத்தகாதோ, அப்படியே அதிஷ்டானஞானத்தையும் நிஷேதிக்கத்தகாது.

அதிஷ்டானஞானத்தைத்தவிர முக்காலத்திலும் வேறுஇரண்டாம்வஸ்து இல்லாவிடில், இல்லாதஜகத்தை ஈசன் விளங்குவித்தானென்று எவ்விதமாக்கக்கூறலாம்: ஈசனென்றால் சித்தா, வேறோ வேறெனில்; ஜ

கம்பேரவில்லாதவனைகத்தெரிவான். சித்தெனில்; அதி
ஷ்டானமான சுத்தசித்தைத்தவிர வேறில்லாதவனாக
வே சித்திப்பான். இங்ஙனங்கூறியபிரகாரம் ஈசுமுதல்
சிவேஸ்வரர்கள்வரை தோன்றித்தோன்றி விளங்கிம
றைந்திடினும் சுத்தசித்தாகிய அதிஷ்டானமான தன்
னைத்தவிர அனைத்தும் வேறில்லாமையினால் சுத்தசித்
தான அதிஷ்டானமான நாமே அனைத்தும். நாமே அ
னைத்துமென்றால் சுத்தசித்தான நாமே நாமெனத்தோற்
பரியும். இப்படி ஆலோசித்து அநுபவித்திட எப்படி
யோ அப்படியேயாகின்றார்கள்.

முற்றிற்று.

எட்டாவது

## இந்திரியாதிகளின்சூக்ஷமாநுபவம்

## உரைத்த பிரகரணம்

அதாவது இந்திரியம்மனம்புத்திசித்தம்அகங்காரமந்த
க்கரணமந்ஞானம் இவற்றின் சூக்ஷமாநுபவமாம்
விஷயங்களை இந்திரியங்கள் விளக்கமாத்திரஞ்
செய்யும். இந்திரியங்கள் எண்ணமுன்பே எப்படி விள்
ங்குவிக்கின்றதோ, அப்படியே மனம்புத்திசித்தம்அக
ங்காரம் இவைகள் ஸ்தூலமாய் எண்ணத்துக்குப்

பாத்தியப்படாமல், வாசனைமாத்திரமாகக்கொண்டு அநுபவரூபமாய் விளங்குவித்து விளங்கிடத்தெரியும். அவ்விதவாசனாபீஜமுமடங்கி விருத்திமாத்திரமாய் நின்றது அந்தக்கரணாநுபவமாகும். அவ்வித அந்தக்கரணத்தின் மத்திமாம்சமான சம்சய நிச்சய ஆலோசனை அகங்காரமென்ற ஸ்தூலசங்கற்பத்தன்மையில்லாத இவைகளின் வாசனாபீஜரூபமான விருத்தியில், பிரதிபிம்பித்த சிதாபாசனுக்கு விஷயமாகாததாகக்கொண்டு வாசனைமாத்திரமாய் மயக்கமநுபவிக்கப்பட, அவ்விதமயக்கமாகிய அநுபூதியால் மூடியலயவிருத்தியிற் பிரதிபிம்பித்த சைதன்னியத்தோடுந் தாதான்மியப்பட்டுச், சங்கற்பத்தை எதிரிடாமல், தானேயொன்றுந் தெரியாமற்றூங்கினேனென்ற அஞ்ஞானநுபூதி, சங்கற்பமில்லாதமனோபுத்திசித்தஅகங்காரமென்ற இவற்றின் வாசனாரூபமான அநுபவவிசேஷத்தால், மத்திமாம்சமான அந்தக்கரணவிருத்தியிற் பிரதிபிம்பித்த சிதாபாசனுக்கு அஞ்ஞானநுபூதிவரத்தெரிய, அதனை ஸ்தூலமானசங்கற்பசத்தையால்விளங்கிய மனம் புத்தி சித்தம் அகங்காரம் இவற்றைஸ்தூலமாகவுடைய அந்தக்கரணவிருத்தியிற் பிரதிபிம்பித்த சிதாபாசன், ஸ்தூலமாக நான்தூங்கினேனென்று விவகரிக்கின்றான்.

இவற்றை உள்ளபடிசோதித்து வாசனாபீஜங்க

ளோ டேக்ஷிக். கூடஸ்தஞானமாத்திரமாயிருக்கவேண்டும். சிதாபாசனுக்கு விஷயங்களை அறிய விருத்தியினுதவிவேண்டுதல்போல், கூடஸ்தனுக்குமாத்திரம் விஷயஞானத்தின்பொருட்டு விருத்தியினுதவி ஏன்வேண்டுவதில்லை? விஷயங்கள் கூடஸ்தஞானத்தில் மனோவிருத்தியாற் கற்பிக்கப்பட்டிருப்பதால், கற்பனைவிசேஷங்களை அறியும்பொருட்டு கற்பகமானமனோவிருத்தியினுதவி சிதாபாசனுக்கு அகத்தியம்வேண்டும். கூடஸ்தனுக்குச்சகலவிஷயங்களுந் தானாயிருப்பதால் விருத்தியினுதவிவேண்டியதில்லை.

முற்றிற்று.

ஒன்பதாவது.

## தர்மதர்மிமுதலியகுணமுணர்த்த

## பிரகரணம்.

அதாவது. தர்மம் தர்மி - கிரியை - கிரியி - சம்பந்தஞ்சம்பந்தி - குணம். குணி - இலக்ஷணம் - இலக்ஷியம் - பதம் - வாக்கியம் - வாசகம் - வாச்சியம் - அபிதை - இலக்ஷணை - விசேஷணம் - விசேஷியம் - விசேஷம் - வெதிகரணம் சமானாதிகரணம் - இவற்றின்வரலாறு

௧ - தர்மமாவது, கடத்தில் கம்புக்கிரீவாதிமத்தாயுள்ள விளங்குதல்போல, ஜீவேசபேதம்நீங்கிய அகண்டாகாரவிருத்தியிற் பிரதிபலித்த சைதன்னியமேயாம்.

௨ - தர்மியாவது, அவ்விதசைதன்னியம் விருத்தியின் சம்பந்தத்தால் ஏகாகாரத்தன்மைக்குட்பட்டுத் தோன்றுவதால், அவ்விதவுபாதிநீங்கின இடம் சுத்தசைதன்னியமானதால், அவனநுபவமே விருத்தியால் அகண்டமாய் விளங்குவதால் இந்தவிருத்தியைத் தபேக்ஷித்தும் பிம்பசைதன்னியத்துக்கு நிரூபணங் கூறப்படுகின்றதேயாம்.

௩ - கிரியையாவது, ஒருகடத்தைவிட்டுவந்த குலாலனதும் தாரில்போல, கண்டம்போல் விளங்கிய ஆன்மசுபாவத்தை, சுருதியுக்தி அநுபவங்களால் நான் அகண்டமென்ற அந்தக்கரணத்தினிறைவாட சலனவிருத்தியிற் பிரதிவிம்பித்தசைதன்னியமேயாம்

௪ - கிரியாவது, அவ்விதசைதன்னியத்தாற் சலனமுடையவன்போற் றோன்றப்பட்ட, சலனரூபக்கிரியாதாரமான முந்தினவிருத்தியையபேக்ஷித்து நிஷ்கிரியாசைதன்னியமேயாம்.

௫ - சம்பந்தமாவது, சமவாயமென்றும் - சம்யோகமென்றும் - தாதான்மியமென்றும் - மூன்றுவ

குப்புடையதாகும். இவற்றில், சமவாயசம்பந்தமாவது நித்தியசம்பந்தமுடையது. சம்யோகசம்பந்தமென்றது அநித்தியசம்பந்தமுடையது. தாதாத்மியமென்றது அபேதசம்பந்தமுடையதாம்.

கூ - சம்பந்தியாவது, அவ்விதசம்பந்தமுடையவனெனப்படுவான். இதின் உதாரணம், கம்புக்கிரீவாதிமத்தாயுள்ள கடதர்மமானது கடத்தைவிட்டு ஒருக்காலும் நீங்கத்தகாமல் நித்தியசம்பந்தமாகக் காணப்படுகிறதாலும், அப்படியே ஆன்மாவினிடத்திற் சச்சிதானந்தாதி நித்தியசம்பந்தமுடையதென்றும், இரண்டாம உதாரணம், தெண்டியென்றால் தெண்டமுடையவனானதால் அவ்விததெண்டசம்பந்தம் அவனிலின்றும் நீங்கினதாக அநுபவிக்கப்படுவதாலும், அப்படியே ஆன்மாவினிடத்திற் சச்சிதானந்தாதி விருத்திசம்பந்தத்தால் சச்சிதானந்தமென்றும் அவ்விருத்திகளின் வியோகத்தால் அசங்கியென்றும், மூன்றும் உதாரணம், நீலோத்பலமென்றது நீலமென்றால் நீலமாய் நீலாபின்னமாயுள்ள உத்பலம் நீலோத்பலமென்பதுபோல், அகம்பிரமாஸ்மியென்ற அநுபூதியில் அகண்டாகார அசம்விருத்திசிற் பிரதிபலித்த சச்சிதானந்தாகாரமாக விளங்கிய அகங்காரியாயுள்ள பிரமமென்றும் மதவாதியர்களின் அபிப்பிராயமாம்.

இவ்விதசம்பந்தங்களில தாதான்மியம் இரண்டு வகுப்புடையதாகும்: அவை சகஜதாதான்மியமெனவும் அசகஜதாதான்மியமெனவுமாம். சகஜதாதான்மியமாவது பந்தமுதல் மோக்ஷம்வரையிலும் அவிவேக விவேகவிருத்திகளால், அகங்கிருதிக்கு ஆன்மசம்பந்தம் சுபாவமாகக் காணப்படுவதால், அவ்வித அகங்காரசம்பந்தம் சகஜதாதான்மியமென்னப்படும். மற்ற அகக்கரணம் புறக்கரணம் இவற்றின் தாதான்மியம் அசகஜமெனப்படும்.

அவ்வித அசகஜதாதான்மியம், உத்தமம், மத்திமம், அதமம் எனமூன்று வகுப்பாகக் கூறப்படும். இக்கரணங்களில் தாதான்மியம் உத்தமாசகஜம். தேகத்தைபற்றிவந்த ஸ்தூல கிருச வயோ அவஸ்தாதிகளைப்பற்றிய தாதான்மியம் மத்திமாசகஜம். சிகா எக்கியோபவீதாதி உபநயனகர்ம விவாககர்ம தத்கியா ககர்மாதிகளில் நேரிட்ட ஜாதிவருணாச்சிரமாதி தாதான்மியம் அதமாசகஜம். இந்தத்தாதான்மிய சம்பந்தமானது அவிவேகதிசையிற் பூர்வகாண்டத்திற் கர்மசாதனமாயினும், “உத்தரகாண்டத்தில் மும்முக்ஷுத்துவதிசையில் விசாரணையால் நீங்கிடத்தெரியும் சகஜதாதான்மியமென்ற அகங்காரசம்பந்தமானது விவேகதிசையில் அபாதிக்கப்பட்டபோதிலும், “ஜீவதிசையைப்பற்றிவந்த தாதான்மியமாத்திரம் பாதிக்கப்

படுமேயன்றி, உத்தரகாண்டத்தாற் போதிப்பிக்கப்பட்ட பிரமசுபாவமான ஆன்மாகங்காரதாதான்மியம் அபரோக்ஷசாக்ஷாத்காரபரியந்தம் வாதிக்கப்படமாட்டாது. அவ்விதசகஜதாதான்மியமும் உத்தரகாண்டத்தில் விவேகநிஷ்டையில் சம்பிரதாய பேதமாகலுப்பிய தேயன்றி, மதவாதியர்களின் சம்பிரதாய முறையாகலுப்பப்படவில்லை. அதெப்படியென்னில் நீலகடமென்றால் அபேதகடமில்லையெனக் காண்பதுபோல் நான்பிரமமென்றால் பிரமாகார அகங்காரவிருத்தியின் வியாவிருத்தயே அபிப்பிராயமாம்.

எ — குணமென்றால், சுக்கிலபடமென்பதில் வெண்மை குணமாயிருப்பதுபோல், நான்அகண்டமென்றவிருத்தியில் திரிபுடி தோற்றுவதால், திரிபுடியாய்விளங்கிய ஞாதுருஞானஞேயரூப தமோரசத்வசேஷவிகாரங்களிற் பிரதிபலித்த சைதன்னியமேயாம்.

அ — அவ்விதகுணமான சோபாதிகசைதன்னியம் நிருபாதிகசைதன்னியத்தினிடமாக விளங்குவதால், இந்தக்குணவிருத்தியை அபேக்ஷித்து நிர்கருண சைதன்னியம் குணியெனக்கூறப்படும்.

௯ — இலக்ஷணமென்பது தடஸ்தலக்ஷணமென்றும், சொரூபலக்ஷணமென்றும், இரண்டுவிதவுடையதாகும். தடஸ்தலக்ஷணமாவது இப்பிரபஞ்சத்துக்

ரு சிருஷ்டிஸ்திதிசங்காரம் எனினின்றேயென்று விருத்தியிற் பிரதிபலித்த சைதன்னியாநுபவமாம். சொரூபலக்ஷணமாவது சச்சிதானந்தப்பிரமமென்னச் சச்சிதானந்தாகாரவிருத்தியிற் பிரதிபிம்பித்த பிரமாகார சைதன்னியாநுபவமாம்.

௰ - இலக்ஷியமென்பது அவ்விதஅநுபவம் திரிபுடியுடையதாயிருப்பதால், அவ்விததிரிபுடி விருத்தியைப்பற்றியதால், அவ்விதவிருத்தி ஜடமானதால், அதிற்பிரதிபிம்பித்தசைதன்னியமும் ஜடம்போலத் தோற்றுவதால், அவ்விதஜடவிருத்தியின் தர்மமானஅநித்தஜடதுக்கத்தன்மையையும் மேற்கூறியசைதன்னியம் உடையதுபோலவே தோற்றுவதால், அவ்வித அநித்தஜடதுக்காதி பிரதீதியைசைதன்னியத்தினின்று நீங்கும்பொருட்டு உபதேசத்தாற் பிரமத்தைச் சச்சிதானந்தமாகத்தோற்றுவித்து, அவ்விதசச்சிதானந்தாகாரமாயப் பரிணமித்த சித்தவிருத்தியில் சுயம்பூசச்சிதானந்தமாயிருக்கின்ற பிரமசைதன்னியம் பிரதிபிம்பிக்க, அச்சைதன்னியாநுபூதியில முன்னமே பிராந்தியால் தன்னை அநித்தஜடதுக்கரூபனாகக் கொண்டிருந்தபிரதீதி நீங்கிடத்தெரியும். அப்பிரதீதிநீங்கிடல், சேஷித்தது வஸ்துவானதால் அவ்விதவஸ்துவே லக்ஷியமாம். அவைதவுடையும்பொருட்டு மூன்றிசகண்ட அநுபூதியன்றிச் சித்தியாததினால், எவ்வநுபூதி

ஸைபே சௌந்தலக்ஷணமெனக்கூறியது.

௰௧- பதம். அதாவது யோக்கிதையுடையதாம். யோக்கிதையென்றால் உள்ளபடி ஒருபொருளைப் பிரதிபாதிக்கத்தக்க வல்லமையுள்ளது.

௰௨- வாக்கியமாவது, ஆகாங்க்ஷை சந்நிதி யோக்கிதை என்றமூன்றையும் லக்ஷணமாகவுடையதாம்.

௰௩- வாசகமாவது, பதரூபமாயாயினும் வாக்கியரூபமாயாயினும் பொருளைப் போதிப்பிக்குந் திறமையுடைய சப்தமாம்.

௰௪- வாச்சியமாவது, வாசகத்தின்பொருளாகும்.

௰௫- அபிதையாவது, வாச்சியத்தின் பரியாயநாமமாம்.

௰௬- லக்ஷணையாவது, வாசகத்துக்கு வாச்சியார்த்தத்தில் முக்கியமாய்ப்பிரவேசமில்லாவிடில், அருத்தபோதகமா யுபகாரப்படுவதாம்; அது ஜகல்லக்ஷணை அஜகல்லக்ஷணை ஜகதஜகல்லக்ஷணை எனமூன்றுபிரிவுடையது. (கவது ஜகல்லக்ஷணையாவது கங்கையிற் கோஷமென்பதில் கங்கையில் இடைச்சேரியிருக்கக்கணக்கில்லையென்றறிந்து, கங்கைக்கரையிலெனப்பொருள்கொள்வதுபோல், நானொன்றுந்தெரியாமற் றூங்கினேனென்றதில், தூங்கியிருந்தால் தூக்கத்தையறியக்கூடாததினால், நான்தூங்கினேனென்றதின்பொருள் நான்சாக்ஷியெனக் கொள்ளுகையாய் விளங்கியவிருத்தியிற்பிரதிபிம்

பித்த சாக்ஷிசைதன்னியாநுபூதியாகும். (௫-வது) அஜகலக்ஷணையாவது, சிவப்பு ஓடுகின்றதென்றதில் சிவப்புநிறமுடைய குதிரை ஓடுகின்றதெனப் பொருள் கொள்வதுபோல், நான் சாக்ஷியென்றதில், நானென்ற அகங்காரவிருத்தி ஜடமானதால், அவ்வித அகங்கார விருத்தியை யுடையதுபோற்றோன்றிய, சித்தையே, சாக்ஷியெனக் கொள்ளுகையாய் விளங்கிய சைதன்னியாநுபூதியாகும். (௬-வது) ஜகதஜகலக்ஷணையாவது, அந்தப்புருஷனே இவனென்றதில், அத்தேசகாலவர்த்தமானங்களென்ன இத்தேசகாலவர்த்தமானங்களென்ன, இவைகள் விரோதத்தன்மை யடைந்திருந்த போதினும், அவைகளைத்தள்ளிப் புருஷமாத்திரத்தை அபிப்பிராயமாக்குவது போல், அவஸ்தாத்திரயத்துக்குட்பட்டதால் வந்த சீவனது கிஞ்சிஞ்ஞத்துவமென்ன, சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரங்களைவிட்டுவந்த ஈசனதுசர்வஞ்ஞத்துவமென்ன, இந்தஇரண்டையும் நீக்க இரண்டுஉபாதிகளிலும் சேஷித்தஅறிவொன்றாக அநுபவத்துக்குவருவதால், அவ்விதசர்வஞ்ஞத்துவம் கிஞ்சிஞ்ஞத்துவ உபாதிநீங்கிய ஏகாகாரவிருத்தியிற் பிரதிபிம்பித்த அறிவின் அநுபூதியேயாகும்.

௰௭- விசேஷணமாவது, சத்புருஷன் என்றதில் சத்தாயிருக்கின்ற புருஷன் சத்புருஷன். சத்தாயிருக்கின்றதென்பது விசேஷணமாவதுபோல், சச்சிதானந்

தம் பிரமமேன்பதில், சச்சிதானந்தவிருத்தியிற் பிரதி பலித்த சைதன்னியாநுபூதியே விசேஷணமாகும்.

மஅ- விசேஷியமாவது, நிருபாதிகபிரமசைதன்னியமே உபாதியிற் சச்சிதானந்தமாய் விளங்குவதால், அச்சைதன்னியாநுபூதியேயாம்.

மகூ- விசேஷமாவது, அதிந்திரியங்களாயுள்ள பூதங்களின், பரமாணுக்கள் ஒன்றுக்கொன்று பேதமுடையதாக நிரூபணங் காணப்படுவதால், அவற்றின் பேதத்தின்பொருட்டு விசேஷமெனச் சாஸ்திரசங்கேதத்தால் ஒப்பியதுபோல், பிரமசிவசைதன்னியங்களுக்கு ஸ்வரூபத்தால் தானே பேதமொப்புகிறதின்பொருட்டு அவற்றின்விசேஷமிருக்கின்றதாவொப்பியதாம். இதுஇதர்மதங்களினுபகாரம்.

உய- வெதிகரணமாவது, பின்னுதிகரணமெனப்படுவதாம்.

உக- சமானுதிகரணமாவது, இவன் அரசனென்கிறதில் இவனென்றஞானமும் அரசனென்றஞானமும் ஒருடலைப்பற்றியிருப்பதுபோல், அகம்பிரமாஸ்மியென்றவாக்கியாநுபூதியில், பிரமாகாரமாய் விளங்கிய அகண்டாகாரவிருத்தியிற் பிரதிபிம்பித்த ஜகத்காரணசைதன்னியத்துக்கும் அவஸ்தாத்திரயசாக்ஷியாய் விளங்கிய சாக்ஷிவிருத்தியிற் பிரதிபிம்பித்த ஆத்மசைதன்னியத்துக்கும் நிர்விசேஷ கூடஸ்தசைதன்னியு

மே அதிகரணமாயிருப்பதால், அவ்விதநிர்விசேஷபிர மசைதன்னியத்தைத்தவிர அவ்விரண்டுசைதன்னியமும் வேறில்லாதநிலைல், அவ்விதஏகாகாரபிரமாநுபூதியேயாம்.

இவ்விதசமாநாதிகரணம் முக்கியமெனவும் வாதையெனவும் இரண்டுபிரிவுடையதாகும். அதில் முக்கியசமாநாதிகரணமாவது முன்சொன்னதேயாம். வாதாசமாநாதிகரணமாவது சீவபிரமோபாதிகள் ஐம்பிரபிரசங்கங்கள்போல், விரோதிகளானதால் அவைகளுக்குச் சாமாநாதிகரண்ணியலக்ஷியமானத்தாற்கூறத்தகாது. சமாதிபலத்தாற் சீவோபாதி நசித்திடற்கூடுமென்பதாம்.

மேலும் முக்கியசமாநாதிகரணமேற்றிடில்; எப்பொழுதும் சீவஜகத்காரணசைதன்னியங்களுக்கு நிர்விசேஷபிரமசைதன்னியத்தைத்தவிர அதிகரணம் வேறில்லாதநிலைல், சித்தசாதனமென்றதோர்தோஷமும் வரத்தெரியும். அப்படியே பாரமார்த்திகத்தில் வஸ்து அநந்நியானதால், ஒருபதார்த்தத்துக்கு அதை அதிகரணமாகநிரூபிக்கவுங்கூடாது. ஆகையால் கேவலபாரமார்த்திகவிசாரணைமாத்திரத்தால் சமாநாதிகரணமொப்பதாகாது. ஆகையால் வியாவகாரிகத்தில் வந்தசீவோபாதி வியாவகாரிகமாகவே நசித்திடவேண்டும். அங்ஙனம் சீவோபாதிநசித்திடில்; பின்பு இரண்டுசை

துன்னையபுமனைகுநிவிட்டதால், சாமானாதிகரண்
ணியங்கூடும். ஆகையால் வாதாசாமானாதிகரண்ணிய
மே பிராமாணுபூதியில் உபகாரமேயன்றி, முக்கியசமா
னாதிகரணம் ஒப்பத்தகாதென்று சேசுரசாங்கியம்தத்
திலும், அபிமானமுடைய அத்துவிதிகளில்ஏகதேசிக
ளும் கூறுகின்றார்கள். அந்தவிஷயத்தில். சிலவாதியார்
கள் சீவோபாதியால் வாதாசாமானாதிகரண்ணியத்தா
ன்கூட சீவபிரமசாமானாதிகரண்ணியமொப்புகின்றது
அசங்கதமென்கிறார்கள்.

எங்ஙனமெனில்? ஒருராஜநியனை நீமஹாராஜா
ரென்று துதித்திடில், அவன் எப்படிமஹாராஜாவாக
த்தகாதோ, அவ்விதப்பிரயோகம் அவனிடத்தில் எப்
படி உபசாரமாத்திரமாயாகுமோ அப்படிப்போல், சு
ருதியால் அகம்பிரமாஸ்மியென்று நிரூபிக்கப்பட்டிரு
ந்தபோதிலும், உபகாரமேயன்றிப் பாரமார்த்தமல்ல
வென்றும், சிலர்கள் மஹாராஜன்போலுள்ள கனம்
பொருந்திய ஒருபுருடனை இவன்மஹாராஜனென்றிடி
ல், மஹாராஜசமானனெனக் கொள்வதுபோல், பிரம
சமானனெனக் கொள்ளத்தக்கதேயன்றி ஒருக்காலும்
ஐக்கியங்கூடாதெனக் கூறுகின்றார்கள். இங்ஙனமவர்
த்தெரிய முக்கியஅத்துவிதிகள் அதைக்கண்டிக்கின்
றார்கள். வேதத்திற்கு அந்நியதாகற்பனைசெய்கின்ற ம
தவாதியர்களின்பொருட்டு விவாதஞ்செய்கின்றது

நமக்கு அகத்தியமல்ல, ஆனால்வாதாசமானாதிகரணவா தியர்கள் அத்துவிதிகள்போற் றோற்றுவதால். அவர்க ள்பொருட்டுமாத்திரம் உத்தரங்கூறப்படுகின்றது.

(சுவாநு) சித்தசாதனதோஷம் வருமெனக்கூறியது சரியே, ஆயினும் பாரமார்த்திகத்தில் அவித்தையாசம் பந்தமிருக்கின்றதுபோலத்தோற்றியதால், அவ்விதத் தோற்றுதலான அவித்தையாநிவிர்த்தி ஞானமன்றிக் கூடாததினால், அவ்விதஞானமும் சாங்கியவிசாரணை யன்றிச் சித்திக்கமாட்டாததினால், விசாரணையாற் பிரா ந்தியாற்றோன்றிய சீவோபாதியாம் அஞ்ஞானம், அ திஷ்டானபிரமமாத்திரமாயில்லாமல் நீங்கிட அக்காலத் திற் சீவேசபேதமாய்த் தோற்றிவிளங்கிய சைதன்னி யப்பிரதீதி அதிஷ்டானபிரமமாத்திரமாய் அதைதத்த விரவேறில்லாததாகக்கொண்டு அநுபவத்துக்குவருவ தால், அவ்விதசீவேசவுபாதிநீங்கிய அகண்டாகாரசை தன்னியாநுபூதியிற் சைதன்னியபேதங்காணப்படாத தினால், முன் பிரதீதிமாத்திரத்திற் றோன்றியசீவேச சைதன்னியங்களுக்குப் பேதம் நீங்கி அதிஷ்டானபிர மசைதன்னியாநுபூதியில் முக்கியசாமானாதிகரண் ணியங்கூறப்படுகை.

(உவதீ) ஆன்மா அசங்கியனதால் அவனிடத்தி ல் சீவேசசோபாதிகசைதன்னியங்களுக்கு இருக்கை கூடாததினால், முக்கியசாமானாதிகரண்ணியமே சித்

திக்கத்தகாதென்றதில் யதார்த்தமாய்ச் சீவேசசோபாதிகளைதன்னியங்களுக்கு அதிஷ்டானத்திகிடமாய்ச் சாமானாதிகரண்ணியம் ஒக்கிடில் அதுசரி, "பூந்தம் வந்ததுபோற்றென்றிய அதிகாரிகளுக்கு இவ்வித முக்கியசாமானாதிகரண்ணியமன்றிப் பிரமாபரோக்ஷசாக்ஷாத்காரானுபூதிசித்திக்கக்காரணமில்லாததினால், அகத்தியும் முக்கியசாமானாதிகரண்ணியம் ஒத்தேதீரவேண்டுமெனவும், வாதாசாமானாதிகரண்ணியமும் அவசியமென்றுங்கூறுகின்றார்கள்.

இவ்விருவர்களின் அபிப்பிராயம் முக்கியசாமானாதிகரண்ணியவாதியர்கள் ஞானத்தாற் பிரமசாக்ஷாத்காரமுண்டாவதால், மனோநாசம் பிரயோசனமில்லையெனக்கொள்கின்றார்கள். வாதாசாமானாதிகரண்ணியவாதியர்கள் பிரமஞானமென்பது திரிபுடிசூனியஞானமானதால் விசாரணையாற் கிடைத்தஞானம் விருத்திஞானமானதால், விருத்திநாசமின்றி அதிஷ்டானஞானானுபூதி கிடையாதென்று கூறுகின்றார்கள்.

இதின்சமரசம் முக்கியசாமானாதிபக்ஷத்திற் பிரமாபரோக்ஷ சாக்ஷாத்காரமுண்டாயினும், அவ்வித அநுபூதியில் விருத்தியிருந்திடினும் நிர்விருத்திகஸ்வதன்னியமே அநுபூதியாகத் திருப்திக்குவருவதால், அவர்களின் விருத்தியுந் சூனியம்போலவேதான். வாதாசாமானாதிகரண்ணியர்கள் மதத்தில் மனோநாசத்

தையே முக்கியமாயொத்திருந்திடினும், திரிபுடியில்லாத அதிஷ்டானஞானத்தின் தெளிவு விருத்திஞானத்தை முன்னிட்டே சித்திக்கவேண்டியிருப்பதால், அவர்களுக்கும் மனோநாசானந்தரம் அதிஷ்டானஞானத்தின் தெளிவு விருத்திஞானத்தின் [illegible]யேயுண்டாகுகின்றது. அவர்கள் மனோநாசம் மனோநாசமுமல்ல இவர்களின் விருத்தி விருத்தியுமல்ல இவர்களுடைய அநுபவத்திலும், திரிபுடியில்லாத அதிஷ்டானஞானமே திருப்தியாகச் சித்தித்திருப்பதால், எவர்களுக்குச் சமாதிசாதனமன்றிச் சிரவணமாத்திரத்தில் பிரமாபரோக்ஷ சாக்ஷாத்காரம் அநுபவத்துக்கு வருகின்றதோ, அதே அவர்களுக்கு மனோநாசமும் எந்த அதிகாரிகளுக்குச் சிரவணமாத்திரத்தில் அபரோக்ஷசாக்ஷாத்காரங் கிடையாமற் சமாதிபலத்தால் மனோநாசத்தின்மேலில் அபரோக்ஷ சாக்ஷாத்காரங் கிடைக்கின்றதோ அவ்வித அபரோக்ஷ சாக்ஷாத்காரஞானமே அவர்களுக்கு ஞானம். இவர்களுடைய பாகத்திலும் மனோலயமும் ஞானமும் இரண்டும் ஒப்பத்தக்கதுதான்: ஆனால் முக்கியசாமானாதிகரண்யபக்ஷத்தில் மனோநாசம் சூக்ஷ்மமாயும் பாதாசாமானாதிகரண்யபக்ஷத்தில் மனோநாசம் ஸ்தூலமாயும் ஒப்புப்படுகின்றதெனவும், முக்கிய சாமானாதிகரண்ணியபக்ஷத்தில் ஞானம் முக்கியமாயும் மனோநாசம் கௌணமாயும் ஒப்பியதாகக் கற்ப்பபடி

னும், வாதசாமானாதிகரண்ணியத்தில் முக்கியசாமானாதிகரண்ணியம் அகத்தியம் ஒப்பத்தக்கதாகவே இருக்கின்றது; முக்கியசாமானாதிகரண்ணியபக்ஷத்தில் வாதசாமானாதிகரண்ணியம் கணமாத்திரமாயினும் சித்தித்ததாகவே இருக்கின்றது. அதிகாரிபேதத்தால் இரண்டும் உபகாரமேபடுகின்றது. முக்கியசாமானாதிகரண்ணியம் முக்கியஅதிகாரியைப் பற்றியது, வாதசாமானாதிகரண்ணியம் மத்திம அதிகாரியைப்பற்றியது. இரண்டதிகாரியினாலும் அடைந்தஞானத்தில் அபரோக்ஷசாக்ஷாத்காரானந்தரம் பேதங்கிடையாது; சாதனத்தில் விவாதமேயன்றி அடைந்த சத்தியத்தில் விவாதங்கிடையாது.

முற்றிற்று

பத்தாவது

அகண்டவிருத்திசோதனையுரைத்த
பிரகரணம்.

ஞாதுரு ஞானம் ஞேயம் இவற்றுள் ஞேயத்தைமுன்னதுமாய் உபாசிக்குந்தன்மை.

சமாதியில் அதிஷ்டானமாத்திரமாகச் சேஷித்தது பின்பு விழிக்குங்காலத்தில், நிராகாரமான விளங்குதல்மாத்திரமாய் விளங்கத்தெரிய, அக்காலத்தில் அதை எதிரிடாநின்ற பார்வையின்விருத்தி மூர்ந்திய

விளங்குதலைக் கிரகிக்க வல்லமையற்று நிராகாரமா ய் வியாபகப்பிரவுகலையுடைய, அவ்விருத்தியிற் பிர திபிம்பித்த சைதன்னியத்தை இதுவென்றுசுட்டித் தெரிய அவ்விதமாகச்சுட்டிய இதுவென்றவிருத்தியி ற பிரதிபிம்பித்த சைதன்னியத்தைப், பூர்வவாசனை யால் அகண்டமென்று நாமரூபமுடையதாகச் சங்க ற்பிக்க அவ்விருத்தியால் அகண்டமாய்த்தோற்ற, அ வ்விருத்தியிற் பிரதிபிம்பித்தசைதன்னியத்தையும் அ வ்விருத்தியையும அன்றி இதுவென்றவிருத்தியையும் அதிற்பிரதிபிம்பித்த சைதன்னியத்தையும் ஒன்றாக விளங்குவித்திடக் காரணமாய்நின்ற கூடஸ்தவிளக்க த்தை அறியவல்லமையில்லாத நிராகாரமாகிய விரு த்தியிற் பிரதிபிம்பித்த சைதன்னியமே ஆவரணவிரு த்தியையுடையதனதுசக்தியால். தன்னில் உள்ளடங் கிய அகங்காரநாமரூபசக்தியைப், பிந்தியவிருத்திக் கு இதுவென்றறிகிறியவிருத்தியாகக் காண்பிக்க, அவ்விதத்திரிசியம்போல் விளங்குகின்ற இதுவென்ற ஞானசக்தியே தன்னுளடங்கிய ஆவரண ஞானசக் திகளில் மனதுக்கு உள்ளபடி தெரிய வல்லமையின் றி அகண்டமென்று சங்கற்பிக்க, அவ்வகண்டவிருத் தியிற் பிரதிபிம்பித்தசைதன்னியமும் ஆவரண ஞா ன சக்திகளால் ஆவரிக்கப்பட்டுக், கூடஸ்தவிளங்கு தல் நிராகாரமாகியவிருத்தி அதிற்பிரதிபிம்பித்த ஞா

தாரு இதுவென்ற சாதகயாருள்ள ஞானவிருத்தி அதிற் பிரதிபிம்பித்த சைதன்னியமாகிய ஞானம் அகண்டமென்று விதையாகார சங்கற்பரூப அகண்டாகார ஞேயவிருத்தி அதிற்பிரதிபிம்பித்த சைதன்னியம் இவ்வளவும், அகண்டாகாரஞேயவிருத்தியிற் சூக்ஷ்மமாயடங்கி, அகண்டஞேயவிருத்தியைப் பார்க்கவேறேதோற்றுதலைகளாகத் தோற்றி ஞேயமாத்திரமாய் விளங்குகின்றது. அவற்றை மேற்சொன்னபடி பிரித்துப்பார்த்திடத் தெரியவரும்.

முற்றிற்று

பதினொன்றாவது

சரியாதிநிந்தாநிவேதனப்

பிரகரணம்

சர்வஞ்ஞனும் சர்வவல்லமையுடையவனும் சர்வதயாபரனும் இடைவிடாத்தன்மையினையெங்குமுள்ளவனும் ஈக்கள் மதுவைப்போல எம்மதத்தோரும் என் கடவுள் என் கடவுளென்றுருகிவிந்துசார்ந்திடத்தக்க ரசக்கடலாயும் என்றும்ஒன்றுபோல் விளங்குகின்றதாயுமுள்ள சருவகாதனாகிய கடவுளை; சரியை கிரியை யோகம் இம்மூன்றின் சமரசப்பெருமையால் அவனது அனுக்கிரகத்தைஸ்துதித்து ஞானானந்தக்கடலில் மூழ்குதலின் விவரம்.

சரியை கிரியை இவ்விரண்டும் கர்மகாண்டத்தில் உபகாரமானதால் அக்கர்மகாண்டத்தில் யாகாதிகிருத்துக்களென்ன, ஆலயாதி ஈஸ்வரவிஷய கிருத்துக்களென்ன, இவ்விரண்டிலும் குண்டமண்டபவேதிமுதலாகிய நிருமாணம் சரியாரூபமானகால். அர்ச்சியா விஷயத்திற் கிரியையென்ற உபாசனை சாத்தியமானதால், அவ்வித உபாசனை ஈசனை முன்னிட்டு விளங்குவதால், அவ்வித ஈசனைத் தெரியச் சீவர்களுக்கு வல்லமையில்லாதிருத்தல், அதிமூடமாயுள்ள இந்தஜகத்திற்கு, அதிலகுவாக ஈசனை அறியும்பொருட்டு அக்கினி சிவலிங்காதிகளிற் சாஸ்திரங்களாற் சாவயவரூபகமான ஈசனை மந்திராதிகளாற் பாவித்து உபசரித்திட அவனநுபிரசாதத்தால் அவனநுபாவந்தெரியக்கூடுதல்.

இலிங்கம் அக்கினி முதலானவைகள் ஜடங்களாயிருந்தபோதிலும், அவைகளிற் பாவிக்கப்பட்ட ஈசன் சித்துரூபனாதலால், அவைகளிற் செய்யப்பட்ட உபசாரங்கள் நித்தியதிருப்தனாகிய ஈசனுக்கு, ஒரு உபசாரமுமில்லாமற்போனாலும், "ஜகத்தில் மஹாகனம்பொருந்திய மஹாராஜ்ஞியராணியவர்களுக்கு ஜக்கத்தால் ஒருபிரயோஜனமுமில்லாமற் போனாலும் ஜடமாயுள்ள அவர்களது முத்திரைக்குச் சகல இந்து ஐரோப்பியர்களும் வெகுதிரவியச் செலவுடையஉப

சாரத்தை அறிவிக்கத்தடன்செய்ய, அவ்விதஉப
சாரத்தால் அவர்களநுகந்நினைக்கு இவர்கள்பாத்தியப்
படலாமாயின், சருவஞ்ஞனையும் சருவவியாபகனை
யும் சருவதயாபரனையுமிருக்கின்ற ஈசனநுகந்நினை
யின்பொருட்டு, மேற்சொன்ன சிவலிங்காதிகளிற்
பாவனையாலுபசரிக்கப்பட்டஈசன், அவர்களின்பொ
ருட்டு என்றிருடைசெய்யப்பட்டான்.

ஈசனையேதெரியாத இந்தஜகத்துக்கு ஆலயம்
யாகசாலை இவற்றைக்கண்டவுடன், ஈசனநுயிர்தூ
ண்டாவதால், அதுவேறுந்தின கைகண்டபிரயோச
னம் அப்படி, ஈசனநுயாநுளாரம்போது அவனைச் சரு
வல்லமையுடையவனையும், தன்னை ஒன்றுந்தெரியா
தவனையும் உனக்குள் நாடக்கமெனக்குவிக்கிடும்ப
டிசெய்து அகங்காரத்தை நீக்கியது இரண்டாம்பிர
யோசனம். மேலும், சாஸ்திராதிகளால் விவேகமு
டையவர்களுக்குமாத்திரம், சர்வவியாபகமாய் அரு
பமானபரம்பொருள் இருக்கின்றதாக அறியப்படுமே
அவ்விதம் அறிவாலுமுள்ள உபகாரம் நாதமென்ற அவனி
ருக்கிறானென்ற எண்ணத்தை உண்டாக்குகின்ற
தைக்காட்டிலும் வேறுபகாரத்தைக் காணவில்லை. அ
வ்விதகலைகள் அவனை மறந்திடில் உபகாரப்படுவது
போல், இவ்வாலயாதிகளும் ஈசனைத்தெரிந்தவன்
தெரியாதவன் யாவர்களுக்கும் தங்களது அகங்கா

ரத்தைநீக்கி ஈசனதுயாதையுண்டெண்ணிக் குவித்துவணங்கிடச் செய்விக்கின்றது. ஆகையாற் கல்விகள் வித்வான்களுக்குமாத்திரம் உபகாரப்படும்: ஆலயாதிகள் யாவர்களுக்கும் ஈசனைத்தெரிவிப்பதற்கு உபகாரப்படும் இதுமூன்றும்பிரயோசனம்.

அன்றியும் இவ்விதஆலயாதிதோறும் ஈசனைவணங்கிய பெரியோர்களுக்கு வெகுவிதநன்மைகள் கிடைத்திருப்பதால்; இப்போதுங் கிடைத்துவருவதால்; அப்படியே சாஸ்திரங்களும் வெகுபெருமையாகச் சொல்வதால், அவனைச் சரியை கிரியையாதிகளால் அகத்தியம் வணங்கவேண்டும்.

ஆனால ஜகத்தாலுண்டுபண்ணப்பட்ட ஆலயாதிகளில்விளங்கிய ஈசனை, நாம்வணங்கவேண்டுமேதென்ன, வணங்காவிடில் என்னதாழ்வுவருமென்னில்? ஒருஅரணியிற் கடைந்தஅக்கினி நம்மாலுண்டுபண்ணப்பட்டிருந்தபோதிலும் நாமுண்டுபண்ணினதுதானேயென்று அவமானிக்கவுபகாரப்படாது. எவ்வாறெனில் உடலைக்கொடுத்தால் எரித்துவிடும், சீதகாலத்தில்அநுசரித்தாற் குளிரைநீக்கும். அப்படிப்போல் நிந்தித்திடில் அவனதுகோபத்திற்குரித்தாவான். வணங்கிடிற் கருணைக்குரித்தாவான்

சாஸ்திரங்களிலே நாதனையவன் யோகியர்களுக்குஉள்ளத்திலிருக்கிறானென்றும், ஞானிகளுக்கு

எங்குமிருக்கிறானென்றும், பிராமணர்களுக்கு அக்கினியில் இருக்கிறானென்றும், அற்பபுத்தியாளர்களுக்கு விக்கிரகமுதலானதுகளிலிருக்கிறானென்றும் சொல்லியிருப்பதில், விக்கிரகாதிகளை உபாசிக்கின்றவர்களை அற்பபுத்தியாளர்களென்றுசொல்லியிருக்க, நீர் இப்படிக்கூறியதென்னவெனில்? அக்கினியில் ஈசனது உபாசனை வேதமந்திரங்களின் அப்பியாசத்தாற் சித்திக்கவேண்டுமென்று சாஸ்திரங்களிற் காணப்படுவதால், அவ்விதவேதம் பிராமணர்களுக்கே உரித்தென்று காணப்படுவதால், அக்கினியிற் பிராமணர்களுக்கு நாதனிருக்கிறானெனக்கூறியது. அவ்விதவேதங்களிற் சொல்லியநாதனை உள்ளத்திலும் அறியவேண்டுமெனக்கூறிய சாஸ்திரப்படி கரணகலைகளை யோகத்தாலடக்கி யுள்ளத்தில் ஈசனைத்தரிசிக்க வல்லமையுடையவர்களான யோகியர்களுக்கு அவ்விதவல்லமையிருப்பதால், அவர்களுக்கு உள்ளத்தில் நாதனிருக்கிறானெனக்கூறியது. ஈசன் எங்குமிருக்கிறானெனக்கூறிய ஞானசாஸ்திரப்பிரகாரம், ஈசன் எங்குமிருக்கின்றதையறிய கடவுளதுகருணையையடைந்த ஞானியர்களால், எங்கும் ஈசனை அறிய உபகாரப்படுமானதால், அவர்களுக்கு எங்குமிருக்கிறானெனக்கூறியது. வேதமந்திரங்களை அப்பியாசிக்க வல்லமையில்லாதவர்களாயும், அதில் அதிகாரமில்

லாதவர்களாயும், உள்ளத்தில் ஈசனைத்தரிசிக்க வல்லமையில்லாதவர்களாயும், எங்குமீசனிருக்கின்றதை அறியவல்லமையில்லாதவர்களாயும், இருக்கின்றவர்களுக்கு விக்கிரகமுதலியதில் ஈசனிருக்கின்றதாகக்கூறியதில், அவர்களை அற்பபுத்தியுடையவர்களென்று கூறப்பட்டிருக்கின்றதாகக்காணப்படுகின்றது. அதில், தாற்பரியம் அக்கினியிலும் உள்ளத்திலும் எங்கும் இருக்கின்றநாதனை, பிம்பாதிகளில்மாத்திரம் இருக்கின்றதாக ஒப்பியபுத்தியை அபேக்ஷித்தேயன்றி, அவ்விக்கிரகாதிகளில் ஈசனிருக்கின்றானென ஒப்பியபுத்தியை அபேக்ஷித்துக்கூறினதல்ல.

பிராமணர்களுக்கும் யோகியர்களுக்கும அக்கினியிலும் உள்ளத்திலும் நாதனிருக்கின்றானெனக் கூறியதில், பிராமணர்களைத்தவிர மற்றப்பேர்களுக்கு வேதத்தில் அதிகாரமில்லையெனமாத்திரந் தாற்பரியமேயன்றி, பிராமணர்களுக்கு விக்கிரகாதிகளிலும் உள்ளத்திலும் எங்கும் நாதனை உபாசிக்கக்கூடாதென்ற நிஷேதங்கிடையாது.

யோகியர்களுக்கு உள்ளத்தில் நாதனைத்தரிசிக்க வல்லமையிருப்பதால், அக்கினிவிக்கிரகாதிகளை முன்னிட்டு நாதனது உபாசனைவேண்டாவிடினும், அக்கினி விக்கிரகாதிகளில் ஈசனை உபாசிக்கக்கூடாதென்றாவது அவைகளில் நாதன் இல்லையென்று

வது, அவர்களால் நிஷேதிக்க வுபகாரப்படாது. அவ்விதயோகியர்களுக்கும் உள்ளத்திற் கண்டநாதனை எங்குமிருக்கின்றதாகச் சொல்லிய ஞானசாஸ்திரத்தில் அதிகாரமுண்டு.

எங்குமீசனையறிந்த ஞானிகளும் அக்கினி விக்கிரகம உள்ளும் இவற்றில் கடவுளில்லையென்றுவது, இவற்றால் நாதனை உபாசிக்கக் கூடாதென்றுவது, நிஷேதிக்கத் தகாதவராவார்கள்: எவர்களாவது நிஷேதித்திடில் நிஷேதித்தவர்களே அற்பபுத்தியாளரென நிஷேதிக்கப்படுவார்கள். எதனாலெனில்? எங்குமிருக்கின்றவன் எங்கேதானிருக்கத்தகான். மேலும் எல்லாசசாஸ்திரங்களையும் அப்பியாசித்த போதிலும் நாதனது கருணையன்றி அவனது சுபாவம் வெளியாகத்தகாது; அவனது கருணை கிடைக்க வேண்டுமானால், உறுதியாக அவனை நம்பிவணங்கச் சித்தித்திடும். அவ்வாறு அவனைக்குறித்து வணக்கஞ்செய்யும் விஷயத்தில், சரியை கிரியை யோகம் ஞானங்களில் எந்தமார்க்கமாக உறுதிப்பட்டு நம்பிவணங்கிடிற்றான் கிருபைசெய்யத்தகான்.

ஆகையால் சரியை கிரியை யோகம் ஞானமென்னும் நான்கிலும் விசுவாசமுடையவர்களான கர்மடன் பக்தன் யோகி ஞானி இவர்களுக்கு [illegible]துகளிற் சொல்

வியநடக்கைக்குத் தக்கபடி பலன் கிடைக்கவேண்டி மானால், ஈசனது கருணையன்றிக் கிடையாது: ஈசனது கருணைகிடைக்கில எம்மார்க்கத்தாரிலும் எவர் பெரியர் எவர்சிறியர். ஆகையால மேற்சொல்லியசமயங்களில் ஒருசமயத்தையுந் தீயதென்றுரைக்கத்தகாது

மேலும் சமயங்களே பலனைக்கொடுக்குமா? ஒருஜமானுக்குப் பாத்தியப்படாத ஒருகாட்டில் ஒருவன் வேலைசெய்யில், அவ்வேலையே அவனுக்குச் சம்பளங் கொடுக்கத் தகாததுபோல, சமயங்களதாமே பலனைக் கொடுக்கத் தகாது. ஆகையால எச்சமயத்தோருக்கும்நாதனே பலதாதாவாகக் காணப்படுவதால எச்சமயத்தோர்களும் அந்நாதனைத் திதநு உண்மையுடன் ஸ்துதிசெய்யவேண்டுமேயன்றி நாதனடியவராகியஎச்சமயத்தோரையாவது எச்சமயத்தோராயினும் நிந்திப்பார்களாகில் அவர்கள் நாதனையே நிந்தித்தவர்களாவார்கள்.

ஆலயாதிகளில் விக்கிரகாதிகள் மூலமாக ஈசனைப் பூசித்து நம்பி வணங்கிவருவதில், விக்கிரகாதிகள் பின்னப்படும்போது ஈசனும் அழிவுடையவனென்று

---

பலதாதா-பிரயோசனந்தருபவன்.

சங்கிக்கவுங் காரணமில்லை: விக்கிரகாதிகளெல்லாம் நாதனுக்கு நம்பியிருந்திடில் அநுசரி; ஒருஅரசனது தேகத்தை முன்னிட்டுச் சகலஜனங்களுக்கும் அரசனென்ற அதிகாரத்துக்குத் தக்க உபசாரஞ்செய்ய நம்பிக்கை வந்திருந்திருந்தும், அவ்வரசனது தேகம் நீங்கினகாலத்து அவ்வரசனது அதிகாரம் மற்றொருதேகத்தை முன்னிட்டுங் காணப்படுவதுபோல, நாதனது உபாசனையும் மற்றொரு விக்கிரகாதிகளை முன்னிட்டுச் சித்திக்கத் தகலாம்.

- வேதங்களுக்கு,,“ எங்கும் ஈசன் இருக்கின்றனென்று தெரியப்படுத்த வேண்டுவதே,, தாற்பரியமானல் அக்கினி விக்கிரகாதிகளிலே மாத்திரம் உபாசனைசெய்தலை விதிக்க வேண்டுவதேனெனில்? ஈசனையே அறியாதவர்களுக்கு ஈசனைப்பற்றிய யாதுவருவதின்பொருட்டு, அக்கினி விக்கிரகாதிகளிற் கூறினபோதிலும், அதி சமுத்திரம் சிலவிருக்ஷம் சிலபக்ஷி சிலமிருகம் சிலமனிதர் என்னும் இவைகளில், நாதனைப் பாவித்துத் தொழும்படிக்குஞ், சாஸ்திரத்தில் அருளிச்செய்யப்பட்டிருக்கிறதானிருக்கின்றது.

எங்கும் வியாபகமாயும் அரூபமாயும் இருக்கின்ற ஈசனை ஒருபிம்பாதியில் அடங்கிய [illegible] ரூபியுடை

யவனையும் உபாசிக்க வேண்டுமானால், நிராகாரனுக்கு ஆகாரம் ஒப்பிப்பட்டிடில் அது சரி, நிராகாரனுக்கு ரூபங்கூடாதென்னிலோ நிராகாரனாயிருக்கிற நாதனுக்கு, இவ்வித நாமரூபங்களுடைய இவ்வியவகத்தை உண்டுபண்ண வல்லமை இருக்கிறதாக ஒப்பிடில், இவ்வித ஜகத்தின் பொருட்டு நிர்விகாரமாக அதுக்காக வல்லமையுடையை, ஒருடலைத் தனக்கு உரியதாகக் கற்பிக்கவல்லமையுடையவனுமாக வேன் ஆகத்தகான்.

மேலும் சீவர்கள் கூடத்தங்கள் ஸ்தூலதேகவியாபாரத்தை நீங்கி, சொப்பனாவஸ்தைக்குப் போகுங்காலத்தில், நானாவிசித்திரமுடைய ஜகத்தைக் கற்பித்து, தங்களுக்கு உரியதாக ஓருடலையுங் கற்பிக்க வல்லமையுடையவர்களாகக் காணப்படுகின்றார்கள்; பின்பு சுழுத்தியில் இவ்விதம் இரண்டுடலையும் விட்டு நிராகாரமாயுங் காணப்படுகின்றார்கள்; அவ்வித சீவர்களே நிராகாரமாயிருந்து சாகாரம் போலத் தோற்றலாமாகில், நிராகாரனாயிருக்கும் ஈசன் தன்னாற் கற்பிக்கப்பட்ட ஜகத்துக்கு அருள்செய்யும் பொருட்டு, ஏன் ரூபமுடையவனாகமாட்டான்? அன்றியும் எங்குமுள்ள ஆகாயம் ஒரு ஊசித்துவாரத்திலுமிருக்குமானால், எங்குநிறைந்திருக்கும் நாதன் ஏன் பிம்பாதிகளில் உபாசனையின் பொருட்டிருக்கத்தகா.

காண்; சுருக்கமுடையது விஸ்தாரமாயிருக்கத்தகாதே
யன்றி விஸ்தாரமுடையது சுருக்கமாய்க் காணப்படலா
ம். நல்லது, வேதமென்றால் அதின்பொருள் யாதெனில்
* வேதயுக்தி வேதமெனப்படும். அதற்கு அவ்வளவு வ
ல்லமையேதெனில் நாதனிடத்தினின்றுமுண்டாயிரு
ப்பதினாற்றான். அவ்விதவேதம் பிராமணர்களுக்குமுகமாக
இருக்கு எசுர் சாமம் அதாவணம் என்னும் நான்கு வ
குப்பாயிருக்கின்ற, இந்தவேதமொன்றுமாத்திரந்தான்
அதுமேயன்றி மற்றமதத்தார் சொல்லிய யாதொருசா
ஸ்திரங்களும வேதமாகத்தகாது; ஏதெனில் மற்றெந்த
மதத்திலும் சொல்லிய சாஸ்திரங்கள் அந்தந்தமதங்
களின் கோட்பாடென்ன, அந்தந்த தேவாதிகளின்
தேசங்களிலுள்ள ஜனங்களின் நடக்கையென்ன, அத்
தேசத்திலுள்ள பருவதம் நதி விருக்ஷம் மற்றவஸ்துக்
களென்ன, இவைகளைச்சொல்லுங்கால் அந்தத்தேசத்திற்
றானே சிலவஸ்துக்களையும், மற்றொருதேசத்திலுள்ள
மதங்களின் கோட்பாடுகளையும், அவற்றிலுள்ளவஸ்து
க்களையும், வெவ்வேறு நாமமுடையவையாகச் சொல்
லாததினாலும், உண்மையைத் தெரிவிக்க அச்சாஸ்திர
த்தில் வல்லமையில்லாததினாலும், இந்தவேதத்தில் சக

---

* வேதயுக்தி - நாதனையுள்ளபடி தெரிவிப்பது.

ஸஜகங்களையும் அவற்றிலுள்ள சகல வஸ்துக்களையும் சகலமதங்களையும், அந்தந்தக்கோட்பாடுகளோடும தகுந்த யுக்தி யநுபவங்களோடுங்கூட நிரூபித்து, அந்தந்தச்சாஸ்திரங்களில் அகப்படாத உண்மையையும் இனி வரப்போகிறதும் இப்போது நடக்கின்றதும் முந்தியிருந்ததுமாகிய பூதங்களையும் விவரமாகவிளக்கி, அவைகளில் உண்மையில்லாததற்குக் காரணமும் இன்ன இன்ன மதவாதியர்கள் இன்ன இன்ன காரணத்தால் உண்மையற்றவர்களானார்களென்றும், இவ்வேதத்திற்சொல்லிய பொருளை அவரவர்களறிந்த பாஷைகளிலே விசுவாசத்தோடுங்கூட விசாரித்திடில், எவர்களாலும் இவ்வேதத்திற்சொல்லிய உண்மையான யுக்தியநுபவங்களால் தள்ளுவுபகாரப்படாமல ஒப்பத்தகுமென்றும், சுருதியுக்தியநுபவங்களாற்காணப்படுவதால், அப்படிக்கொட்டிலும் வல்லமை நாதனது வாக்குக்கன்றி மற்றொரு சாஸ்திரத்துக்கும் கூடாததினால், நாதனது வாக்கே வேதமானதால், அவ்வாக்குஞ் சர்வஞ்ஞானதான அவ்விதலக்ஷணம் இவ்வேதத்துக்கே யிருப்பதால். இதையே வேதமெனக்கூறத்தக்கது.

இவ்விதவேதத்தின் உண்மையுள்ளபடி அறியவேண்டியதென்றுரியானவன், "உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் பிரச்சரம் முதலாகிய ஸ்வரஞாயமென்ன, அங்

தஸ்வதத்தை விட்டுவந்த மாத்திரை விசர்க்கம் ஸ்தாயி கலா இவை முதலாகிய ஞானமென்ன, மந்திரம் வியாகரணம் நிகண்டு சந்தோபிசிதம் நிருத்தம் சோதிடம். இந்த ஆறு அங்கஞானமென்ன, பதம் கிரமம் கனம் ஜடை இவற்றின் ஞானமென்ன, * புராணம் பதினெட்டு அதின் @ உபபுராணம் பதினெட்டு மநுக்களால் விஸ்திரிக்கப்பட்ட ✡ ஸ்மிருதி பதினெட்டு இவைகளையும் பார

---

* புராணம் பதினெட்டாவன- பிரமம், பதுமம், வைணவம், சைவம், பாகவதம், பௌஷ்யம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்நேயம், பிரமகைவர்த்தம், இலிங்கம், வராகம் ஸ்காந்தம், வாமனம், கூர்மம், மச்சியம், காருடம், பிரமாண்டம் என்பனவாம்.

@ உபபுராணம் பதினெட்டாவன- உசனம் கபிலம் காளிகம் சனற்குமாரம் சாம்பவம் சிவ [illegible] சௌரம் தூர்வாசம் நந்திசம் நாரசிங்கம் நாரதீயம் பராசரம் பார்க்கவம் ஆதித்திரம் மாரீசம் மானவம் வாசிட்டலைங்கம் வாருணம் என்பனவாம்.

✡ ஸ்மிருதி பதினெட்டாவன- மநு அத்திரி ஔசநசம் விஷ்ணு யாஞ்ஞவற்கியம் உசனம் ஆங்கிரசம் யமம் ஆபஸ்தம்பம் சம்வர்த்தம் காத்தியாயனம் பிரஹஸ்பதி பராசரம் வியாசம் சங்கலிகிதம் தக்கம் கௌதமம் சாதாதபம் வசிட்டம். இவற்றுள் சங்கலிதம் யுகம் [illegible]

முதலாகிய இதிகாசங்கள் ஈசனால் மொழிந்தருளப் பட்ட சைவாகமம் ✠ இருபத்தெட்டு வைகானசம் பாஞ்சராத்திரம் முதலிய வைணவாகமங்கள் இரணிய கர்ப்பமென்ற ஆகமம் வார்கஸ்பத்தி. யாமளம் இவற்றி ன்ஞானமென்ன, சாம்பரமுதலிய அறுபத்துநாலுகலை ஞானமென்ன, "இவைகளெல்லாம்,, ஞானமுடையவ னையும் குருசம்பிரதாயமாகக் கிரகித்தவனையும் ஈசன ன் கருணைக்கு உரித்தானவனையும்" இருக்கவேண்டும். இவையே முன்சொல்லிய வேதப்பொருளில் அதிகா ரியின் இலக்ஷணமாம்.

இப்படிப்பட்ட வேதப்பொருளின் விவரம், பதத்தை விட்டுவந்த பொருளொன்று வாக்கியத்தை விட்டுவந்த பொருளொன்று அக்ஷரத்தை விட்டுவந்த பொருளொ ன்று வேதம் மந்திர ரூபமானதால் மந்திரத்தை விட்டு வந்த பொருளொன்று வேதம் யாகசாதகமாயிருப்பதா ல் பிரயோகத்தை விட்டுவந்த பொருளொன்று வேதம்

---

✠ சிவாகமம் இருபத்தெட்டாவன - காமிகம் யோகஜம் சிந்தியம் காரணம் அசிதம் தீப்தம் சூக்குமம் சகத்திரம் அஞ்சுமான் சுப்பிரபேதகம் விசயம் நிசுவாசம் சுவாயம்புவம் அனலம் வீரம் இரௌரவம் மகுடம் விமலம் சந்திரஞானம் விம்பம் புரோற்கீதம் லளிதம் சித்தம் சந்தானம் சருவோத்தம் பாரமேச்சுரம் கிரணம் வாதுளம் எனப்படுவனவாம்.

சுரூபப்பானால் சுரத்தையிட்டுவந்த பொருளென்று இவ்வளவு பொருள கரும் அதிகாரியின் பேதத்தால் சரியை கிரியை யோகம் ஞானம் இந்த நான்கு அதிகாரிகளுக்கும் உபகாரப் படும். இவ்வண்ணமாகப பொருளகளை அறியவல்லமையுடையவனுக்குத்தான் வேதங்களின்சுபாவம்வெளியாகும்.

முற்றிற்று.

பஞ்சிரொண்டாவது.

நாமார்த்தவைப்வமுறைத்தது

பிரகரணம.

க- •சிவ• என்பதின்பொருள்- அழிவில்லாத தனைமையாயிருந்து- விளங்கிய •ஆனந்தமாம் மங்கள மென்ற• பொருளுடையச்சசிதானந் ...ப்படும்.

உ மகாதேவ-ன- ள்- பூரணத்துவகும் பூரணமுனவும் இரண்டாம்வஸ்துவை முக்காலத்திலும் உடைத்தாகாத தானென ஞானசுவரிய மகிமையால் மகத்துய்விளங்கிய தெனவும்படும.

ந- ஈசுவர-ன- ன-முத்தொழிலுக்குமுதலாயின்று முத்தொழிலுக்கும் பாதிப்படாத தெனப்படும்

ச- சங்கர- எ-ள்- ஜகமனைத்தற்கும் அனேகவித தானவிசேஷத்தால் சுகத்தைக்கொடுத்துச்சுகிப்பித்தும், மற்றொருதவியின்றித் தானுஞ்சுகரூபமாயிருக்கின்றதெனப்படும்.

ரு- நீலகண்ட - எ-ள்- உடலாய்விளங்கிய நானாவவஸ்தைகளில் மூன்றுமவஸ்தையாங்கண்டத்தில் அநேகஞானமாங் காளகூடவிஷத்தைத் தரித்தது, துரியசுபாவமாந்தான் அவிநாசியாய்க்கொண்டு மற்றமூன்றவஸ்தையாகு சீவசுபாவத்தைத் தன்வல்லமையால் இரக்ஷித்திருந்ததெனப்படும்.

சா- திரிநேத்திர- எ-ள்- மூன்றவஸ்தையிலும் மூன்றுகண்ணாகவிளங்கிய விஸ்வதைஜஸப்பிராஞ்ஞர்களை மூன்றவஸ்தையிலும் மூன்றுகண்ணாக உடையதெனப்படும்

எ- சந்திரசூட - எ-ள்- சமத்காரத்தால சருவஜகத்தையுஞ் சித்துப்போல விளங்குவித்து, சித்தைத்தவிர வேறில்லையென்று ஜகத்தைநிஷேதித்து, விளங்கியுள்ளதன்னிலுபத்தை முடிவில் தானாகவிழுங்கி விளங்குகின்றதே அலங்காரமாக உடையதெனப்படும்.

அ- கங்காதர- எ-ள்- சுழுத்தியிற் சுபாவமாய் தன்மையைச் சூழ்ந்திருந்திடினும், அடையப்படாத போதுதோன்றிய பிராந்தியைநீக்கி, அவஸ்தைமூன்று

க்குஞ் சூக்ஷ்மமாய விளங்கியபிரஞ்ஞையை முடிவில தனக்கு வேறில்லாததாய்த் தரித்திருக்கின்றதெனப்படும்.

௯- சுபாங்கி- எ- ள்- தாம்புடியாம மூன்றுமுடிச்சுடைய மூலாவஸ்தையென்ற ஜடையை, முடிவில் தன்னைத்தவிர வேறில்லையெனத் தானாய்ச் சேஷித்த ஞானமெனப்படும்.

௰- பகவான்- ஆ- ள்- முத்தொழிலையும் மூன்றவஸ்தைகளிலும் பேதமாய் விளங்கிய ஜகத்ரூபம், மூன்றவஸ்தையுடைய முத்தொழிலும் தன்னைத்தவிர வேறில்லாததாக அறியச்செய்து, தானாகத் தன்னையறிந்து விளங்கியதெனப்படும்.

௰௧- திரியம்பக- எ- ள்- விராட்டு இரணியகர்ப்ப அந்தரியாமி மூவரும் தன்னிற்றோன்றியவர்களென்பதுவும், தன்னைத்தவிர அவர்கள் வேறில்லையென்பதும், தெரிவித்துத் தானாய் விளங்குகின்றதெனப்படும்.

௰௨. திரிபுராரி- எ- ள்- அதிஷ்டான ஞானமான தனது விளங்குதலாம் மந்தகாசத்தால், அவஸ்த்தை[illegible]ந்திரிபுரமெரிக்கப்பட அவைகளுந் தன்னைத்தவிர வேறில்லாதவைகளாகக் கொண்டு, தானாய் விளங்கியதெனப்படும்.

௰௩. காலாரி- எ- ள்- அஞ்ஞானம் மாயை காலத்

துவம் இவ்வளவும் அதிஷ்டானமாந் தன்னைத்தவிர எ க்காலத்திலும் வேறில்லையென நிச்சயித்துத், தானாய விளங்கியதெனப்படும்.

௰௪. கிரீச-எ-ள-பரை பசியந்தி மத்திமை வைகரி இவைகளாய விளங்கிய நாதங்களைத், தன் சத்தியா ல் விளங்குவித்து, அவைகளாயுந் தன்னைத்தவிர வேறி லலாததாகக்கொண்டு, தானாக விளங்கினமெதுவோ அதுவெனப்படும்.

௰௫. மிருகதர-எ-ள-பசுதத்துவமாய் விளங்கிய சீவர்களைத் தன்சத்தையால் விளங்குவித்து, அவைகளை த் தன்னைத்தவிர வேறில்லாததாயத்தரிப்பித்துத் தானு ம் விளங்கியதெனப்படும்.

௰௬. பசுபதி-எ-ள-முன்கூறியபடியே

௰௭. ஸாம்ப-எ-ள-தானே தன்சக்தியாற் சகலமாய் விளங்கி அசேதனப்ரபஞ்சங்களையும் தன்னைத்தவிர வே றில்லாததாகக்கொண்டு, தானே தனிக்குச் சக்தியாய வி ளங்கியதெனப்படும்.

௰௮. கிரிச-எ-ள-முன் கிரீசநாமத்திற்கூறியபரை. [illegible] நான்குபேதமுடைய நாத தத்துவமாம் உபாதி டத்தின் உட்பொருளாய் விளங்கியதெனப்படும்.

௰௯. நடேச-எ-ள-ஐந்தொழிலுக் குட்பட்ட ஜக ங்களைத் தன்சந்நிதானமாம் நடனத்தால் நடிப்பித்து

ச, சகலருடனமுந் தன்னடனத்தைத் தவிர வேறில்லா ததாகக்கொண்டு, தானேதன்னடனமாய் விளங்கியதெ னப்படும்.

௨௰- ஸ்ரீபரமேசா-எ-ள்-இச்சா ஞானக் கிரியை யெ ன்ற தானங்கள்சக்தியாற், சகலங்களாய்ப்பவித்து, அ வைகளைத் தன்னைத்தவிர வேறிலலாததாகக் கொண்டு, தானேய்விளங்கிய தெனப்படும்.

௨௧. காலவயிரவ-எ-ள் தானென்னும் தன்சக்தி யால் ஐந்துவித கலபேதமுடைய ஜகத்தாயப்பவித்து அவ்வித ஜகத்தையுங் கலனைசக்தியையுந் தன்னைத் தவி ரவேறில்லாததாகக்கொண்டு, தானேயவிளங்கிய தென ப்படும்.

௨௨- உன்மத்தசேகர-எ-ள- நானென்தென்ற அகங்காரமாகுமதையை நீங்கினவர்களாய் விளங்கிய பிரமவித்தியாகுருக்களுக்கு [illegible]யுங்கின்றிலங்கிய சைதன்னியமெனப்படும்.

௨௩- சரப-எ-ள்- சகல ஜீவர்களுக்குக்கலையுந் தனது விளங்குதலால் விளங்குவித்து, அவைகளைச் சுயம் பிரகாசமான தன்னைத்தவிர வேறில்லாததாகக் கொண்டு, சுவப்பிரகாசமான தான்மாத்திரமாய் விளங்கின்ற தெனப்படும்.

[illegible]ராரியை-எ-ள்-சகல நாமரூபமுடையதுக்குத் [illegible]

தகனசகத்தையால் வியாபித்து, அச்சகத்தையும் அச்சக்திலையயும் தன்னைத்தவிர வேறிலலாததாகக்கொண்டு, தானாய்நிறைந்த சைதன்னியமெனப்படும்.

உ- அச்சுத-எ-ள்-தானேதன்சக்தியால், ஜகத்தாப்த்தோற்றி, அந்தஜகமிருந்திடினும் நசித்திடினும் ஏற்றக்குறைச்சல்களின்றி ஏகசுபாவமாய் விளங்கிய சைதன்னியமெனப்படும்.

ங- மோக்ஷாத்-எ-ள-சீவர்களுக்கு நானாவாய்த்தோன்றிய ஜகத்ரூப சம்சாரத்தைத், தனது ஆத்மசுபாவத்தால் இல்லாமற்செய்து, அவர்களையுந் தானாகவிளங்குவித்து, மோக்ஷரூபமாய் விளங்கிய சைதன்னியமெனப்படும்.

ச- பத்மநாப எ-ள-தனது சக்தியாற் சகலஜகத்தையும் சங்கோச விகாசமுடையதாயளவிட்டு, அவ்விதஜகத்தையுஞ் சக்தியையுந் தனக்கு வேறில்லாததாய்த் தனனுளடக்கி, தானாய்நின்றதெனப்படும்.

ரு- மாதவ-எ-ள்-சகல ஜகத்துக்கும் வித்தாகிய மாயைக்கு மேலானவனும், தனக்குமேலாக ஒன்றையுங் கொள்ளாதவனையும், அந்தஜகத்தையும் மாயையையும் தன்னைத்தவிர வேறில்லாதவனாக்கொண்டு தானாக விளங்கியதெனப்படும்.

சு- ஹ்ருஷீகேச எ-ள்-சகலஜகத்தையும் சுகமேவிக்

தால் நூண்டிலின் மாமசதால் மசகங்களைப்போல சகலஜகத்தையும் பிரேதம்போலச் செய்யாநின்ற ஆனந்தமயகோசாபிமானியாம் ஜீவனென்ற அசுரனையும் சகலஜகத்தையும் தானென தன்னருளாம அநிஷ்டானவலைமைனல் வென்று இரக்ஷத்து தானாய்க்கொண்டு விளங்கிய தெனபபடும்.

எ- கேசவன எ-தானை ஆனந்தசுபாவமாய் தன்னிடத்தில சகலஜகத்தையும பிராணியுடையதாய் அவரித்து, ஆனந்தசுடாவமாந்தனனைத் தவிர வேறில்லாததாக்க கொண்டு தானாய் நின்றதெனபபடும்.

அ- அனந்த எ-ன காலபக்ச வஸ்துபரிசசேதமில்லாத தெனப்படும.

கூ- வாமனை-என மூன்றவஸ்தைகளிலும மூதலொழிலும் வியாபகமாயிருந்து சகலஜகத்தாலும் அறியப்படாததாய் சகலத்தையும் தனனைத்தவிர வேறிலலாததாய்க்கொண்டு சூக்குமமாய் நின்றதெனப்படும்.

ய- இருஷிகேச-எ-ன்-சகலஜகத்தின் ஏகாதச இந்திரியங்களைத் தன்சந்நி தானத்தால் விளங்குவித்து, தன்னைத்தவிர அவைகளை வேறில்லாததாய்க்கொண்டு தானாய்விளங்கியதெனப்படும்.

யக-ஸ்ரீராம-எ-ன்-புண்ணிய பாவமுடைய சகலஜநங்களை யுந் சிக்ஷாரக்ஷணைகளால் சரியெனமேவை

செய்து, தன்னருளால் விஷயசுழுத்தி சமாதி இவைகளில் ஆனந்தமாய்விளங்கிய தானென தன்சக்தியால சகலங்களையும் ரமிப்பித்து, சகலத்தையும் தன்னைத்தவிர வேறில்லாததாய்க்கொண்டு தானாய்நின்ற தெனப்படும்.

௰௨- திரிவிக்கிரம – எ – வ – மூன்றவஸ்தைகளையும் முத்தொழிலையும் கிரியையும தன் ஸ்வபாவத்தால் அதிக்கிரமித்து அவைகளையும் தன்னைத்தவிர வேறில லாததாய்க்கொண்டு தானாய்விளங்கியதெனப்படும்.

௰௩- கிருஷ்ண – எ – வ – ஆனந்த சுபாவமாந் தன்து சக்தியால் சகலங்களையும் புஷ்டிபாபித்து, சகலங்களையும் அதிபோகத்துடன தனனிடத்திற் பிரேமையுடையதாகச் செய்து அவைகளைத் தன்னைத்தவிர வேறிலலாததாக விழுங்கித் தானாய் விளங்கியதெனப்படும்.

௰௪- ஜனார்த்தன – எ – வ – சகல ஜகத்தும் தன்னால் சிருஷ்டிக்கப்படவும் பரிபாலிக்கப் படவும் சங்கரிக்கப் படவும், அதைத்தையுந்தன்னைத் தவிர வேறில்லாததாகக்கொண்டு தானாய்நின்றிலங்கியதெனப்படும்.

௰௫- தாமோதர – எ – வ – சகல ஜகமும் உண்டாகியும் விளங்கியும் அழிந்தும், தன் வியாபகத்துக்கு வேறில்லாததாகத் தன்னிடத்தில்லைவந்துத் தானாயிருக்கின்றதெனக்கூறிற்று.

௰௬- பங்கஜாக்ஷ- எ-ள் சகலசீவர்களையும் சேற்றிலகப்பட்ட பிராணியைப்போல அசைவுக்கிடமின்றிச்செய்யும்படி, அஞ்ஞானமாம் பங்கத்தில் மூழ்கி அறிவில்லாததாய்ப் புசித்தும், விவேகமாந் தனதருளால் ஞானக்கண்ணைத்தந்து சருவவல்லமையாக அவர்களுக்குத் தன்னை விளங்குவித்து, அவர்களையும் தன்னைத்தவிர வேறில்லாததாகக் கொண்டு தானாயத் தரித்தவனெனப்படும்.

௰௭- நாரசிம்ஹ எ-ள்- அநேக நாமரூபங்களாய்த் தோன்றிய ஜகத்தை இரண்டாமவஸ்தையிற் சிதாபாச சிவஞானத்தால் விளங்குவித்து, மூன்றாமவஸ்தையில் ஜகத்தையுந் தன்னையும் அறியவல்லமையில்லாததாய்ப் புசித்த பிராணிகளுக்கு சிவபோதத்தைத், தனதருளால் விளங்குவித்து, சாக்ஷியாய்நின்ற தானென்ற தன் ஞானக்கண்ணால் அனைத்தையும் வேறில்லாததாகக் கொண்டு, தானாய் விளங்கிய கொள்கையினன்.

௰௮- வாராக- எ-ள்- சகலஜகத்துக்கும் மோகத்தால் முதலாக விளங்கிய நானென்ற ஆனந்தமய[illegible] சத்தை அநான்மப்பொருளாக நீக்கி, மேலான ஆன்மப்பொருளாய் விளங்கித் தன்னைத்தவிர அனைத்தும் வேறில்லையெனக்கொண்டு தானாய்விளங்கியதெனப்படும்.

௰௯- ஹம்ஸப்ரிய- எ-ள்- ஜடமான சகலஜகத்தையும்

தனது திருவருளாம் பார்வையாற் பார்க்க, அனைத்தும் ஞானவல்லமையுடையதாய் விளங்கிடச்செய்து, அவ்விதஞானவல்லமையுடைய அனைத்தும், தனது ஞானப்பார்வையாற் தன்னைத்தவிர வேறில்லாததாகக்கொண்டு, தானமாத்திரமாயச் சேஷித்தது எனப்படும்.

௨௰- கூடம்-என்-அக்கிரியமான தானே கிரியாமான அக்கினிவிரியுடைய சகலஜகங்களாய விரிந்து, அவைகளை அக்கிரியமான தனது சக்தியால அக்கிரியமான தன்னைத்தவிர வேறில்லாதகாய்டக்கிக்கொண்டு, சூக்குமமான தானய விளங்கியதெனப்படும். இந்நாமங்கள் யோகம ஆலயத்துக்காரணமெனப்படும்.

௨௧- நாசுதேவ-ன்- சகல இந்திரிய அந்தக்கரணங்களின்வேகமுடைய அவைகளுக்குமுன்னமே சலனமின்றி, அவ்விடங்களில் தனது அடைவு இருக்கின்றதாங்கவே விளங்குவித்து, அவ்வித தனது வேகவல்லமையைத்தவிர அவைகளுக்கு கமனசாமர்த்தியமும் வேறில்லையெனச்செய்து, அனைத்துந் தானாய்க்கொண்டுவினோதியதெனப்படும்.

௨௨- முதக்-ன்- தோற்றி மறையாநின்ற சகல ஜகங்களின் தோற்றுதலும் மறைதலும் தன்முகமாகச் சித்தித்து அனைத்துந் தானான தன்முதத்தைத்தவிர வேறில்லாததாகக்கொண்டு, முதன்மையான தன்மை

த்திருமாய்ச் சேவித்ததெனப்படும்.

உ- கணேச- எ- ள்- சகலஜகங்களின் பகிரிந்திரியம் அந்தரேந்திரியமாகிய சமஷ்டி வியஷ்டியான தேவகணங்களைத் தனது சன்னிதானத்தால் நியமித்து, அவைகளைத் தன்னைத்தவிர வேறிலவாககாகக்கொண்டு, தானே விளங்கியதென்னப்படும்.

௩- குமார- எ- ள்- சகலஜனங்களின் குச்சிதமாகிய அஞ்ஞானம முதலிய இவற்றைத் தனதருளால் இல்லாததாகச்செய்து, அனைத்தையுந்தானாக விளங்குவித்துத், தான்மாத்திரமாயத் தனித்ததெனப்படும்.

௪- சுப்பிரமணிய- எ- ள்- சீவேசப்பேதத்தோடுங் கூடிய அனைத்தையு முக்காலத்திலும் வேறில்லாமற்கொண்டு, தானாகப் பிரகாசித்ததெனப்படும்.

இவ்வித நாமங்களின் இலக்கணைப்பொருளாய் விளங்கிய நிர்க்குணப்பொருளை, ஜகமறிந்துய்யும்பொருட்டு இவ்வித சூக்குமார்த்தங்களை ஸ்தூலமாய அவதாரங்களிற் காண்பித்து, அதைஉபாசிக்கின்றவர்களுக்குச் சூக்குமமான தன்சுபாவத்தை அருளிச்செய்கின்றதென்பது தாற்பரியம்.

சொரூபமே ரூபமாயவ்வளவுருக்களாகிறது; ரூபமேநாமமாய் விளங்குகின்றது; நாமமு ரூபத்தைத்தெரியப்படுத்தி அந்தரூபமாத்திரமாய் விளங்கிடும். அவ்விதரூப

ம் தன்னைத் தியானஞ்செய்யாநின்றசாதகர்களின்மனம் தன்னிடத்திலயிக்க, தானும் சாதகர்களின்மனதோடும் லயித்துத், தன்னுதாரமான ஞானசுபாவமாகத் திரிபுடியற்றுவிளங்கிடும். அப்பொழுதுசாதகர்களின் தியான சாதனமான மனதிற பிரதிபிம்பித்த சிற்பிரசன்னு ஈவசைதன்னியம், அதிஷ்டானத்தைத்தவிர வேறில்லாததாகக்கொண்டு அதிஷ்டானமாத்திரமாய் விளங்கி அதிஷ்டானத்தின்றுள்ளால் விழித்தபின், அதிஷ்டானமான நாமே ரூபமாயும் நாமமாயும் நம்மைத் தியானிக்கும் மனம் சீவர்களாயும் தோற்றிவிளங்கிறோம் ஆகையால் நம்மைத் தவிர முக்காலத்திலும் வேறில்லையென அருளிச்செய்திடும்.

மேலும் சொரூபத்துக்கு எவ்வளவும்கிமையிருக்கிறதோ? அவ்வளவு மகிமைரூபத்துக்கும் நாமத்துக்கும். இருக்கவேயிருக்கிறது. அதெப்படியெனில்? ஏகசக்கிராதிபதியாகிய ஒரு மஹாராஜா தான் அரண்மனையில் தூங்குங் காலத்தில, சொரூபமாத்திரமாயிருக்கின்றமையால்? அந்தசொரூபத்தை மஹாராஜாவென்பதற்குத் தடையில்லை; நான் தூங்கினேனென்று மஹாராஜாவாற்சொல்லப்படுவதால். அவனே விழித்தபின் சிங்காசனத்திலே உடலான ரூபமுடையவனாய் மஹாராஜாவென்று உபசரிக்கப்படுபவனைக் காணப்படுவதால்.

அவனது சொரூபத்துக்கும் சொரூபமுடையவனது உ
டலுக்கும் பேதம் நினைக்கத்தக்கதில்லை. அப்படியே அ
வனது நாமாங்கிதமாயுள்ள முகர் அல்லது முத்திரைக்
கும் பேதம் நினைக்கத்தக்கதில்லை; மூன்றுக்கும் ஒன்
றுபோலவே உபசாரஞ்செய்யத்தக்கதுதான்.

மேலும் நாமாங்கிதம் முகருக்கு மகிமையதிகமாக
வுங்கூறப்படலாம். எப்படியெனில்? அரசனது சுபாவ
மும் அவனது ரூபமும் ஜகத்துக்குத் தெரியாதிருந்த
போதிலும், அவனது முகரால அவனது ஸ்திதி அறிய
ப்பட்டு அந்த முகரை அவனைப்போலவே மானிப்பதா
கக்காணப்படுகிறதால், முகரினுக்கு மகிமை அதிகமென
க்கூறுகலெப்படியோ? அப்படியே தேவர்களுக்குந்
தேவராகிய மஹாதேவரது சொரூபமும், ரூபமும் அ
வரது நாமத்தால் தெரியவேண்டியதிருப்பதால், நாம
த்துக்கும் அவரது ரூபத்துக்கும். அவரது சொரூபத்
துக்கும் பேதமில்லையெனவும். [illegible] ஞானந்தெரிய உ
பசாரஞ்செய்வதில் நாமத்திற்கு ஆதிக்கமெனவும் கூற
த்தக்கது. ஆகையால் பரமசிவத்தின் ஸ்வரூபத்தை அ
டையவேண்டுங் கருத்துடையவர்கள், அவரது திருநா
மத்திலும் அவரது ரூபத்திலும் அதிகபக்தியுடையவர்
களாயாகவேண்டும்.

முற்றிற்று.

## பதின்மூன்றாவது

## பஞ்சவக்திரவிளக்கமுறைத்த

## பிரகரணம்

பிரமா விஷ்ணு ருத்திர ஈசுர சதாசிவம் என்னும் ஐந்துதத்துவங்களையும், " ஈசான தற்புருஷ அகோர வாமதேவ சத்தியோஜாதமென்னும்,, ஐந்துமுகங்களாகத் தரித்துவிளங்கிய பரமசிவத்தைத், தனது இருதயகமலத்தில் அநுசந்தானித்து, அவ்வித பரமசிவத்துக்கும் ஜகத்திற்குமுள்ள ஐக்கியவிசேஷத்தால் சுவாநுபவத்தையடைந்து, சாதுக்கள்விளங்குந்தன்மையாவது.

பஞ்சதத்துவங்களாய் விளங்கிய பஞ்சமுகமுடைய பரமசிவத்தை இருதயத்தில்தியானித்து, அதில் தற்புருஷமுகம் நிவிர்த்திகலையுடைய பிரமாவானதால், அவ்வித உபாதியையுடைய அம்முகத்தைச் சகலமான கந்தம்பொருந்திய பிருதுவிதத்துவத்திற்கு அதிஷ்டான தேவதையாக விசாரித்து, ஒருகண்ணாடியில் பட்டணம் பிரதிபலிக்கின்றதுபோல, அம்முகத்தில் யாவத்பூமியும் அடங்கிவிளங்குவதாய் அநுசந்தானித்து, அவ்வித பூமிக்கும் அம்முகத்திற்கும் அபேதத்தையாலோசித்து, அப்படியே ஜலதத்துவத்தை வாமதேவமுகத்திலும் அக்கினிதத்துவத்தை அகோரமுகத்திலும் வாயுதத்து

வத்தைத் தற்புருஷமுகத்திலும் ஆகாசத்தத்துவத்தை ஈசானமுகத்திலுமாக ஐக்கியஞ்செய்து, அவ்விதபஞ்சமுகமுடைய பரமசிவத்தை அபேதமாய்த் தன்னைத் தவிர வேறில்லையெனப் பஞ்சகோசாதீதஞாகத் தியானித்து, த[illegible]துப்பிரகாசத்தினாலேயே தனதுபஞ்சேந்திரியங்களும் விளங்குவதாக அறிந்து, தனதுபஞ்சமுகத்தின் வல்லமையே ஒவ்வொரு இந்திரியங்களின் வல்லமையாய் விளங்குகின்றதென அறிந்து, அவ்விதவல்லமைகளால் பிரமாண்டத்தை வியாபிக்குங்காலத்தில் ஈசானதத்துவமாகிய சுரோத்திரேந்திரியவிருத்தியிற் பிரதிபலித்த தனதுசைதன்னியத்தால், வியாபகமுடைய பிரமாண்டத்தில இடைவிடாததன்மையாய் விளங்குகின்ற ஆகாயம் சத்தகுணமுடையதாகையால் ஆகாயமிருக்குமிடமெல்லாம் சத்தமிருக்கவேண்டுமாகையாற்சத்தத்தைத்தவிர ஆகாயம்வேறில்லையென நிருணயித்து, அவ்விதபிரமாண்டத்தில் உள்ளும்வெளியும் வியாபித்திருக்கின்றபடி சத்தத்தை அநுசந்தானித்து, அவ்விதபூர்ணநாதத்தைச் சுரோத்திரேந்திரியவிருத்தியால் வியாபித்து, அவ்விதசத்தத்தை ஆகாயவிஷ்டகாரியசாங்கியத்திக்கலையாகவும் அவ்விதசுரோத்திரேந்திரியவிருத்தியை ஈசானதத்துவவிஷ்டகாரணசாங்கியத்திக்கலையாகவும், அவ்வாறு இரண்டுவிதமாகத் தோற்றிக் காரியகாரணமாய்,

விளங்கிய சாந்திய நீதசக்தியைத் தவிர சத்தரும் சத்
தத்தைவிளங்குவிக்கின்றவிருத்தியும் வேறில்லையென
த் தெளிந்தா, அவ்விதசக்தியும் சக்தனானநம்மைத்தவி
ர வேறில்லையென அநுபவிக்க, ஈசானதத்துவரும ஆதி
ன்சக்தியானசாந்திய நீதகலையும நம்மைத்தவிர வேறில்
லையென அநுபவத்திற்கு வருநம.

இப்படியே தற்புருஷ தத்துவமாகிய தொக்கிந்திரி
யரும் சாந்திகலையும சகலபிரமாண்டங்களிலும் உள்
ளும் வெளியும் வியாபித்த ஆகாயத்தில உள்ளடங்கிவி
ளங்கிய ஸ்பரிச குணமுடைய வாயுதத்துவத்தைஸ்பரி
சகுணமாத்திரமாக அறிந்து அவ்வித வியாபகஸ்பரிச
த்தை உள்ளபடி அநுசந்தான விசேஷத்தால் அநுசந்
தானித்து, தன் தேகத்தில ஸ்பரிச குணத்தைத் தொ
க்கிந்திரியம் வியாபித்து அறிவதுபோல, தியானித்த
வியாபகமுடைய ஸ்பரிச குணத்தைத், தனது தொக்
கிந்திரியத்தால் விரும்பியத்தறிய, வாயுவில் ஸ்பரிசகுண
மாய் விளங்கிய காரியரூபசாந்திகலையும் தொக்கிந்திரி
யவிருத்திரூபமாய் விளங்கித் தற்புருடத்தின்காரணரூ
பசாந்தி கலையும் வியாபகமாய் அநுபவிக்க, அவ்வித ச
க்தியும் சக்தனான நம்மைத்தவிர வேறில்லையென அ
நுபவத்திற்கு வருநம.

அப்படியே அகோரதத்துவமான சோத்திரேந்திரியத்

தால் பிரமாண்டத்தில் வியாபகத்தன்மையுடையவாயு தத்துவத்திலுள்ளடங்கிய அக்கினி தத்துவத்தை ரூப குணமாக ஆலோசித்து, அவ்விதரூபத்தைத்தவிர அக்கினிவேறில்லையென அறிந்து, அவ்விதரூபத்தைத்த குந்தபடி வியாபகமாய் அநுசந்தானித்து, வியாபித்திய அவ்வித இந்திரிய விருத்தியில விளங்கிய அகண்டரூபத்தைக் காரியரூப வித்தியாகலையெனவும், அதை விளங்குவிக்கின்ற இந்திரிய விருத்தியை அகோரதத்துவத்தின் காரணவித்தியாகலையெனவும அறிந்து, அவ்வித இரண்டுசக்தியும் சக்தநாகிய நம்மைத்தவிர வேறில்லையென அநுபவத்திற்கு வரும்.

அப்படியே வாமதேவதத்துவமான பஞ்சேந்திரியத்தால்பிரமாண்டத்தை, உள்ளும் வெளியும் வியாபித்த அக்கினித்தத்துவத்திலுள்ளடங்கிவிளங்கிய அப்புதத்துவத்தை, ரசகுணமாக நிதானித்து அவ்விதரசத்தை எங்கும் நிறைவுடையதாய அநுசந்தானித்து, அவ்விதபூரணமாய்விளங்கிய ரசத்தை வியாபித்தறிய அவ்வித இந்திரியவிருத்தியில் விளங்கிய இடைவிடாநிறைவுடைய ரசகுணத்தைக் காரியரூப பிரதிஷ்டாகலையெனவும், அதைவிளங்குவிக்கின்ற இந்திரிய விருத்தியை வாமதேவத்தின் காரணரூப பிரதிஷ்டாகலையெனவும் தெளிந்து, அவ்வித இரண்டு சக்தியும் சக்த

ஞன் தன்னைத்தவிர வேறில்லையென அநுபவத்திற்கு வரும்.

அப்படியே சத்யோஜாதமான ஆக்கிராணேந்திரியத்தால் ஜகத்தை வியாபித்து விளங்கிய ஜலதத்துவத்தில், உள்ளடங்கி விளங்குகின்றதான பிருதுவி தத்துவத்தைக், கந்தத்தைத்தவிர வேறிலலையென நிருணயித்து, அவ்விக்கந்தத்தை அநுசந்தான விசேஷத்தால் வியாபகமாய் அநுசந்தானித்து, அவ்வித வியாபகநந்தத்தை வியாபித்திருப்ப அவ்வித இந்திரிய விருத்தியில விளங்கிய கந்தகுணத்தைக் காரியரூபநிவிர்த்திகலையெனவும், அதை விளங்குவிக்கின்ற இந்திரிய விருத்தியைசத்யோஜாதத்தின் காரணரூப நிவிர்த்திகலையெனவும், அதிந்து அவ்வித இருகலையாய் விளங்கிய சுத்தியும் சத்தஞன் தன்னைத்தவிர வேறிலலையென அநுபவத்திற்குவரும்.

இனித் தன் ஸ்தூலசரீரமுதல சகல தூலசரீரத்தோடுங்கூடிப் பாஞ்சபௌதிகபஞ்சபூதங்களாய் விளங்கிய சகல ஜகமும் பஞ்சேந்திரியங்களாய் விளங்கிய ஞானேந்திரியத்துவங்களைத்தவிர வேறில்லையென்று, "அவ்விதபஞ்சதத்துவங்களாய்," விளங்கிய பஞ்சேந்திரிய விருத்திகளுடனபஞ்சகலைகளென்னை, அவ்விதகலைகளில் தக்கையவிளங்கிய ஐந்து பேதமுடையசக்தனென்ன,

இவற்றின் ஐக்கிய விவரமாவது.

கந்தகுணமானது பிருதுவிரூபமானதால், அப்பிருதுவி ஜலத்தினிடமாய் விளங்குவதால், அவ்விதஜலம் ரசரூபமானதால், அவ்விதரசத்தைத்தவிர கந்தமும் வியாப்திரூபமானதால, இல்லாததாய்க்கொண்டு ரசத்திலடங்கிவிளங்கும், அவ்விதகந்தத்தை வியாபித்த காரணநிவிர்த்திகலையும், அதின் சக்தியான சம்யோஜகமென்று ஆக்கிராணேந்திரிய சைதன்னியமும் ரசத்தோடுங்கூட வாமதேவதத்துவமான ரசனேந்திரியத்தின்விருத்தியான காரணபிரதிஷ்டா கலையையுடைய சக்தனும் இந்திரிய சைதன்னியத்தில் அடங்கி நிற்கும்.

அப்படியேகாரண சம்பந்தியாதிதகலைவரையும் அடக்கிட விளங்கும், இந்திரிய விருத்திகளான கலாபேதங்களில்லாததாய்க்கொண்டு ஜகப்பிரளயகாலத்திலும் இல்லாததாகவே ஆகிவிடும். இவ்விதம் இந்திரியரூபமான சகாரணகலைகளும், சங்காரரூபமான சகாரியகலைகளும், ஜகத்தோடுங்கூட இல்லாவிடில் அந்தக்கரணமும மனம் புத்தி சித்தம் அகங்காரம் இந்நான்குக்கும்,, "இந்திரியங்களின் இடமாக விளங்கிய பஞ்சகலைகளைத்தவிர தானங்களுக்கு,, வேறு வல்லமைகள் இல்லாததினுல் சக்தியற்று அவைகளும் இல்லாததுகளாகவே

மனம் புத்தி சித்தம் அகங்காரமாகிய நான்கும் இல்லாவிடில், அந்தக்கரணம் வியாபாரசூனியமாய்க் கொண்டு இல்லாததாய் நசித்திடும்; நசிக்கவே அபார கருணாசாகரமாகிய தியானத்தில அநுபவிக்கப்பட்ட பரு சமூகமுடைய பரமசிவமே, கருணையால் அகண்ட சச்சிதானந்த பூரணமான கூடஸ்தஞான மாத்திரமாய் விளங்கி, தியாதாவைத்தவிர வேறில்லாததாகவே அநுபவிக்கப்படும்.

பின்பு அதிஷ்டான சச்சிதானந்தஞானமாத்திரமாய் விளங்கிய பரமசிவமாகியதான் விழிக்குங்காலத்தில், முன் உபாசநாகாலத்திற்கண்ட ஜகம், காரியரூபப்பிரபஞ்சகலை, காரணரூபப்பிரபஞ்சகலை, அவைகளின் ஐக்கியம் ஐக்கியத்தால் மனோபுத்தி சித்தாகங்காரம் அந்தக்கரணம இவற்றின் இல்லாமை, சகுணதியானகாலத்திலும் இப்பொழுதைய அவைகளின் விளங்குதல், தியானத்தில் சகுணமாய் விளங்கிய புருஷகப்பரமசிவம், அனைத்தும் அதிஷ்டானஞானரூபகூடஸ்தவியாபகப்பரமசிவமும் தன்னைத்தவிர வேறுகாணப் படாததினால், தன்னைத்தவிர வேறில்லையென அநுபவித்து, பெருங்கருணைக்கடலாகிய பரமசிவத்தின் காருண்ணியத்தைப்பிரமாச்சரியத்தோடும் ஸ்துதிக்க அப்படியேதியானக்

தத்திருப்தர்களாய் ஆகின்றார்கள்.

முற்றிற்று.

## பதினான்காவது
## தியானநுபவமுறைத்த
## பிரகரணம்.

தன்னுடலை இரத்தமாங்கிசாதி இல்லாத சருவாவயவங்களோடுங்கூடிய தேகாகார விருத்தி மாத்திரமாகச் சுத்திசெய்துகொண்டு, அவ்வித விருத்தி மாத்திரமாயுள்ள தேகத்தின் இருதயத்தில் எட்டிதழுடைய இரத்தினமயகமலத்தைத் தியானித்து, அதின்மத்தியில் அநேககோடி சூரியப்பிரகாசமாயுள்ள அபாரகருணாகரனையும் நீலகண்டனையும் சந்திரசூடனையும் உமையொருபாகனையும் கங்காதரனையும் விளங்குகின்ற நடராசமூர்த்தியை, சத்தியசங்கற்பத்தால் தியானித்து, சோடசோபசாரஞ்செய்து, அவரைச்சருவஞ்ஞனாகவும் சருவேசனாகவும் சருவகாரணனாகவும் சச்சிதானந்தனாகவும் துதிசெய்து, அக்காலத்தில் ஆனந்தபாஷ்பாதியாவிர்ப்பூருகி, சுவாநுபவவிசேஷத்தால் விருத்திவிகாரதன்னுடலைத்தவிர மற்றுள்ள சகலபிரமாண்டத்தையும் அதனுள்ளடங்கிய வஸ்துக்களனைத்தையும் பஞ்சபூதாம்ச

களையும் பார்த்து இல்லாததுகளாகச் செய்து, சுத்தஸ்படிக சங்காசமாய் விளங்கிய விருத்திரூபமான வஸ்துக்களைத் தோடுங்கூடிய பிரமாண்டத்தில் பிரதிபிம்பித்து விளங்கிய நடராசமூர்த்தியை எல்லாவிடத்திலும் தன்னிடத்திற்போல எங்குமுள்ளவனக அறிந்து, அவனது பிரகாசத்தினாலே சகலங்களும் பிரகாசிக்கின்றதாகவும், தான் முதலிய சகலங்களுக்கும் நானென்றுநின்பொருள் அவனெனவும், அவனைத்தவிர வேறில்லையெனவும், அறிந்து அவனது திருநடனத்தில் அதிர்ந்திலகுகும் ஒளியால் தனதுதேகமுதற்சகலஜகமும் மறைபட்டு அப்பிரகாசத்தைத்தவிர வேறில்லாததாக வே அநுபவிக்கப்பட, மின்னொளியிற் கண்ணொளிபடப் பட்டுவிளங்காதது போல மற்றும் அவ்விதபூரணப்பிரகாசத்தைஎதிரிட்டுப்பார்க்குந் திறமையில்லாததாகக்கொண்டு அவ்விதபூரணப்பிரகாசத்தில் இல்லாததாகவேலயிப்பிடும்; மலமில்லக்கிடில் திரிபுடியில்லாதநிலை முன் உபாசனகாலத்தில் பூரணப்பிரகாசத்தோடும் விளங்கிய அபாரதயாசாகரனுயுள்ள நடராசமூர்த்தியும் தின்று குருவினுருவல் அவ்வித பகதனைத்தவிர வேறில்லாதவனைக்கொண்டு அதிஷ்டானஞானமாத்திரமாக வேவிளங்கிடத்தெரிவான்.

பினபு அவ்விதபக்தனகிய தான் சமாதிசுகத்தினின்

றும் விழிக்குங்காலத்தில், சகலஜகங்களென்ன, அதுகளில் தன் துடலிற் போலவிளங்கிய நடராசமூர்த்திகளென்ன, அதுகளின்பிரகாசத்தில் ஜகம் இல்லாததாக மறைபட்டுப் பிரகாசமாத்திரமாய் விளங்கிய பூரணப்பிரகாசமென்ன அதில இல்லாததாகி யொழிந்தமனோலயமென்ன, பின்பு இருக்கின்றதுபோலுதித்த மனமென்ன, அனைத்தும் சச்சிதானந்தகனமாய்ச் சமாதியினுபூதியில் விளங்கிய அதிஷ்டானஞானரூப நிர்க்குணநடராசன்தானாகவே காணப்படுவதால், தன்னைத்தவிர அனைத்தும் முக்காலத்திலும் வேறிலலவேயிலலையெனத் தான்மாத்திரமாயச் சேவித்து இவ்விதபூதியை அருளிச்செய்த நடராசனது கருணையை என்னசொல்லுவோமெனமகிழ்ந்திட சம்புசங்கரவென மொழிதழுதழுத்திட அப்படியே அதிஷ்டானமாத்திரமாய் ஆனந்தக்கடலாகுதலு சித்தித்திடும்.

முற்றிற்று

பதினைந்தாவது

விபூதிமகிமையுரைத்த

பிரகரணம்.

விட்கியொன்றுமகத்தெனவும்மத்திமமெனவுமெலகு

வெனவும் இருவகைப்படும்: அவற்றில் மகத்தாவது அநேககோடி பிரமாண்டமாய் விளங்கிய ஜீவேசுரபேதமுடைய இப்பிரபஞ்சைசுவரியம்,, "எந்தசச்சிதானந்த சுபாவமான வஸ்துவின் தானென ஐசுவரியம்மிமாவிசேஷத்தால்,, முக்காலத்திலும் நிஷேதியாமல் நிஷேதித்ததாகச் சுயம்விளங்குகின்றதோ? அதுவேயாம்.

மத்திமமானது முசதியமெனவும் சாமானியமெனவும் இருவகைப்படும்: அவற்றில் முக்கியமாவது நானாபேதமுடைய ஜடமான இப்பிரபஞ்சத்தை * உளர்ணநாபிபோல தானே அபின்னநிமித்தோபாதானமாய்க் கொண்டு சிருட்டித்து, அதில் ஜீவரூபமாயும் அந்தரியாமிரூபமாயும் அநுபபிரவேசித்து அவ்விதசிவசுபாவமான ஜகத்தை அஸ்வதந்திரஐசுவரியமுடையதாய்,, "அந்தரியாமிஸ்வரூபமான ஸ்வதந்திரஐசுவரியமுடைய தனது ஐசுவரியத்தால்,, மேவிச், சருவசாக்ஷியாய்ச் சருவசம்பூரணமாய் விளங்கிய சவிசேஷப்பிரமசைதன்னியமேயாம். சாமானியமாவது பரதந்திரமான ஜாக்கிர சொப்பன சுழுத்தி இவ்வவஸ்தைகளில், அபிமானமுடைய ஜீவசைதன்னியத்தின் ஐசுவரியமேயாம்.

அல்ப்பமாவது அதிஷ்டானமான பரமேஸ்வரனை அடைந்துய்யும்பொருட்டு சாதனமாகச் வேதங்களிற்கூறிய விபூதியேயாம்.

* ஊர்ணநாபி - சிலந்திப்பூச்சி.

விபூதியென்றதின்பொருள் (விசேஷ) (பூதி)* விபூதி. எவனது ஐசுவரியத்தை அபேக்ஷித்து மற்ற ஐசுவரியங்கள் ஐசுவரியங்களேயல்லவோ? அதுவெனப்படும். (விசேஷேண) (பூதி) விபூதி. எவனது ஐசுவரியம் எல்லாஐசுவரியங்களுக்கு மேலானதோ! அதுவெனப்படும்.

இப்பொருளுடைய விபூதியில் சாதனவிபூதியென்பது சுருதிகள் சொல்லிய மந்திராதிசாதனங்களால் பசுவின் மலத்தை நீற்றி, அதில் நாசமில்லாத சுத்தவெளிவான நீற்றைப் பிரமபாவனையாற்பாவித்துத் தரித்திட ஜீவன் மோக்ஷமுடையவனாகின்றானெனக்கூறியது. இவ்விபூதி ஸ்தூலம் சூக்ஷமம் காரணம் என்று மூன்று பேதமுண்டயதாகும்; அவற்றில் ஸ்தூலமாவது பாசுபதவிரதம் சீரணவிரதம் சிவவிரதம் விரதம் தவுஷ, என்று இவ்விதமான அநேகபேதங்களாகப் பிரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது.

சாதனதிரவியத்தின் விரலாறு வேதத்திற்சொல்லிய தெவ்வாறெனில்; கிரியையிற்சொன்னபடிக்கண்டகண்டபாதிரிருணயம்பண்ணி, அதில் அக்கினியிப்பிரதிஷ்

---

* விபூதியெனினும், ஐசுவரியமெனினும், திரவியமெனினும், செல்வமும்.

டாபனஞ்செய்து, அதில்எங்கும் இடைவிடாக்தன் மையுடைய பரமசிவத்தை மந்திராதிகளிறற் பாவித் து,அதில் தித்துவஹோமங்கள் செய்து, அதிற் கோமயபி ண்டங்களைச் சிவபிண்டங்களாக மந்திராதிகளாற்பாவி த்தஹோமஞ்செய்ய, அவ்விதசிவபிண்டத்துக்கும்முன் அக்கினியிற்பாவித்தபரமசிவத்துக்கும் மந்திரவிசே ஷங்களால் ஐக்கியத்தைப்பரமகுருக்கள் முகமாகவி சாரித்து, அவ்விபூதியைச் சச்சிதானந்தகனமாம்பரம சிவத்துக்குவேறில்லாததாகவெண்ணி உத்தூளன தி ரிபுண்டரங்களாகத் தரித்திட, சகலபாவங்களுநீங்கி மேலான விபூதியின்பொருளையடையத்தகுஞ் சித்தசு த்தியுடையவனுய்ப்பவிப்பான் என்பதுதான்.

கோமயமென்பதுபசுவின்மலமானதால், பசுவென்று ல் உலகத்தில் கோவினிடத்திற்பிரசித்திபோல சீவனுங் குறிக்கப்படுவதால், சீவனதுமலம் அஞ்ஞானமாகையா ல், அவ்வித அஞ்ஞானத்தைச்சுட்டிட ஞானசுவரியந் தானகப்பிரகாசிப்பதால், அவ்விதப்பொருளைத் தெரி விக்கும்பொருட்டு ஸ்தூலமாகக்கூறியது; அவ்வித ஓ மத்தின் மந்திரார்த்தம் சருவசம்பூரணஞ்சக விளங்கிய சவிசேஷப்பிரமமேதனியமே மூமக்கினியெனப்படும்.

இதின்விவரம் பிருதுவி அப்பு தேயு வாயு ஆகாய ம், இசம்மாங் உதிரம் மேதஸ், மச்சை [illegible]

திரம் துவக்கு சட்சு சிங்ஙுவை ஆக்கிராணம், வாக்கு பாதம் பாணி பாயுரு உபஸ்தம், ஜாக்கிரம் சொப்பனம் சுழுத்தி, விஸ்வன் தைஜஸன் பிராஞ்ஞன்; ஆணவம் மாயிகம் கார்மிகம், இவ்வித உபாதிகளையுடைய பசுவானென்மலத்தை நீற்றுவித்து ஸ்வப்பிரகாசபரியாம்பரமசிவவிளங்குத்தலைத்தவிர வேறிலாததாகக்கொண்டு விளங்கும்படி அருள்செய்ய வேண்டுமென்று, ஈசனை வேண்டிவிதிப்படி ஓமவிசேஷத்தால வணங்கிட வணங்குவோன் பக்திக்குத்தக்கதாக ஈசன்தனதுகருணையால அப்படியேஅருள்செய்கின்றான்.

இவ்விதவிபூதி தாரணவிதி யெவ்வாறெனில்? சச்சிதானந்தசுபாவமாய் ஏகரூப இடைவிடாதிறைவுண்டய சருவதயாபரனை பரமசிவமே விபூதியிற் பாவிக்கப்பட்டிருப்பதால், அதிற் பரமசிவத்தை அபேதபுத்தி செய்து இவ்விதவிபூதியே பஞ்சபூதங்களும்பஞ்சவிஷயங்களும் தசேந்திரியங்களும் சருவசீவர்களும் சருவமுமெனவும், பரமசிவமாம்விபூதியைத்தவிர்ச் சருவமும் வேறில்லையெனவும் பாவித்து, அப்பரமசிவம் அகண்டமானதால் நகமுதற்சிரசுவரையிலும் வியாபித்திருப்பதாகப்பாவித்துப், பாவிக்கப்பட்டவிபூதியைத் தாரணஞ்செய்து, அகண்டபரமசிவத்தில் [illegible] [illegible] சீவன் மும்மலம் [illegible]

றக்கினி ரூபமாகிய ஜூரனி மூவுலகம் முத்தொழில் எல்லாந் திரிபுடியுடையதாய் மூன்றுபேதகத்தன்மையாய்த் தோற்றி விளங்குவதால், அவ்விதமான அனைத்தும் ஆதேயமெனவும், முற்கூறிய அகண்ட பரமசிவமே ஆதாரமெனவும், முடிவில் எல்லாம் பரமசிவமாகிய ஞானாக்கினியால் நீற்றப்பட்டுப்போவதாலும் அவ்வித நீற்றினால் உத்தூளனத்தின் பேரில் திரிபுண்டரத்தை மேற்சொன்ன பாவனைப்பிரகாரம் பாவித்து பக்தியோடு தரித்திடவேண்டும். இதுபதினைந்து பேதமுடையதாகலாம் அவைகள் ஜாதி சமயங்களில் உபகாரம்.

மத்திமத்தில் சாமானிய திரவியோற்பத்தியானது சாமானியசாமானியமெனவும் சாமானியமுக்கியமெனவும் இரண்டுபிரிவுடையதாகும். அவற்றில் சாமானியசாமானியமாவது தொண்ணூற்றாறு அங்குலமுடைய சரீரத்தில் மூக்கியபாகமாகிய மூலாதாரமுதற் சகஸ்திராரம்வரை ஆறாதாரங்களும் குதத்துக்குமேல் சிரசுவரை விளங்குவதால், அவ்வித ஆதாரங்கள் இடைபிங்கலை இவ்விரண்டிற்கும் மத்தியான சுழிமுனைநாடியைப் பற்றிவிளங்குவதால், அவ்வாதாரங்களில் பிரமவிஷ்ணு ருத்திரமகேஸ்வர சதாசிவ விந்து நாதம் பரை சிவம்வரை ஒன்பதும் தத்துவமும், "சூக்ஷ்மாதாரமென்றேயிங்கூடிய சடாதாரங்களுக்கு, அதிஷ்டான தேவதைகளாய்

விளங்குவதால் இவ்வித தேவதைகளைக் க்ருமமாக மேற் சொன்ன ஆதாரங்களில் அஷ்டயோகசகிததியா னமார்க்கமாயாவது,கேவலதியானமார்க்கமாயாவது, உள்ளபடிஅறிந்தநுபவித்து, அத்தேவதைகளை யுடைய ஒவ்வொருதத்துவத்தையும் மேலான ஒவ்வொருதத் துவத்தில் ஒடுங்குவித்து, மூலாதாரத்தினின்றும் மூலாக்கினியை உத்தீபனஞ்செய்து, அவ்வித அக்கினியினால் பஞ்சபூதங்களையுந்தகிப்பித்துப், பின்புகௌரூபமான பரமசிவமாம் அமுதத்தால் சகஸ்திராரத் தினின்றுஞ் சிரவிப்பித்து, பஞ்சகோச பஸ்மங் களை ஆப்பிலாவனஞ்செய்து, அதினின்று ஸ்தூல சரீரோற்பத்திசெய்து, அதிற்சடாதாரம்பொருந் திய சூக்ஷ்மசரீரத்தோடும் அநுப்பிரவேசித்து, அச்சி வத்தினின்றுஞ் சீவகலையைப்பிரித்து, ஸ்தூலசரீரத்தி ல் வியாபகஞ்செய்வித்து, அவ்விதசீவனை தனது ஆணவம் மாயிகம் காமிகம் என்ற பிரமக்கிரந்திவிஷ் ணுக்கிரந்தி ருத்திரக்கிரந்தி இவைமுதலான சீவ திரோதாயகசத்திகளை அதிசூக்குமமாய் அநேககோடி சூரியப்பிரகாசமாய் விளங்கிய குண்டலிசத்தியான சி த்கலையாற் பேதித்து, அத்திரோதானம் நீங்கியசீவனைச் சகஸ்திராரத்திற் பரமசிவத்தில் ஐக்கியப்படுத்தி, அச் சத்தியும் அதில் ஐக்கியப்படத் தேகவாசனைநீங்கித் தி

ரிபுடியற்றுச் சமரசானந்தகனமாய அநுபவத்துக்குவ ரும்; அவ்வித் சிவானந்தவிபூதியால் சீவனான தான் சி வோபாதிநீங்கிச் சிவோபாதியாக விளங்கத்தெரியுமே யாம். இது வேதத்திற்சொல்லியபடி யோகசம்பிரதாய த்தாற்கூறியது.

சாமான்யமுக்கியதிரவியோற்பத்தியாவது இருபத் துநான்குதத்துவமுடைய ஸ்தூலதேகத்தைப் பதி னெழுதத்துவமுடைய சூக்ஷ்மதேகத்தில் அடக்கஞ் செய்து, அவ்வித் சூக்ஷ்மதேகத்தைத அவித்தையாகு சூன்யாகாரகாரணசரீரத்தில் அடக்கஞ்செய்து, அக் காரணசரீரத்தை விட இரண்டுசரீரமும் வேறில்லவே யில்லையென் நிஷேதித்து, மூக்காரணசரீரமாகிய அவி த்தையே சீவனென பசுவின் மலமானதால், அக்கோமய த்தைச் சுழுத்திசாக்ஷியாந் துரியசிவசைதன்னியாக்கி னியூரில் தகிப்பித்து, அவ்வித தக்தமாம் அவித்தையின் சாரமே சாக்ஷிபோதமாய் விளங்குவதால், அவ்விதசா க்ஷிபோதமாம் விபூதியால் தன்னை விரசனைகவும் விமி ருத்தியுவாகவும் விசோகனைகவும் விபாவனைகவும் அறி ந்து, பின்பு சரீரத்திரயங்களையுஞ் சாக்ஷிபோதசக்தி யால்வியாபித்து, சாக்ஷிபோதமானதன்னிடத்தில் பழு தையிற்சர்ப்பம்போலக்கற்பிதமாயறிந்து, பழுதையை த்தவிர சர்ப்பம்வேறில்லையென்றறிந்து தெளிவதுபோ

ல் சாட்சியான சித்தாந்தன்னைத்தவிர சர்வத்திட[illegible] வே
றில்லையென்ற அநுபவோற்பத்தியாம்.

இனி முக்கியதிரவியோற்பத்தியானது முக்கியசாமா
ன்யமெனவும் முக்கிய முக்கியமெனவும் இரண்டு பிரிவு
டையதாகும். அவற்றில் முக்கிய சாமான்யமாவது மு
ற்கூறிய சாக்ஷியாந்துரியசைதன்னியத்தைச் சுருதிகள்
சொல்லியபடி பரமசிவமாக அறிந்து, அப்பரமசிவத்
தில், சகல ஜகங்களும் அம்புதியில் அலை நுரைகள்போ
லத் தோற்றிவிளங்குவதால், அவ்விதசருவபிரவஞ்சங்
களையும் அந்தந்த நாமரூபங்களோடுங்கூட குருபதே
சத்தாற் கிடைத்த அநுசந்தானவிசேஷத்தால் விஷயீ
கரித்து. அவ்விதசகலத்திலும் பஞ்சபூதாம்சங்களை இ
ல்லாதவைகளாகப்பிரித்திடில் தக்தபடம்போல சகலங்
களும் தத்தம் நாமரூபமுடைய விருத்திகள்மாத்திரமா
ய் விளங்கத்தெரியும்: அவ்வித பின்னபின்னாகாரநாம
ரூபமுடைய விருத்திமாத்திரமாய் விளங்கிய பிரவஞ்
சத்தில் அந்தந்தவிருத்திகளில் பஞ்சபூதோபாதிநீங்கி
டினும், அவற்றிற் பிரதிபிம்பித்த சைதன்னியம் நானா
பேதங்கள்போலவே விளங்கத்தெரியும்: அவ்விதபிரவ
ஞ்சசோபாதிகசமஷ்டி பிரமாண்ட விருத்தியிலுள்ள
டங்கிய நானாவுபாதியையுடைய சிவசைதன்னியங்க
ளை வியாபிக்கும் உள்ளும்வெளியும் ஏகாகாரமாய்ப் பூ

ரணமாய் விளங்கிய சருவசாக்ஷியானசோபாதிக பிர மசைதன்னிய மாகின்ற நம்மிடத்திற்றோற்றி விளங்கி ய, இப்பிரவஞ்சம் நம்மைத்தவிரவேறில்லையெனத்தெ ரிந்து, நாமேசகலருபமாய்விளங்குகின்றோம் பின்ன பின்னதிரிபுடியுடைய இச்சீவசைதன்னியங்களாகின்ற ஆதேயவஸ்துக்களுக்கு, நாமே ஆதாரமென்று எல்லா வற்றிலும் அகண்டாகாரவிருத்திசைதன்னியமாக வி ளங்கிய அநுபூதியில் உற்பத்தியேயாம்.

முக்கியமுக்கியமாவது முற்கூறிய அகண்டாகார சோபாதிக பிரமசைதன்னியத்தில் நானுகாரஜகத்பேத ம் வரக்காரணமில்லாததினால், ஆதார ஆதேயவிவகார மும் விருத்தியைப்பற்றியதேயன்றி, அறிவைப் பற்றியத ல்ல, அவ்விதஞானசுபாவமான பூரணதிருக்கில் திரிசி யமான பிரவஞ்சவிருத்தி உற்பவிக்கவல்லமையுடைய தாகாது; ஆகையால் அப்பூரணசைதன்னியமாம்பிரம த்தைத்தவிரப் பிரவஞ்சம் முக்காலத்திலும் இல்லவே யில்லையெனப் பிரவஞ்ச சூனியாகாரமாயுள்ள அகண் டாகாரஞானநுபவவிம்பத்தியேயாம்.

மஹாவிபூதியாவது சீவேசபேதங்களுடைய பிர வஞ்சத்தின் ஆரோபாபவாதங்களை எதிரிடாமல் போ தவிருத்தியின் உதவியின்றிச் சுயஞ்சொரூபமாகயாவு ம் அநுபவியாமலநுபவிக்கின்றதெனப்படும். இவ்வித

மஹாபஸ்மாநுபூதியின்பொருட்டு மேற்கூறியசாதனங்கள் அதிகாரியின்பேதத்தால் அகத்திடம் அங்கீகரிக்கப்படும்.

இவ்விதநிர்க்குணமஹாவிபூதியின்பொருட்டு கேவலம்நீறுகிவ்விபாகியவிபூதியால் என்னபிரயோசனம் ஏழையாகிய சிலர்கிரகங்கள் ஜெண்டாக்களே இல்லாதவைகளாயும், வர்த்தகரின்கிரகங்கள் வெவ்வேறுவிதமான ஜெண்டாக்கள் கட்டப்பட்டவைகளாயுமிருக்க, மஹாராஜாவின் அரண்மனை அவின்பெருமைக்குத்தக்கபடி எப்படி மேலானஜெண்டாவால் அலங்கரிக்கப்பட்டிருக்கின்றதோ, அப்படியே சிலசமயங்கள் புண்டரமேயில்லாதவைகளாயும், சிலசமயங்கள் வெவ்வேறுவிதமான புண்டரமுள்ளவைகளாயும், காணப்பட்டிருக்க, இச்சமயம் அதின்மகத்துவத்துக்குத் தக்கபடி விபூதிதாரணத்தாற் சிறந்து விளங்குகின்றது.

ஆனால் ஜெண்டாவில் அரண்மனையைக் காண்பிக்குந் தன்மையிருப்பதுபோல இவ்விபூதியில் என்ன இருக்கின்றதெனில்? வீடடைவிக்கும்படி பிரபஞ்சாபிமானத்தை நீக்கும்வல்லமையிருக்கின்றது, எவ்வாறெனில்; வீடெனபது பிரபஞ்சாதீதப்பொருள், அது பிரபஞ்சாபிமானிகளுக்குக் கிட்டாது, பிரபஞ்சாபிமானம் நாதனது பிசாதமின்றி நீங்காது, நாதனது பிரசாதம்

வெகுசமயங்களில் அதிகாரிக்குத் தகுந்தபடி வெகு பேதமாகக்காணப்படுகின்றன, வீடடைய வேண்டிய அதிகாரியின் பொருட்டுப் பிரசாதம் எச்சமயத்திலிருக்கின்றதென்றாலோசிக்கில், இச்சமயத்திலேயேயிருக்கின்றதென்று யாவருந் தெரிந்து, வீடடைவதற்கு இந்த விபூதி உன்னதமான ஜெண்டாவாயிருக்கின்றதென்று வேதங்களில் அருளிச்செய்யப்பட்டிருக்கின்றது.

இதின்றாற்பரியம் சகலபிரபஞ்சங்களும் முடிவினீறத்தக்கவையாயும், எல்லாம் நீறியும், தான் நீறாததாயும், சுத்தமாயும், எல்லாவற்றின் முடிவான வீரியமெனவும், அவ்வீரியமாய்நின்ற பரமசிவம் ஸ்வப்பிரகாசஜகத்காரணமாய்க்கொண்டெவற்றினுஞ் சுபாவமாய் விளங்குவதால், அப்பரமசிவத்தைத் தவிர ஜகம் வேறில்லாததாகச் சுருதியுக்தியநுபவங்களாற் காணப்படுவதால், அவ்விதம் அருட்வமாம் வீடு பசுவாஞ் சீவனது அஞ்ஞானமுமலம்நீறியே அடையத்தக்கதாயிருப்பதால் அவ்விதஜகத்து அழியுந் தன்மையென்ன, வஸ்துவுக்கு அழியாத்தன்மையென்ன, சுத்தத்தன்மையென்ன, பசுவின்மலந் தகிக்கட்டுப்பட்டுச்சித்தித்திடுதலென்ன, இவ்வளவும் விபூதியைக் கையிலெடுத்தமாத்திரத்தில், விவேகிகளுக்குத் தெரியவரலாம்; ஆகையால் அதற்கவ்வளவு மகிமையுண்டாயியது.

முற்றிற்று.

## பதினொருவது

## ருத்திராக்ஷமகிமையுரைத்த

## பிரகரணம்.

ருத்திராக்ஷமென்றதின் பொருள். (ருக்கை) சம்சார துக்கத்தை (திராவியபாபயதால்) நீக்குவிப்பதால், (ருத்திரம்)அதுவாயுள்ள (அக்ஷம்) கண் எனப்படும் இவ்வித ருத்திராக்ஷம் சித்தமென்றும் சாத்தியமென்றும் சாதனமென்றும் மூன்றுவகுப்புடையதாம.

அவற்றுள் சித்தமாவது முக்காலத்திலும் ஜீவேசபேதமுதலிய இரண்டாம்வஸ்துவை எதிரிடாமல், ஸ்வயமானந்தவடிவாய் விளங்கிய அறிவெனப்படும்.

சாத்தியமாவது பிரதீதியில் ஜனனமரணாதியுடைய துக்கசாகரத்தில் மூழ்குகின்றவனெனச் சீவன் தோற்றப்பட, அவ்விதசீவனை சுருதி யுக்தி அநுபவங்களாற் சோதிக்க, ஜாக்கிரம் சொப்பனத்திலும் ப்ரபஞ்சம் சுழுத்தியிலுமாயடங்கின்றவிடத்தில் சீவனானவன் சுகமிருந்தானெனத் தூங்கிவிழித்தபின் ஆலோசிக்க, நான் ஒன்றுமதெரியாமற் சுகமாய்த் தூங்கினேனென்று காணப்படுவதால், ஒன்றுந்தெரியாமை மௌடியமானதால், மௌட்டியமே சகலருக்குந் துக்கத்தை உண்டுபண்ணுவதால், அவ்வித அஞ்ஞானத்தால்

நேரிட்ட" ஆன்மதிரோதானசுபாவமுண்டய தெரியா
மையென்னும் அஞ்ஞானகாரியமான சம்சாரச்சாக
ரத்தில் முழுகுகின்ற சீவனுக்கு * ஒன்றுந்தெரியாம
ல்தூங்கினேனென்ற பிரதீதியோடு சுகமாயென்றொரு
பிரதீதியுந் தோற்றுவதால் அவ்வித ஞானந்தானுப
வம் ஜடமாயின் விளங்கத்தகாததினால் "அவ்வநு
பவத்தைச் சித்தெனக்கூறலாம்; இருந்ததேவிளங்
கவேண்டுமாகையால் "அவ்வநுபவத்தைச் சத்தென்
றுங் கூறலாம்: இவ்வஸ்து சச்சிதானந்தமாயிடினும்
சுழுத்தியில் விருத்தியில்லாததினால் விழித்தபின், வி
ருத்தியிடமாய் ஆனந்தசொரூபம் அநுபவத்துக்கு வ
ராததால், ஒருபொருளையுமுள்ளிலே கொள்ளாமல் வி
ளங்கிய அறிவுசீவனுக்கு அவாசனையில்லாததினால், சுட்
டிய அறிவையே அறிவெனக் கொண்டிருப்பதினால்,
விழிக்குங்காலத்தில் ஜகசூனியாகார விருத்தியிற் பிர
திபிம்பித்த ஔதாசீன்யம்," "அவ்விருத்தியின் வாசனா
ரூபமான ஏகதேசாம்சத்தில் பிரதிபிம்பித்த சிதாபாச
னுக்கு ஒன்றுந்தெரியாமையாகிய அஞ்ஞானமாக "அ
பிப்பிராயப்பட," அவ்வித அபிப்பிராயமே," "ஒருவிருத்

* ஒன்றுந்தெரியாமலென்றது — சுகானுபூதிதவிர மற்
றையாதொரு பிரதீதியுமில்லையென்று ருசுவாதில்.

தியிற் பிரதிபிம்பித்த கூடஸ்த சைதன்னியத்தை, விருத்தியில் உள்ளடங்கிய வாசனையால்? * இருவகையாகக் காண்பிக்கக் காரணமாய்நின்ற,, அஞ்ஞானமாக விளங்க, இவ்வித சிதாபாசனுக்கு அஞ்ஞானத்தால் நேரிட்ட சம்சார துக்கநிவிர்த்தி கிடைக்கும்பொருட்டு ஒன்றுந்தெரியாமற் றூங்கினேனென்று பிரதிதி பிராதியாற் றோற்றியது தானென நிஷேதிக்க வல்லமையுடைய சுகமாயென்ற ஆனந்தாநுபூதி அபாதிதமாய்க் கூடவேகாணப்படுவதால், அவ்வானந்தாநுபூதியால் அஞ்ஞானம் வரக்காரணமில்லையென நிஷேதித்திடின் அம்மறைவு நீங்கிடும்; அம்மறைவு நீங்கிடில் சுகமாத்திரஞ் சேஷிக்கும்; ஜடமெல்லாம் அழிவுடையதானமையால், அவையெல்லாம் துக்கசுபாவமுடையதெனப்படும்; அழிவில்லாமல் என்றுமொன்றுபோலுள்ள இயல்பான சித்தே ஆனந்தமெனப்படும்; அவ்விதசச்சித

* இருவகையென்பது—வாசனையையுள்ளடக்கியவிருத்தியில் விருத்திமாத்திரத்திற் பிரதிபிம்பித்த சைதன்னியத்தை அந்தரியாமியெனவும்; அவ்விருத்தியில் அவ்விருத்திக்கு வேறில்லாததாகக்கொண்டு அதிலுள்ளடங்கிய சருவாகாரபீஜகாரமாகிய வாசனமாத்திரத்திற் பிரதிபிம்பித்த சைதன்னியத்தைப் பற்றிச்சிதாபாசனெனவும் இருவகை

னந்த சுபாவமாந் திருக்கரூபத்தைத் தவிர, வேறொன்றுக்கும் சம்சார துக்கத்தைநிவிர்த்திக்கும் வல்லமை காணப்படாததினால், அத்திருக்கையே சாத்திய ருத்திராக்ஷமெனக்கூறியதாம்.

சாதனமாவது அவ்விதருத்திராக்ஷமானது தன்சுபாவத்தை அடையவேண்டிக், திரிபுரசங்காரகாலத்தில் ருத்திரனது ஞானக்கினிசுபாவமான நேத்திரத்தினின்றும், ஆனந்தாமிர்தவிந்து பூமியில்வீழ, அதினின்றும் உண்டானதாகசசாஸ்திரங்களிற் காணப்படுவதால் அவ்விதருத்திராக்ஷமேயாம.

இதின்தாற்பரியம் சகலமான சருவஜகங்களின் அவஸ்தாத்திரயங்களான முப்புரங்களையும், தானே சகுணரூபமாயாவது, மானுடச்சட்டைசாத்தியதுபோற ஞ்ஞானகுருவடிவமாயாவது, தன்சுபாவமான அருளாலாவது, ருத்திரசாக்ஷியான அகண்டாகாரதிருக்கரூபவத்தாலே சம்சாரதுக்கநிவிர்த்திசெய்விப்பதாய்க்காணப்படுவதால், அவ்வித் அநுபூதியின்பொருட்டு ஒப்பிய ஈசன்றருஞ்சீவர்களின் திருவருளாந்திருஷ்டியே சாதனமாய்க் காணப்படுவதால், அவ்விதசித்த சாத்திய சாதனமென்ற ருத்திராக்ஷத்தை முமுக்ஷுக்களுக்கு அடிக்கடி ஞாபகம்பண்ணும்வல்லமை இந்தருத்திராக்ஷத்துக்கிருப்பதால், இவ்விதருத்திராக்ஷம்திரிபுரசங்கார

த்தின்பொருட்டே ருத்திரனது அக்ஷத்தினின்றும் உண்டானதாய்ப் பிரதிபாதிக்கப்பட்டிருப்பதாலும், சுருதிகளில் மிகுந்தபெருமை கூறப்பட்டிருப்பதாலும் இவ்ருத்திராக்ஷம் ஜடமாயினும், கெடிகாரம் எந்த அவசரத்திலும் நாழிகையை ஞாபகப்படுத்துவதுபோல இவ்ருத்திராக்ஷமும் தரிக்கப்பட்டதாய்க் கொண்டு உள்ளபடி விவேகமுடைய பக்தர்களுக்கு ஞாபகப்படுத்துவதால், அந்தச்சாதனருத்திராக்ஷமெனக்கூறியதாம்.

இன்னும். சாதனருத்திராக்ஷம், ஆக்கினேயம் சௌரம் சாந்திரமென்று மூன்றுபிரிவுடையதாகும். அவற்றில், ஆக்கினேயம் பத்துப்பேதமுடையது; சௌரம்பன்னிருபேதமுடையது; சாந்திரம் பதினாறுபேதமுடையது. இவற்றின்ஜாதி, பிரம க்ஷத்திரிய வைசிய சூத்திரமென்று நான்குஜாதியுடையனவாம். இவற்றின் வண்ணம், சுக்கிலம் பிராமணவண்ணம், இரத்தம் க்ஷத்திரியவண்ணம், பீதம் வைசியவண்ணம், கிருஷ்ணம் சூத்திரவண்ணமாம். இவற்றின்முகம் ஒன்றுமுதல் பதினான்குவரையினுமுடையனவாம்: இவைகளுக்கு மந்திரங்களும் அதிஷ்டானதேவதைகளும் வெவ்வேறாகும். சருவத்திர அதிஷ்டானதேவதை பரமசிவமாம்: இவ்விதமாய் ருத்திராக்ஷத்தை முந்திராதிஷ்டான தே

வதாபாவனையுடன் பாவித்து, நித்தியமாய்த் தரித்திடில் எதார்த்த நிலைமையையுள்ளபடியடைய ச்சித்தசுத்தியோடுங்கூடிச் சிவப்பிரசாதத் துக்குரித்தாகிவிடுவார்கள்: இப்படியிருக்கவும் சிலமந்தப் புத்தியாளர் இதெல்லாம் இந்துக்களது சாஸ்திரக்கட்டுப்பாட்டாற்கூறப்பட்டன, இஃதென்னபிரயோசனம் என்றுஆலோசிக்கின்றார்கள்; அவ்வித ஆலோசனை செய்கின்றவர்கள் நாஸ்திகர்களாகில் உத்தரஞ்சொல்லவேண்டிய அகத்தியமில்லை; எம்மதத்திலாவது நம்பிக்கையுடையவர்களாகில் அவர்கள்பொருட்டு

உத்தரம்.

சகல சமயங்களையும் தூஷிக்கின்ற சிலஅதிமேதாவிகள்கூட மதாந்திரங்களிற் சொல்லிய ஞாயிற்றுக்கிழமை முதலிய கட்டுப்பாடுகளை ஒப்பலாமாயின், இது மாத்திரம் ஏன் ஒப்பத்தகாது? மேலும் இந்தருத்திராக்ஷம் வஸ்துவின் ஞாபகத்தை உண்டுபண்ணுகின்ற நாமமுடையதாய்க் கூறப்படுவதாலும் யாவும் வஸ்துவைத்தவிர் வேறில்லாததினாலும் அப்படிக் கூறியதேயன்றி வேறுவிதமாகக் கூறியதல்ல. மற்றச்சமயங்களின் கோட்பாடுகள் முடிவில் திருபொருளைத்தெரிவிக்க உண்மையாய் உபகாரப்படவில்லை; ஆகையால் அச்சமயத்தோர்களும் தத்தஞ்சமயங்களிற் சொல்லிய

உபகாரமான சாதனங்களைத் தள்ளவல்லமையு
டையவர்களல்ல; தள்ளிவிடில் ஒருசமயத்திலும் அவர்
களுக்கு விசுவாசத்தன்மையில்லாமல் கெடுதலுடைய
வர்களாகவேபவிப்பார்கள்.

மேலும் சர்வாவயவ சௌந்தரிய வதியான ஒருசு
மங்கிலி சர்வாபரணமுடையவளாயிருந்திடினும்,
திருமங்கிலியமென்னும் ஒருஆபரணமல்லாவிடில் அ
வளெப்படி அமங்கிலியெனப்படுவாளோ! அப்படியே
இவ்விதமகிமைபொருந்திய ருத்திராக்ஷதாரணமில்லா
தவர்கள், சிவப்பிரசாதத்துக்கு உரியராகார்கள். அரச
ன் சேதனனாயிருந்திடினும் அதிகாரமுகர் தரிக்கப்ப
டாமல் இராச்சியமல்லமைசெலுத்த எப்படிஉபகாரம்
படாதோ? அப்படியே ருத்திராக்ஷதாரணசிரத்தையுமப
ஷமற் சிவப்பிரசாதமடைய யாருமுரியராகார்.

ஆனால் ருத்திராக்ஷத்துக்கு அவ்வளவுமகிமைசொ
ல்லுவதற்கு பிரத்தியக்ஷப்பிரமாணம் ஏதாயினுமுண்
டா? உண்டு இப்போதும் அநுபவத்திற் காணப்பட்
டேவருகின்றது; உள்ளபடி ஸ்வயம் உற்பத்தியுடைய
தும் வேதத்திற்சொல்லிய இலக்ஷணத்தோடுங்கூடிப்
பெருமைபொருந்தியதுமான ஏகமுக ருத்திராக்ஷத்
தை அடியில்வைத்து அதற்குமேலே எவ்வளவுருத்தி
ராக்ஷங்களை வைத்திடினும் அது அவ்வளவுக்கும் மே

லாகவர்க் காணப்படுவதால், அதனதுமகிமையை எவ ர்களாற்கூறக்கூடும்

அரசன் காணப்படாவிடினும் அவனதுமுகர் அவன து ஸ்திதியை வெளிப்படுத்துவதுபோல, ருத்திராக்ஷ ம் சிரத்தையுடன் தரிக்கப்பட்டவிவேகிகளுக்குப் பர மசிவத்தின் ஞாபகத்தை உண்டுபணணி உய்யும்படிக் கேசெய்யும்: ஆகையால் மேற்சொன்ன சித்ர முதல் சாதனமவனாயாலு ருத்திராக்ஷதாரணம்; அதிகாரிபே தத்தால் சகலர்களுக்கும் அகத்தியம் ஒப்பவேண்டும். ருத்திராக்ஷமில்லாதசிவபத்தி கண்ணில்லாத மன்னன் போலிருக்கும்.

## முற்றிற்று

## பதினேழாவது

## பஞ்சாக்ஷரமகிமையுரைத்த பிரகரணம்

பஞ்சாக்ஷரமானது சூக்ஷமம் மத்திமம் ஸ்தூலமெ ன்று மூன்றுவகுப்புள்ளதாம். கவது (பஞ்ச) விஸ் தாரமாகிய (அக்ஷரம்) நாசரகிதப்பொருள். உவது (பஞ்ச) நாடோறும் பிரத்தியக்ஷமிருத்துவாய்விளங் கிய சகலஜகத்ரூபனரூப சுழுத்தியிற்கூட (அக்ஷரம்) அபாதிதசுபாவமுடைய நாசரகித ஆன்மப்பொருள். கூவது (பஞ்ச) பஞ்சகர்த்தாக்களென்ன பஞ்சகிர்த்தி

யங்களென்ன பஞ்சபூதங்களென்ன இருவகைப்பட்ட பஞ்சேந்திரியங்களென்ன பஞ்சாவஸ்தைகளென்ன இவைகளில் (அக்ஷரம்) ஐந்துபேதமுடையவைபோல பிரதிபிம்பித்துவிளங்கிய விருத்தி சைதன்னியம் என்னப்படும். இவற்றை உள்ளபடிபோதிப்பிக்குந்திறமை ஐந்தெழுத்துக்கிருப்பதால், வாச்சியவாசகங்களுக்கு அபேதத்தன்மையானதால் இதையும் பஞ்சாக்ஷரமெனக்கூறியது.

ஆனால் ஜெபகாலத்தில இப்பஞ்சாக்ஷரத்தில அப்பொருளுடைய பரமசிவம் அநுப்பிரவேசித்து விளங்குகின்ற தன்மை அறியப்படுமாயின், அந்தஅதிகாரியின்பொருட்டு அதுவே பரமசிவமென்று திருப்தியைடையக்கொடுக்கபடாது? திருப்தஜைகவே செய்விக்கும். ஜெபகாலத்தில் பரமசிவம் அப்பஞ்சாக்ஷரத்தில் அநுப்பிரவேசித்து சாதுக்களின்மூலமாய் விளங்குந்தன்மை எப்படியெனில்? ஈசன் இச்சா ஞானக்கிரியாசக்தியுடன் கூடிவிளங்குவதால், அம்மூன்றுசக்தியுடைய பரமசிவம் சருவ வல்லமையுடைய பரிபூரணஅறிவாகையால், அவ்விதஅறிவாய்விளங்கியபரமசிவம் சாதகர்களால் பஞ்சாக்ஷர உச்சாடனகாலத்தில் உச்சாரிதமான ஐந்தெழுத்துடைய பஞ்சாக்ஷரமாம்சிங்காசனத்தில் எழுந்தருளி வாக்கிலுலுச்சரிக்கப்படுகிற பஞ்

சாக்ஷரம தன்னுடையதும் பிறருடையதுமான செவிகளாற் கேட்கப்பட அவ்விதமகிமைபொருந்திய பரமசிவத்தின்வல்லமை இச்சிக்கத்தக்கதாக அந்தக்கரணத்திற்காணப்படுவதால், அவ்விச்சைப்படி அவ்வருணங்களின் பொருள்களுடைய பரமசிவமாகவே தியானித்திடச்செய்து மனந்தெளிவதால், ஒருதிரி அக்கினியின் சம்பந்தமின்றி எப்படிமற்றொருதிரியைப் பிரகாசமுடையதாக்கி வஸ்துக்களைப் பிரகாசிப்பிக்கும் வல்லமையுடையதாகாதோ? அப்படியே இந்தப்பஞ்சாக்ஷர சிரவணமாத்திரத்தால் அப்பரமசிவமகிமையை இச்சையோடுகூடவே மனசுக்குச் சிவஞானம் உண்டாக வேண்டுமானால் சிரவணதாரமான பஞ்சாக்ஷரத்தில் பரமசிவவிளக்கமின்றிக் கூடாது: ஆகையால் பஞ்சாக்ஷரத்துக்கும் அதை ஆலயமாகக்கொண்டுவிளங்கிய பரமசிவத்துக்கும் பேதமில்லையெனத்தெளிந்து பிரேமாபத்தியுடன் பூஜித்திடுவோர் சிவப்பிரசாதத்துக் குரியராகின்றார்.

ஆனால் எந்த சப்தங்களிலும் இச்சா ஞானகிரியாசக்திமூன்றுங்காணப்படுவதால், இப்பஞ்சாக்ஷரத்தில் மாத்திரம் அவ்வளவு மகிமையுள்ளதாகக் கூறியதென்னையெனில்? உலகத்தில் ஆதித்தனுக்குச்சமானம்வேறொருபிரகாசம் எப்படியில்லையோ, கீர்வாணத்துக்குச்சமா

ணம் வேறொருபாஷை எப்படியில்லையோ, வீட்டையு
ம்பொருட்டு வைதிகசைவசமயத்துக்குச்சமானம் வே
றொருசமயம் எப்படியில்லையோ, மகாராஜனது உக்கு
மத்துக்குச்சமானம் வேறொருஉக்குமம் எப்படியில்லை
யோ? அப்படியே இப்பஞ்சாக்ஷரம் பரமசிவத்தினது
உக்குமரூபமாயும் பரமசிவத்தினது சர்வத்வல்லமைக
ளையுங்கூற வல்லமையுடையதாயும், எந்தலாக்களும
அரசனதுபெயருடையசயனை ஆசிரித்திருப்பதுபோ
ல, எம்மதங்களின் நூல்களும் எம்மதங்களின் அபிப்பி
ராயங்களும் இந்துக்களது நான்குவேதங்களும் அத
ன்மகிமையை ஆசிரித்திருந்தே அரசனதுபொக்கிஷ
த்தைக் காவற்சேவகர்போல சாக்கிரதையாய்க்காத்து
விளங்கப்படுவதாயுமிருப்பதால, அதற்கு அவ்வளவும்
மகிமைகூறியதெனக்கொள்க.

பஞ்சாக்ஷரமென்பது (சிவயநம) என்கிற ஐந்தெ
ழுத்துக்களேயாம். இவற்றின்பொருளேக்கமாவது ச
கள நிஷ்கள ரூபமாய்விளங்கிய சருவஞ்ஞபரமசிவத்
தின்பொருட்டுச் சீவனது வணக்கமெனவாம். எவ்வா
றெனில்? தேகாபேக்ஷையால் தாசனென்றும், சீவாபே
க்ஷையால் கடலினின்றுதிவலைபோல் அம்சமெனவும்
கூடஸ்தவுத்தியால அப்பரமசிவத்தைத்தவிர நானென்
பது வேறில்லவேயில்லையெனவும் ஆகின்றன.

தாற்பாயம வன்னக்கமென்பது ஒன்றில் மற்றொன்று அடங்குவது அதாவது மாயையாற்றோன்றிய பேதபேதத்தை சுருதி யுக்தி அநுபவங்களால் நீக்கி சேஷித்த ஏகசுபாவமாம் சிவஞானமாத்திரமாய் விள்ங்குதல்தான்.

இனி அவ்வக்ஷரத்தின் பொருள்விவரம் (சிவ) சச்சிதானந்தம் அவ்விதச் சச்சிதானந்த சுபாவமாகிய (ம) எனக்கு (ந) இல்லை கூட்டவும் தள்ளவும் தக்கதான இரண்டாம்பொருள் (ய) பிரயோசனமில்லை. இன்னும் (நம) என்பதில் (ந) இல்லை என்ன இல்லை (ம) அஞ்ஞானமாம் சூக்ஷ்மரூப ஆவரணமென்ன அதின் அபிமானியாம் பிராஞ்ஞனென்ன இவைகள். யார்பொருட்டு சிவாய அகண்டசச்சிதானந்தமாகிய பரமசிவசொரூபத்தைத் தவிர வேறு துவிதத்துக்கு இடமில்லாததினால் அதியோகஞானமாகிய பொருட்டெனன்பதாம்.

சிவமென்றும் உபநிடதங்களில் அத்துவிதமென்றும் சாந்தமென்றும் துரியமென்றும் ஆன்மாவென்றும் காணப்படுவதால், ஆன்மாவென்றதின்பொருள் நானென்று சகலர்களாலுங் கூறப்படுவதால், நானென்றுந்தெரியாமல் சுகமாய்த் தூங்கினேனென்ற அநுபவத்தில் தூங்கினேனென்ற அநுபூதி சுழுத்திகாலத்தை பற்றிவந்த அகம்பொருளானதால், அவ்விடத்தில்

அகங்காரம் காணப்படாததினால், நானென்றதின் அகங்காரமில்லாத ஆன்மத்தன்மையெனவும், தூங்கினேன் என்றதின்பொருள் வாசனையிற்கண்ட அகங்காரம் இவ்விடத்தில் பிரயோசனமற்று நீங்கியிருந்ததெனவும், ஒன்றுந்தெரியாமல் என்றதின்பொருள் துவிதாத்துவித விருத்திஞானம் சூனியமாயிருந்ததெனவும், சுகமாய் என்றதின்பொருள் துவிதாத்துவித பிரதீதிநீங்கிய சுத்த அதிஷ்டானமாகையால், அவ்வதிஷ்டானசுபாவம் ஸ்வயமானந்தமானதால் அவ்வித அபாதீத ஸ்வப்பிரகாசமான அதிஷ்டானஆனந்தமே விழித்தபின் விருத்திவிடமாய் அநுபவத்துக்குவருவதால், அநுபவம் ஞானரூபமானதால் அவ்விதவிருத்திபிரதிபிம்பித ஞானானந்தாநுபவத்தை எவர்களாயினும் பூர்த்திடில் ஜடதுக்கமென்க்கூறத்தகாததினாலும், அவ்விதவிருத்திப்பிரதிபிம்பிதஞானானந்தாநுபவம் பிரதிபிம்பித்ததற்குமுன், னமே இருந்ததே பிரதிபிம்பிக்கவேண்டியிருப்பதால், இருக்கும்வஸ்து சத்தாகையால் அவ்விதசத்தும்நாமாகவே சித்தித்துக்காணப்படுவதால், சத்தானதன்னை எவர்களும் அசத்தெனநிஷேதிக்க உபகாரமில்லாததினால், விழித்தபின் தோற்றியவிருத்தியை அபேக்ஷித்து விருத்தியிற்பிரதிபிம்பித்த ஆனந்தாநுபவத்தால் ஆனந்தமெனவும், அவ்வானந்தாநுபவம் ஞானரூபமாயிரு

ப்பதால சித்தெனவும், விருத்தி உதயாதுக்கு முன் விருத்தி விஷயமாயில்லாததினால் சத்தெனவும், முற்கூறிய சிதானந்தாநுபவம் சித்தே ஆனந்தமாயும் ஆனந்தமே சித்தாயும் ஒருபொருளாய்க் காணப்படுவதால், அவ்விதசித்தான ஆனந்தம் சத்தைத்தவிர வேறில்லாததினால், இவ்விதச்சிதானந்தமென்ற விவகாரப்பிரதீதி விருத்தியை முன்னிட்டுக்கூறினபோதிலும், அவ்விருத்தியநுபவகாலத்திற்குமுன்னே விளங்கிப்பிரதீதி விருத்தியில்லாத இடத்தைப்பற்றி வந்திருப்பதால், ஞாதுரு ஞான ஞேயரகித ஸ்வயஞ் சச்சிதானந்த தாற்பரிய பூமியான அதிஷ்டானமெனக்கூறியதாம்.

அவ்வித ஸ்வயஞ்சச்சிதானந்த அதிஷ்டானமான தன்னையேபொருளென உபநிடதங்கள் ஆகமங்கள் புராணங்கள் மற்றுஞ்சகலசமயங்களும் அபிப்பிராயப்படுகின்றன. சீடனே தன்னிடத்தில் சுபாவமாயாவது விருத்திப்பிரதிபிம்பித சிதானந்தாநுபவமாயாவது அநித்தஜடதுக்கத்தன்மை நேரிடக்காரணமில்லாததினால், அச்சிவமாந்தனக்கு மகாரத்தின் பொருளான சுழுத்திரூப அஞ்ஞானமாம் ஆவரணமுக்காலத்திலுமில்லையெனநிச்சயித்திட்டு, பிராஞ்ஞன் இல்லாதவனாவான்: அவனில்லாதவனாகவே பிராஞ்ஞனாம்பசுவிவகாரத்தைப்பற்றிவந்தபாசவிவகாரமென்ன அப்பசு பாசங்களையிட்

வெந்த பூதிவிகாரமென்ன இவையனைத்தும், பழு
தையில்மயக்கத்தாற்றோன்றியும் விளங்கியும் விவேக
த்தால் இல்லாமல்நீங்கியும் அப்பழுதையைத்தவிர அ
னைத்துக்குஞ் சத்தையெப்படியில்லையோ, பழுதையின்
சத்தைமாத்திரமாயே எப்படிக்காணப்படுகின்றதோ?
அப்படியே தோற்றமறைதலில்லாதஸ்வயஞ்சச்சிதான
ந்தசுபாவமாய் விளங்கிய சர்வாதிஷ்டானமான பரம
சிவமாம் ஆன்மாவானதன்னிடத்தில், அநிர்தஜடதுக்க
த்தன்மை பொருந்தியதுபோற்றோற்றிய இப்பிரபஞ்ச
ம் தோற்றிடினும் விளங்கிடினும் நசித்திடினும் விவேக
ஞானத்தால் இல்லாதகாய்த்தெளிந்திடினுந் திரிபுடிர
கித ஒப்பில்லாத ஸ்வயஞ்சச்சிதானந்தஸ்வரூபமாம் ப
ரமசிவமாகிய தன்விளங்குதலைத்தவிரயாவும் வேறில்
லையாயில்லையெனத்தெளிந்து அதிஷ்டானமாத்திரமா
ய்விளங்குவதே பஞ்சாக்ஷரத்தின் முக்கியதாற்பரிய
மாம்.

இப்பொருள் பஞ்சாக்ஷரமூலமாகவே விளங்குவ
தால் பஞ்சாக்ஷர ஜெபமில்லாத சிவபத்திஉயிரில்லா
தவுடலெனக்கூறப்படும்.

இனி (சிவ) என்ற இரண்டக்ஷரத்துக்கு மாத்திரம்
பொருள் சகாரம் பரமசிவம் இகாரம் பராசக்தி வகா
ரம்மஹாவிஷ்ணு ஆகையால் சிவ என்றால் சிவசக்தி.

விஷ்ணுவாத்மமெனக் கூறப்படும். இவற்றில் சக்தி மஹாவிஷ்ணு இரண்டு தத்துவமும் வேதஆகமபுராணங்களில் சக்திகளாகவேகூறப்பட்டிருப்பதால், சக்திகள்சக்தனைத்தவிர வேறுகாணப்படாததினால், ஸ்நாலவிவகாரத்தினால் சக்திசக்தபேதமேயன்றி கண்ணும் பார்வையும்போல ஏகமேயெனக்கொள்க.

முற்றிற்று

பதினெட்டாவது

சிவலிங்கமஹிமையுரைத்த

பிரகரணம்.

சிவலிங்கமானது சிவனதுலிங்கம் சிவலிங்கமா சிவனேலிங்கம் சிவலிங்கமா? முற்கூறியபடி சிவமென்பது சச்சிதானந்தம லிங்கமென்பது விளங்குவிக்கும் வல்லமை ஆகையால் சச்சிதானந்தமாகியசிவம் வேறொருகருவிப்பால் விளங்கப்படுமாகில் ஜடமாகுந்தெரியவரும்: மேலும் இதுகடம இதுபடம் என்று பரம்சிவமேவிளங்குவிக்கிறதாகக் காணப்படுவதால், சிவனது லிங்கம் சிவலிங்கமெனக்கூறாது: சிவனேலிங்கம், சிவலிங்கமெனக்கூறவேண்டும். இவ்விலிங்கம் அதிகாரி பேதத்தால் மூவகையாம். அவைமேல்விவகரிக்கப்படும்.

மற்றொருகொள்கையில் லிங்கமென்றது லீனமாகியபொருளைப் பிரகாசிப்பிக்கின்றதெனப்படும். லிங்கமென்றது லயிக்கப்படுவது; எவ்வாறெனில்? ஜாக்கிரத்தில் காணப்படுகின்ற சருவஜகமும் அதின் அபிமானியான விஸ்வ விராட்டு என்னும் சருவேந்திரிய பிரதிபலன சைதன்னியத்தோடுங்கூட சொப்பனதிசையிலே லயிக்கின்றது; அச்சொப்பனமும் அதில அநுபவிக்கப்படாநின்ற சூக்ஷுமையமானஜகமும் அதின்அபிமானியான தைஜஸ இரணியகர்ப்பனென்ற அந்தரேந்திரியஉபாதியையுடைய சைதன்னியத்தோடுங்கூட சுழுத்தியிலே லயமாகின்றது; அச்சுழுத்தியுள்பட மூன்றவஸ்தைகளில் அநுபவிக்கப்பட்ட சருவவிஷயங்களும் லயங்களானதால் அவற்றின் பொருள்யாதோ அதுலீ மூர்த்தமாகும்.

லீனமென்றதில் அபிப்பிராயம் யாதெனில்? ஸ்வயம் பிரகாசித்தலுக்கு வல்லமையில்லாததெதுவோ அதுவெனப்படும். லீனமென்பதே சூனியமாகும்; எப்படியெனில்? ஏதற்குஸ்வயம்விளங்குதலில்லையோ அதற்கு ஸ்வயமிருப்புமில்லை; எதற்குஸ்வயமிருப்பில்லையோ அதற்கு வஸ்துத்தன்மையுமில்லை; எதற்குவஸ்துத்தன்மையில்லையோ அதற்குஸ்வப்பிரகாசமாயிருக்கின்ற வஸ்துவோடுங்கூட சம்பந்தங்கூ [illegible] இவ்வி

தமாகில் முக்காலத்திலும் இரச்சுசர்ப்பம்போல பிரா ந்தியாற்றோன்றுகின்ற மூன்றவஸ்தை முத்தொழில் இ வற்றால் சாத்தியமான இந்தஜகம் காலத்திரயத்திலும் இல்லாததாய்விடும்; விவகாரசத்தையால் விளங்குகின் றதுபோலிருந்தாலும் விவகாரசத்தையினாலும் யுக்தி அநுபவங்களினாலும் பார்க்கில் இல்லாததாகவே நிஷே திக்கப்படுகின்றது. எப்படியெனில்? விழித்தெழுந்திரு ந்தவன் நான் சுகமாய்த்* (@) தூங்கினேன் ✠ ஒன்றுமறி யேன் என்பதில் அகங்காரவிருத்தியில் பிரதிபலித் த முந்திய விவகாரசத்தாய்த் தோன்றிய ஆவரணமா னது அநுபவிக்கப்பட அதிற்கண்ட விவகார அநுபவ ப்பிரகாரம் காணப்படுகின்றசகலஜகமும் சுழுத்தியில் இல்லாமையாக நிரூபிக்கப்படுகின்றது. சுழுத்தியில் அகம்விருத்தி இல்லாதநிலைல் ஆன்மாவின் இல்லாமை யும் வாராமையாமெனில்? சருவஜகத்தின் இல்லாமையை

---

* சுகமாயென்றது-ஆனந்தமாத்திரமான சொரூபத்தன்மை யையடைந்து தான்மாத்திரமாயிருந்ததென்பதாம்.

(@) தூங்கினேனென்றது - சருவஜகத் விஷயமான பேத ஞானமின்றி யிருந்தேனென்பதாம்.

✠ ஒன்றுமறியேனென்றது - சுழுத்தியில் ஜகமில்லாததா ல் திருசியத்தைப்பிரகாசிப்பிக்கின்ற விருத்திஞானமுமில்லாத வனாயிருந்தேனென்பதாம்.

அறிந்து அதையும்பிரகாசிப்பிக்கின்ற அதிஷ்டாதாவான ஆன்மா எப்படி இல்லாததாகும்.

அப்படியாகில் சுழுத்தியில்நின்றுவிழித்தபின் சுகமாய்த்தூங்கினேன். ஒன்றுமறியேன் என்பதில் அஞ்ஞானம் அகங்காரம் இவ்விரண்டும் அத்திசையிலிருக்கின்றதுபோற்றோன்றுகின்றதே அவ்வஞ்ஞானம் ஆன்மாவுக்கா அல்லது அகங்கார விருத்திக்கா? ஆன்மாவுக்கெனில்? அதை அறிவதற்கு ஆன்மாவைத்தவிர வேறில்லாதநிலைகூடாது. அகங்காரவிருத்திக்கெனில்? அவ்விருத்திக்கு எப்பொழுதும் ஜடத்தன்மை சுபாவமானதால் கூடாது. நல்லது ஆன்மாவுக்கும்வேண்டாம் அகங்காரவிருத்திக்கும்வேண்டாம் அவ்விருத்தியில் அவிவியக்தனை சிதாபாசனுக்கென்னிலோ? அகங்காரவிருத்தியே இல்லாவிடில் அதில் அவிவியுக்திக்குந்தன்மை எப்படிக்கூடும். அகங்கார அவிவியக்தத்துக்கு அகங்கார பீஜமான அஞ்ஞான அவிவியக்தனை சிதாபாசனுக்கென்னிலோ? ஞானமில்லாதது அஞ்ஞானம் அது ஞானாபாவமெனப்படும் ஞானமேயில்லாததால் பதார்த்தத்தை விஷயீகரிக்கின்ற சாமர்த்தியமில்லாததாய்விடும்; அல்லாமலும் ஞானாபாவசுபாவமுடைய வஸ்துவுக்குத்தன்விஷயத்திலுள்ளவது பிறவிஷயத்திலாவது அநுபவம் கூடாததினாலும் அது

வும் சூனியத்தன்மையையுடையதாதலாலும் இல்லை யெனப்படும்; அவ்வித இல்லாதவஸ்துவில் ஞானமானது அவிவியக்தமானால், அப்படி அவ்வியக்தமான ஆன்மாவும் அத்தன்மையான சக்திமானாகவேபவித்து, அகங்காரத்தை விளங்குவிக்குஞ்சாமர்த்தியமற்று, அந்தகனால் அந்தகன்போலமுன்னமே அக்ங்காரமும் அந்தகமாய்க்கொண்டு அவ்வியக்தஞானத்தாலும் சக்தியில்லாததாய்விடும்; ஆனபடியால் அதற்குங்கூடாது. அப்படியானால் ஒன்றுமறியேனென்ற விவகாரம் வருகிறதற்கு காரணமென்ன. அவ்விவகாரம் அகம்விருத்தியிற் சொன்னப்படுவதால் அகம்விருத்தி ஆரூடமான ஸ்வயம்சித்தமாயுள்ள அஞ்ஞானமானது அகங்காரதர்ப்பணத்திற் பிரதிபிம்பித்த கூடஸ்த சித்சாயாரூபமான சிதாபாஸனிடத்தில் அகங்காரத்தினுடையதென்றறியாமல், எதார்த்தமென்றறிந்து தனதுபிம்பமானகூடஸ்த பாமான்மாவில் ஆரோபிக்கப்பட்டதுதான். இப்படித் தோன்றுகின்றவிவகாரமும் அகம்விருத்தியிலிருக்கின்றதென்றபாச அநுபவத்திற்கண்டவிவகாரபலத்தினாலேயேயன்றி மற்றப்படியல்ல. இவ்விவகாரபலத்தாற்றோன்றுகின்ற சருவஜகம் அதைப்பற்றிவந்த சிருஷ்டிஸ்திதி சங்காரம் அதினுள்ளடங்கிய அவஸ்தாத்திரயங்கள் இவைகளோடுங்கூடச். சுழுத்திதிசையில் இல்லை

யெனறேனிருணயமாம் அத்நிசையில்இல்லை யெடு கால் அஞ்ஞானரூபசுழுத்தியென்றுசொல்லப்படவில் லெ வேறேப்படிசொல்லப்படுகின்றதென்னில் விஷயம் இந்திரியம் அந்தக்கரணம் அவற்றின். அபிமானியா ன சிதாபாசனாகிய சகலஜகத்துக்கும் சுகசொரூ பமான உண்மையென்று சொல்லப்படுகின்றது. உப நிடதம் ஆனந்தம்பிரமமெனக் கூறுவதால் சொரூ பானந்தமாத்திரமான அடையெனக்கொள்க. இதின் தாற்பரியம் விருத்தி இல்லாத அகர்த்துருத்துவமான சுகஸ்வரூபமாகிய தனக்குவேறில்லாததாகக் கொண்டு இருத்தலெனவாம். இருத்தலென்றதின்பயன் முக்க லத்திலும் வேறொருதன்மையை எகிரியந்தசுபாவமா கும். இப்படியாகில் கீனம்காலத்நியத்திலும் கூட ஸ்தசுபாவமான ஸஜாதிய விஜாதிய ஸ்வகதபேதமில்லா த அத்துவித பரமான்மசுபாவமான அருத்தத்தைப்பிர காசிப்பிக்கின்றதால், சிவமேலிங்கம் சிவலிங்கமெனப் படும்.

மற்றொருபொருள் ஜகமனைத்தும் அழிந்தும் எது அழியாமலிருக்கிறதோ அது லிங்கமெனக்காணப்படு வதால், அவ்ஸ்தைகள்மூன்றும் தொழில்கள்மூன்றும் அதற்குட்பட்ட ஜகமனைத்தும் அவித்தை மாயையோ டுங்கூடிப் பரமசிவஞ்சைதன்னியத்தில் இல்லாததாகி ல யமாகக்காணப்படுவதால் சிவமேலிங்கம் சிவலிங்கமெ னப்படும்.

மற்றொருபொருள் லிங்கமெனில் காரணமாகையால், பரமசிவமொன்றுதவிர மற்றனைத்தும் காரியமாகையால், காரியப்பொருள் காரணப்பொருளைத்தவிர வேறில்லாததினால். காரணமாம்பரமசிவமேலிங்கம் சிவலிங்கமெனப்படும். இது உத்தமாதிகாரிவிஷயலிங்கங்களாம்.

மத்திமலிங்கமாவது ஆறாதாரங்களில்விளங்கிய அநேககோடி சூரியப்பிரகாச லக்ஷியரூபங்களெனப்படும்.

ஸ்தூலலிங்கமாவது இருவகையான லிங்கங்களை, அறியவல்லமையற்ற கேவலம் பண்டித பாமர சாதாரணமாயுள்ள உபாசனையின்பொருட்டு, சாஸ்திராதிகளால் அநுக்கிரகிக்கப்பட்டுப் பாவனைகளால் பரமசிவப்பிரசாதத்துக்கு உரித்தாகச்செய்யக் காரணமாய்விளங்கிய ஆலயங்களிலுள்ள சிவலிங்காதிகளெனப்படும். உண்மையில் அவ்விலிங்கம் பரமசிவத்தைத் தவிர வேறில்லாததினாலும்; அவ்விதப்பொருளுடையலிங்கார்த்தமான பரமசிவத்தை உள்ளபடிவிளங்குவிக்கத் தக்க பொருளுடையதாயும் இருப்பதால், சிவலிங்கமெனக்கூறப்பட்டது. அதிகாரிபேதங்களால் மூன்றுலிங்கங்களும் அகத்தியம் உபாசிக்கப்பட்டவைதான்

முற்றிற்று.

## பத்தொன்பதாவது

## சாதுசங்கமகிமையுரைத்த

## பிரகரணம்

சாதுவெனப்படுகின்றவர்கள் ...ப்பொருள்கட்கும் அப்பொருள்களைப் விளங்கிய கலைகளைக்கடலாம் பரமசிவனைத் தன்மையம்போல, சகலசீவர்கட்கும் அபயமாய்விளங்கிய சுபாவமுடையவர்களாயும் ‡ ஆப்தகாமமையுள்ள உத்தமாதிகாரிகளுக்குத் தரிசனமாத்திரத்தில் அகண்டபரமசிவானந்தானுபூதியை விளங்குவிப்பிக்கின்றவர்களாயும், தங்களை அநுசரித்த எவ்வுயி

† ஆப்தகாமமாவது பூர்ணமாவது முதலில் அநிஷ்டமானமாத்திரமாய்விளங்கி, அப்பால் பரிபூரணஞானசந்நியாயமாயிருந்துகொண்டு, அப்பரிபூரணத்தில் அநேகவிஷயங்களான சப்த ஸ்பரிச ரூப ரச கந்தாதிவிஷயங்களை அபின்னமாயகற்பித்து, ஞானேந்திரியபஞ்சகங்களை அபின்னமாக அநுசந்தானித்து, அந்த அநுசந்தானபலத்தினால் அகண்டமுள்ளசைதன்னியரூபமாயுள்ளதனைக்குப் பின்னமில்லாமலிருக்கின்றபூரணங்களான பஞ்சேந்திரியங்களால் பஞ்சவிஷயங்களையும் உள்ளபடி அபேதமாய் அநுபவித்து, அவ்விதஅநுபூதியுடை

காரகர்களாயும் அவர்களது சித்தபரிபாகத்துக்குத் தகு
ந்தபடி சாதனங்களை அருளிச்செய்து பரமசிவானந்த
சமுத்திரத்தில் குளிக்கச்செய்விக்கிற வல்லமையுடை
யவர்களாயும், எப்போதும் எவர்களுக்கும் சல்லாப
மாத்திரத்தில் பரமசிவப்பிரேமாவர்த்தர்களாயும், மொ
ழியுமொழிகளெல்லாம் துவிதவாசனைநாசமான அ
கங்காரக் கிரந்தியிருளினைச் சிதையச்செய்யும்பொரு
ட்டுச் சிவஞானசூரியப்பிரகாசத்தன்மையைப் பிரகாசி
ப்பிக்கிறவர்களாயும், பிராணிகளிடத்தில் யாதொரு
அபேக்ஷையுமில்லாமல் அவர்கள் வீட்டைந்துய்வி

---

ய பரிபூரண ஞானரூப ஞானதன்னிடத்தில் அனேககோடி பி
ரமாண்டங்களைப் பின்னபின்ன அநேகவிஷயங்களோடு
ம் விளங்குவிப்பித்து, அவ்விதவிஷயங்களையும் விஷயபோக
ங்களையும் விஷயபோக்தாக்களான பிரமாண்டங்களையும் வி
ஷயரூபமாயும் போகரூபமாயும் போக்தாரூபமாயும் அநு
பவித்து, அவ்விதஅநுபோககாலத்திலும் மேற்சொல்லிய மூ
விதபேதமுடையஜகத்தில்சருவவிஷய இந்திரிய சொரூப
மானஅகண்டபரிபூரணஞானமாகிய தன்னை இடைவிடாத்த
ன்மையாயநுபவித்து, விஷயம்போகம் போக்தா சகலமும்

னிமித்தம் கிருபைகூர்பவர்களாயும், கருணை மைத்தி ரி முதிதை உபேக்ஷை யாதிய சீலம்பொருந்தினவர்களாயும், துவந்துவ விநிர்முக்தர்களாயும், எப்போதும் சுவாநுபூதியில் இரண்டாம்பொருளை எதிரிடாதவர்களாயுமுள்ளபெரியோர்களாம்; அவர்களநுசங்கம் சாதுசங்கமெனப்படும்: இவர்களநுசங்கத்தைத்தவிர பிராணிகளுக்கு வீடடையவேண்டியமார்க்கம்வேறில்லையென்பதேவேதாகமங்களின் முடிவான நிருணயமாம்.

முற்றிற்று.

---

விஷயரூபமாயாவது போகரூபமாயாவது போகதாரூபமாயாவது கேவலம்ஞானரூபமாயாவது தன்னைத்தவிர வேறில்லையென்று அதிஷ்டானமாத்திரமாய்ச் செவித்து அநுபவியாமலநுபவிக்க, துவிதபதார்த்தப்பிராந்தி அதையிட்டுவந்த ஐசுவரியவான்களாகிய தாரதம்மியமுடைய ஸ்தம்பமுதல் சதாசிவஆனந்தமுள்ள போகவிசேஷப்பிராந்தியும் அதிஷ்டானமாத்திரமாய் நீங்காமலநுபவிக்கிலும். இவ்வநுபூதிமானையே சுருதிகள் ஆப்தகாமனெனக்கூறுகின்றன.

## இருபதாவது

## குருபதேசமகிமையுரைத்த

## பிரகரணம்

குருவென்பதின்பொருள் (கு) அஞ்ஞானமாகிய அந்தகாரம் (ரு) அதைத்தகையாநின்ற சைதன்னியப்பிரகாசம் என்பதாம். இப்பொருள் பொருந்திய குரு தத்துவம் காரணகுருவெனவும் காரியகுருவெனவும் இரண்டுபிரிவுடையதாகும்.

காரணகுருவாவது காரியகுருவால் அநுக்கிரகிக்கப்பட்ட வேதாகமங்களின் முடிவான நிலைமையாய் விளங்கிய, பிரத்தியகபின்ன பரமசிவாநுபூதியேயாம். காரியகுருவாவது அவ்விதஉபதேசத்தால் அநுபூதிமயமாய்விளங்கிய பரமசிவமே அவ்வதிகாரிக்கு அநுக்கிரகிக்கும்பொருட்டு மானுடவேஷம்பொருந்திய குருமூர்த்தியாய்விளங்கிய அவ்வுபதேஷ்டாவாகும்.

இக்காரியகுரு பிரம க்ஷத்திரிய வைசியரென்மூவகையர்களாம். இவர்களில் வித்தியாதிக்கத்தால் பரஸ்பரம் குருத்துவமுண்டு; உத்தமகுரு பிராமணர்களாம் இக்குருக்கள் சன்னியாசி வானப்பிரஸ்தன் கிரகஸ்

தன் பிரமசாரியெனநால்வர்களாம்: இவர்களும பரம்ப
ரம் வித்யாப்யாசத்தால் உத்தமகுருவின் லப்தமகி
டையாவிடில் பரஸ்பரம் குருக்களாவார்கள்.

இருவகையான இக்காரியகுருக்களிலும் அதிவரு
ணனென்று ஒருத்தமோத்தம குருவுண்டு.

சூத்திரர்களுக்கும் ஸ்திரீகளுக்கும் குருத்துவங்கி
டையாதென்று கூறப்பட்டிருக்கின்றது. இவர்களுக்கு
க் கிடையாதென்றதின் பொருள். வேதவித்யாசம்பி
ரதாயமார்க்கத்தால் கிடையாதென்பதேயன்றி இருவ
ருடையாங்கால் அவர்களுக்குக் குருத்துவம் கிடையா
தென்பதல்ல. இக்குருத்துவம் முக்தியுக்குலாபாலய
த்தில் உபகாரப்படும். ஆதலால் ஸ்திரீ சூத்திரர்களுக்
கு குருத்துவம் கிடைக்கவே கிடையாதென நிஷேதி
த்திருக்க இப்படிக்கூறியதேதெனில்? ஸ்ரீ பரமதயா
பரர்களாகிய சங்கராசாரியர்களது வாசகத்திலேயே உ
த்தமஜாதியில் குரு அகப்படாவிட்டால் மத்தஜாதியி
லாகிலும் பந்தந்திரவ்யப்ராப்பமாகில் குருத்துவம்
ஆசரிக்கப்படலாம், என்று மொழிந்திருப்பதுங் த்
விர,, "எவனது அருளால் ஜடமானதேகமுதலனைத்து
ம் சித்துப்போல் விளங்குகின்றதோ, எவனதுசுபாவ
மாகக் கீடாதிபிரமப்ரியந்தம் சாக்ஷித்தன்மையாய்வி
ளங்கியதோ, யாதொருபொருள் எல்லாரும் நானென்.

ஞானத்தன்மைக்கு ஒழிவியல்பாக உரித்தாயுள்ளதோ, அப்பொருள்யான் எனத்தெரிந்தநுபூதியுடையவர்களாயின் அவர்கள் ஜகதிருஷ்டியில் சண்டாளராய்க் காணப்பட்டிடினும் அவர்களைக் குருவெனவே கொள்ளுதல் என்னுடையகருத்து, என்று அவர்களாற்கூறப்பட்டிருக்கின்றதாயுங்காணப்படுவதால், அவர்களது அபிப்பிராயப்பிரகாரம் கூறினாம்.

முற்கூறிய உத்தமகுருக்களாகிய நானாச்சிரமிகளில் சன்னியாசியென்ற குருத்துவம் உத்தமமெனப்படும்; அது குடீசக வெகூதக அம்ஸ பரமாம்ஸமென நான்குபேதமாம்: இப்பேதத்தவர்கள் உத்தரோத்தரம் ஆதிக்கமுடையவர்கள், இவர்களில் வித்தியாப்பியாசத்தன்மையும் ஆச்சிரமத்தன்மையும் காணப்படாதிருந்திடினும், ஆன்மாநுபூதியொன்றுமாத்திரம் இல்லாவிடில், அவர்களைக்காட்டிலும் எச்சாதியிலேனும் எவ்வருணத்திலேனும் எவ்வாச்சிரமத்திலேனும் எத்தருமத்திலேனும் எத்தொழிலிலேனும் இருந்திடினும், ஆன்மாநுபூதிமானாகில் அவனேசிரேஷ்டனென வேதாகமபுராணங்களில் கூறப்படுகின்றது.

உத்தமகுருக்களுக்குங் குருவெனப்பட்ட மேற்கூறிய அறிவருணனது லக்ஷணமேதெனில்; எக்காலத்திலும் எவ்வவஸ்தையிலும் எத்தொழிலிலும் எப்பொரு

ஞம் ஞாதுரு ஞானம் ஞேயரகித தண்டாகண்ட விதிர்முக்த கேவலம்பரமசிவமாகியதானாகவிளங்கிட, தூங்குகிறவன் கையினின்றும் புஷ்பம் நழுவிடுதல்போல், நாதி வருணாச்சிரம தர்ம குலகோத்திர நீதி முதலியபேதமனைத்தும வாசனையால் புத்திவிருத்தியிலுதியாமல், சகசமாய் எதுவும் தானாகவே விளங்குவதாசகன் அவ்வாறுவிளங்குமவனே உத்தமோத்தமகுருவாம்.

இனி உபதேசமென்பது † தீக்ஷையாம்; அதுசொரூபதீக்ஷை மானததீக்ஷை சாக்ஷிதீக்ஷை ஸ்பரிசதீக்ஷை கிரியாதீக்ஷை எனஐந்துபேதமுடையதாம். இவற்றில் சொரூபதீக்ஷையாவது குருசுபாவத்தனாயிருக்க, உத்தமாதிகாரியான பரிபாகவிசேஷத்தால் சீடனும் அப்படியே விளங்கிடுதலாம். மானததீக்ஷையாவது அகண்டசச்சிதானந்தமாம் பரமசிவமாகவிளங்கிய குருவானவர், தாமே சீடனது மனதில் அநுப்பிரவேசித்து, அவனது உள்ளத்தில் திருவருட்பாங்கைப்பிரசாதித்து, தனக்கு அபேதமாக அவன்றன்னைத் தன் [illegible]த்தை அடைவிப்பித்துக், தானாகவிளங்கச்செய்வது அச்

† தீக்ஷையென்றது சுக்ஷணத்தில் குருவானவர் கிருபையால உள்ளபடி ஆன்மாநுபூதியைக்கொடுக்கின்றதும் அவித்தை மாயைகளை இல்லாமல் நசிப்பிக்கின்றதுமாகிய வல்லமையுடையதென்பதேயாம்.

சீடனும் அப்படியேவிளங்கிடுதலாம். சாக்ஷி தீக்ஷையாவது அவ்வித அநுபவமே பொருந்திய திருஷ்டியோடும் சீடனைப்பார்த்தருள, அச்சீடனும் அவ்வாசிரியரது அநுபூதியை அடைந்திடுதலாம். ஸ்பரிச தீக்ஷையாவது விருப்பைபொருந்திய அநுபவத்தோடும் அஸ்தம் திருவடி இவைகளை ஸ்பரிசித்தருள, சீடனும் உள்ளபடி அநுபூதியை அடைந்திடுதலாம். கிரியாதீக்ஷையாவது சிரவண மனன நிதித்தியாசன தியான தாரணை சமாதி இவ்விசேஷமுடைய தொடர்ச்சியால், சீடன் குருபதேசத்துடன் சுவாநுபூதியை அடைந்திடுதலாம்: இக்கிரியாதீக்ஷை பத்துவகைப்படும்: அவை ஆசாரியாபிஷேகங்களை முன்னிட்டு ஆகமங்களிற்சொல்லியதுகளாம். இவ்விததீக்ஷை கேவலம் தாந்திரிகமெனப்படும். மற்றதீக்ஷையனைத்தும் கேவலம் வைதிகமெனவும்; வேதாநுக்கிரக தாந்திரிகமெனவும்படும்.

சாக்ஷுஷ தீக்ஷை முதலிய நான்கு தீக்ஷாரூபமான குருக்களைக் காரணகுருவெனவும்; கிரியா தீக்ஷாரூபமான சிரவணமனன நிதித்தியாசன தியான தாரணை சமாதி விசேஷமுடைய சீடனது தொடர்ச்சியை முன்னிட்டு சுவாத்மாநுபவத்தை விளங்குவிப்பிக்கும் வல்லமை மாத்திரமுடைய குருவைக், காரியகுருவென்றும் கூறுவார்கள். இது குருபதேசரகசியம்.

முற்றிற்று.

# இருபத்தொன்றாவது

## பரமசிவப்பிரசாதமகிமையுரைத்த

## பிரகரணம்.

பிரசாதமென்பது வர்ணிக்கப்படாதி ருந்தும் வித்வசபையில் அதிசயமான வாக்குசித்தியமட்டு சாதிக்கத்தக்கதாகுமோ பிரயத்தனமின்றிச் சாதகத்தந் திறமை, அானுஞ்சியங்களான இந்திரியவிலாசம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், நிரோதானிக்ஷக்கங்கள், கர்த்தத்துவ அகர்த்தத்துவ அன்னியதாகர்த்தத்துவ சக்திகள், கேவலம் தயாமாத்திரத்தில் மஹாஜனனமரணப்பிரவாகம்பொருந்திய ஜீவர்களை எப்பொழுதும் அகண்டசச்சிதானந்தபரமசிவமென் அநுபவிக்கச் செய்வித்தல், என்னும் இவ்விஷயங்களாலும் அபூர்வப் பெருமைபொருந்தியதெனப்படும்: இப்பிரசாதமடையப் பெற்ற மஹான்களுக்குச் சிலது சித்திவிசேஷங்களாயிருந்தபோதிலும், எல்லாம் பரமசிவமாகவிளங்குதலே பெருமைபொருந்திய முக்கியபரமசிவப்பிரசாதமெனப்படும்.

அவ்விதபிரசாதம் அவர்களிடமாய் விளங்குந்தன்மை எப்படியென்னில்? இப்பிரபஞ்சங்களிலுள்ள நதி

சமுத்திரம் மலை ஆரணியம் விருக்ஷம் பக்ஷி மிருகம்
இன்னுமற்றுமுள்ள அனேகத்துடன் எனைப்ருதல் அரச
ன்வரையுள்ள பிராணிகளென்ன, அவற்றின் போகபோ
க்கியமென்ன, இந்திராதிகள் தேவ யக்ஷ கந்தர்வ கின்
னராதிகளென்ன, அவர்களின் லோகங்களென்ன, அவ
ர்களின்போகபோக்கியமென்ன, சகலஜகசிருஷ்டிகர்த்
தாவாகிய பிரமாவென்ன, அவரதுலோகமென்ன, அவ
ரதுபோகபோக்கியமென்ன, சகலஜகத்பரிபாலன கர்த்
தாவாகிய விஷ்ணுவென்ன, அவரதுலோகமென்ன, அ
வரதுபோகபோக்கியமென்ன, சகலஜகசங்காரகர்த்தா
வாகிய ருத்திரனென்ன, அவரதுலோகமென்ன, அவர
துபோகபோக்கியமென்ன, சகலஜகதிரோதானகர்த்தா
வாகிய மகேஸ்வரனென்ன. அவரதுலோகமென்ன, அ
வரது போகபோக்கியமென்ன, சகலஜக அநுக்கிரக கர்
த்தாவாகிய சதாசிவமென்ன, அவரதுலோகமென்ன,
அவரதுபோகபோக்கியமென்ன, இன்னும் சாருவாக
ஆருகத ஜைன நாஸ்திக பௌத்தாதிகளின்மதங்களிற்
சொல்லிய தேவதாவிசேஷங்களென்ன, அவர்களின்
லோகங்களென்ன, அவர்களின் போகபோக்கியங்களெ
ன்ன, பின்னும் கிறிஸ்துமதத்திற்சொல்லிய பராபரன்
கிறிஸ்துமுதலியதேவதைகளென்ன, அவர்களுடைய
தான பரமண்டல முதலிய லோகங்களென்ன, அவர்க

ளின் போகபோக்கியமென்ன, இன்னும் எம்மதங்களா லுஞ்சொல்லிய எத்தேவதைகளென்ன, அவர்களின் லோகங்களென்ன, அவர்களின் போகபோக்கியங்களெ ன்ன, அந்தந்தமதங்களிற்சொல்லிய பிரசாதவிசேஷ ங்களென்ன, அந்தந்தமதக்கோட்பாடாயுள்ள சாஸ்திர ங்களென்ன, மேலும் எம்மதத்தோராலும் மதங்களெனத் தெள்ளவொண்ணைப் பெருமையையுடைய அத்துவி தசாஸ்திரமென்றும் வேதாந்தவின்பொருளாய்விளங்கிய நிர்க்குணப்பிரமமென்னும் பரமசிவமென்ன, அனைத்து ம் தானாகவேவிளங்கச்செய்தலாம். அந்தப்பிரமசிவப்பிர சாதமாம்விளங்குதல் பரமசிவமாகுஞ்சைதன்னியசுபாவ த்தைத்தவிர வேறில்லவேயில்லை.

அப்பிரசாதத்தைஅடைந்தவர்களெவர்களோ? அவர் களப்பரமசிவமென் நிருணயிக்கத்தடையில்லை. அவர் களதுஉள்ளத்தின் பரமசிவப்பிரசாதம் விளங்குகின்ற இயல்பைச்சுருக்கமாய்த்தெரிவிப்பதாவது:- எம்மதத் தோர்களும் எச்சமயங்களும் எவ்விதத்தார்களும் எத்தே வர்களும் பின்னுமுள்ளவர்களும் எவ்விதத்தாலும் நானெனத்தலையெடுக்கவொட்டாமல், யாவையுந் தானா கவிழுங்கித் தானதனல்லவைபோக விலாசிக்கும்வ ல்லமையுடைய சதுரனெனமகிழச்செய்கின்றதே அதி ன்சுபாவமாகஅநுபவிப்பதாகும். சுருதி ஸ்மிருதி ஆக

மபுராண இதிகாசங்களாலும் கூறப்பெறாநின்ற பரமசிவப்பிரசாதத்தின் மகிமாவிலாசத்தை எவர்களுற்றுன்மதிக்கக்கூடும்.

ஆகையால் சகலவித்தியாப்பியாசங்களும் சகலவைக்கியதானதவசுகளும் சகலபக்திகளும் சகலயோகசாதனங்களும் சமாதிமுதலியசகலசாதனங்களும் அபாரமகிமாகனம்பொருந்திய பரமசிவப்பிரசாதத்தையடையும் பொருட்டே யன்றி, வேறோர்பிரயோசனத்தின்பொருட்டல்லவென்பது சகலசாஸ்திரங்களின் உண்மையான அபிப்பிராயமெனக்கொள்ளுதலே, பரமசிவப்பிரசாதத்தையடைந்த பெரியோர்களின் பெருமையாம்: அப்பெருமையையேபேசாப்பெருமையெனஸ்துதிக்கப்படுகின்றது.

அவ்விதப்பெருமைபொருந்திய பரமசிவப்பிரசாதிகளான பெரியோர்களின் மகாபவித்திரதரங்களாயுள்ள பாததூளிகளாகுஞ் சச்சிதானந்தவிலாசங்களுக்குத் திரிகரணங்களாலும் அனேககோடிநமஸ்காரம்.

இவ்விதமாய் நம்புகிறவர்களே அவர்களைப்போலச் செய்கின்றதே அவற்றிற்குக் சகசமுகிமை.

முற்றிற்று.

## இருபத்திரண்டாவது
## அவிமுக்தஸ்தலமகிமையுரைத்த
## பிரகரணம்

அவிமுக்தஸ்தலமென்னப்பட்ட காசிக்ஷேத்திரத்தில் மரணமடைதலானது, அத்துவிதஞானம் எப்படியோ அப்படியே மோக்ஷத்திற்கு முக்கியசாதனமாக இருக்கின்றது.

ஞானந்தான் மோக்ஷத்திற்கு முக்கியசாதனமென்று சகலசாஸ்திரங்களும் கூறியிருக்க, காசிமரணம் சாதனமாதல் கூடுமோவென்னில்? காசிமரணத்தால் ஞானமுண்டாய் சகலரும் மோக்ஷத்தை அடைகின்றனரென்று சுருதியிற் கூறப்பட்டிருப்பதால் கூடும்.

சிரவணமனன நிதித்தியாசனதியான தாரணை சமாதியின்றிக் காசிமரணத்தினால் ஞானம் எப்படியுண்டாகும்? சுருதிகளில் சத்தியசங்கற்பனைத் தேசியவருக்கிற ஈசனே, காசியில் மரணகாலத்தில் சகலபிபீலிகாதி பிரமபரியந்தமும் ஞானோபதேசஞ்செய்து, மோக்ஷஸ்வரூபமான தன்சுபாவத்தில் ஐக்கியஞ்செய்கிறேனென்னும் பிரதிஞ்ஞாவாணையைச் சுருதியிற்காணப்படுவதாலும், அவ்வீசன் தன்றைக்கற்பிக்கப்ப[illegible] [illegible]

பிராணிகளின் ஹிருதயத்தில் ஜீவரூபமாயும் கூடஸ்தபிர மரூபமாயும் அநுப்பிரவேசித்திருப்பதாலும், அவ்வித ஈசன் காசியில் பிராணிகளின் மரணகாலத்தில், அவைகளின் இந்திரியவல்லமை மனதிலும் மனதின்வல்லமை புத்தியிலும் புத்தியின்வல்லமை அந்தக்கரணத்திலுமடங்கி ஒடுங்கும்போது, தனது சத்தியப்பிரதிஞ்ஞைப்படியே அருளால், அந்தக்கரணத்திற் சேஷித்துநின்ற சீவனைக் கூடஸ்தனதுவிளக்குவித்துத் தன்னைத்தவிர வேறில்லாதவறிவைக்கொண்டு மோக்ஷபதவியை அருளிச்செய்கின்றனன்.

மேலும் ஈசனது திருவருளால் மோக்ஷபதவியை அடைந்த பிரமநிஷ்டர்கள், தங்கள்பார்வையால் மற்றொரு சீவனுக்கு சிரவணாதிஉதவியின்றி மோக்ஷபதவியை அருளிச்செய்யலாமாயின், சருவவல்லமையுடைய அக்கீசன், சிரவணாதிஉதவியின்றி சீவர்களுக்குக் காசிமரணத்தில் மோக்ஷபதவியை என அருளிச்செய்யத்தகானா.

ஆனால் விருக்ஷாதிகளுக்கு ஞானமில்லாததினால் தன்னைத்தானறியும்படி அவைகளுக்கு எவ்விதமாய்ப் பிரகாசிப்பிக்கக்கூடுமென்னில்? பிரமநிஷ்டர்கள் தங்கள்சொப்பனத்தில்விளங்கிய விருக்ஷாதிகளைக் கண்டு, தங்களால் அவ்விதவிருக்ஷங்களாய்விளங்கிய உபாதி

யில் பிரதிபிம்பிக்க சிதாபாசனைக், கூடஸ்தன்மாத்திர மாகச்செய்து, கூடஸ்தனை தானாகச் சாதனபெலத் தால் விளங்கவிக்கலாமாயின், ஈசனது சத்தியசங்கற் பத்தாற் றோன்றிய விராட் சிதாபாசனிலுள்ளடங்கிய விருக்ஷாதி சிதாபாசனை, அதிஷ்டானமானதானாக என் அருளிச்செய்யத்தகாதோ. ஈசனதுகருணையாற் சித்தி யாதொன்றுண்டோ! ஆகையால் காசிமரணத்தில் வி ருக்ஷ முதல் சகலபிராணிகளும் சுருதிகளின்பயம்பிர காரம் முக்தர்களாகவே சித்திக்கின்றார்கள். சுருதியுக் தி அநுபவம் இம்மூன்றுக்கும் மோக்ஷபதவியின்பொ ருட்டு ஞானம் எப்படி ஒப்பபட்டதோ, அப்படியே இதுவும் ஒப்பப்பட்டேயிருக்கின்றது: அப்படியே சூ தசங்கிதையில் தேவதேவனையும் மஹாநந்தனையும் மஹாகாருண்ணியனையும் உள்ள ஈசன் அருளிச்செய் திடில் கீடமுதல் அவனதுபிரசாதத்துக்குப் பாத்திரப் பட்ட எந்தஜெந்துவும் மோக்ஷபதவியையடைந்திருக் கின்றதென்று பரமசிவத்தின் மகிமைகூறப்பட்டிருப்ப தாலும், சகலர்களுக்கும் இகபரசித்தியின்பொருட்டு சர்வாதிஷ்டானனை ஈசனது கருணையே உரித்தாயிரு க்கின்றது

முற்றிற்று

ஸ்ரீ சிவாய பரமகுருவே நம.

# பிரகரண அட்டவணை.


| நம்பர் | பிரகரணங்களின் பெயர் | பக்கம் |
|---|---|---|
| ௧ | பஞ்சகோசாநுபவம் | ௧ |
| ௨ | ஜகத்தைப் பூதப்பஞ்சப்பாகப் பிரித்தது | ௯ |
| ௩ | சடிந்திரியத்தைப் பருப்பாகப் பிரித்தது | ௧௯ |
| ௪ | சப்தாதிகுணைப்பருப்பாக பிரித்தது | ௨௪ |
| ௫ | கிரியாசக்திப் பருப்பாகப் பிரித்தது | ௩0 |
| ௬ | இதம்விருத்தியாகப் பிரித்தது | ௩௨ |
| ௭ | நாமரூபப்பங்களாகப் பிரித்தது | ௩௪ |
| ௮ | இந்திரியாதிகளின் சூக்ஷ்மரூபம் | ௩௯ |
| ௯ | தர்மதர்மிமுதலிய குணங்கள் | ௪௧ |
| ௧0 | பூர்ண்டவிருத்திசோதனம் | ௫௫ |
| ௧௧ | சரீராதிநிந்தாநிஷேதனம் | ௫௭ |
| ௧௨ | நாமார்த்தவைபவம் | ௭௧ |
| ௧௩ | பஞ்சவக்த்ர விளக்கம் | ௮௪ |
| ௧௪ | க்ரியாரூபாநுபவம் | ௯௧ |
| ௧௫ | விபூதிமகிமை | ௯௩ |
| ௧௬ | ருத்திராக்ஷமகிமை | ௧0௫ |
| ௧௭ | பஞ்சாக்ஷரமகிமை | ௧௧௨ |
| ௧௮ | சிவலிங்கமகிமை | ௧௨0 |
| ௧௯ | சாதீசங்கமகிமை | ௧௨௭ |
| ௨0 | குருப்தேசமகிமை | ௧௩0 |
| ௨௧ | பரமசிவப்பிரசாதமகிமை | ௧௩௫ |
| ௨௨ | அவிமுக்தஸ்தலமகிமை | ௧௩௯ |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| உ | எ | கிஷேதிக்கில் | நிஷேதிக்கில் |
| அ | அ | இண்ரடவஸ்தை | இரண்டவஸ்தை |
| கக | கக | ஏவ்விடங்களில் | எவ்விடங்களில் |
| கஉ | உக | வேளி | வெளி |
| கரு | கூ | தொற்றிடில் | தோற்றிடில் |
| கஎ | உரு | காரணம்ய | காரணம்பா |
| உஎ | உரு | அபவ | அபாவ |
| உஅ | உரு | ஞர்னம் | ஞானம் |
| ருய | கரு | ஜீவகள் | ஜீவர்கள் |
| சக | உரு | அவ்வநுபூதியே | அவ்வநுபூதி |
| சஎ | கஅ | கங்கையில்ல | கங்கையில் |
| எரு | க | விளங்கிய் | விளங்கிய |
| எகூ | உஉ | ஜகத்தையும் | ஜகத்தையும் |
| எஎ | உய | விளங்கிய் | விளங்கிய |
| கூரு | உ௰ | ஜசுவரியம் | ஐசுவரியம் |
| கூ | உ | கிசம்மாங் | மாங்கிசம் |
| ௯ | உஉ | பிசா | பிரசாத |
| ௯ரு | ரு | சம்சரா | சம்சார |
| ௯ரு | கக | எவவ்ணண | எவ்வண்ண |
| ௯எ | கரு | சச்சித | சச்சிதா |
| ௯க | கரு | பதிெனாரு | திெனாரு |
| ௯ய | கக | சமங்களில | மயங்களின் |

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ௧௦௫ | [illegible]௩ | திருபதளுக | திருப்தளுட |
| ௧௨௦ | ௩ | சகத்தி | சக்தி |
| ௧௨௦ | ௨௦ | மேல | மேலே |
| ௧௨௧ | ௧௮ | எதற்கு | எதற்கு |
| ௧௨௫ | ௧௧ | முக்கலத்திலும் | முக்காலத்திலும் |
| ௧௨௫ | ௧௯ | ஸ்வதபேத | ஸ்வகதபேத |
| [illegible]௬ | [illegible] | ரூபகளென | ரூபங்களென |
| [illegible]௭ | ௮ | ப்தகாமளுயுள்ள | ஆப்தகாமளுயும் |
| ௧௨௮ | ௦ | பெக்ஷை | அபேக்ஷை |
| ௧௨௯ | ௦ | ட்டை | வீட்டை |
| ௧௩௨ | ௬ | மனப்படும் | மௌனப்படும் |
| ௧௩௨ | [illegible]௧ | மேதேனில் | மேதெனில் |
| ௧௩௬ | ௨ | எழை | ஏழை |
| ௧௩௮ | ௧௧ | அவற்றிற்குக் | அவறறிற்குச் |
| ௧௪௦ | ௧௬ | என் | ஏன் |

௩-ம் பக்கம்-௨-ம் வரியில் ப்ரச்சுரம் என்ற பதத்தை த்தள்ளியும், ௧௩௩-ம் பக்கம்-௯-ம் வரிமுதல் வருகிற சாக்ஷி த்வைக்ஷ்யம் என்னும் பதத்தை சா[illegible]க்ஷிநிரபேக்ஷ என்று கூட்டியும் வாசிக்கவும்.

---

இனிப்பதிப்பிக்கப்படும் புத்தகங்களாவன:

பரமகீதை மூலமும் உரையும்

பிரம.தோவசனம்

கிரந்தத்தில் வியாக்கியானத்துடன் ஸூதசம்ஹிதை